# உதயன்

Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 016 வள்ளுவர் ஆண்டு: 2045 கார்த்திகை 26, வெள்ளிக்கிழமை 12.12.2014


காலநிலை
மழை பெய்வதற்கான சாத்தியம் அதிகம். மாலை வேளை மழை பெய்யக் கூடும்.

## தரகர்களால் பெரும் நட்டம்: விவசாயிகள் விசனம்

பல இடர்களுக்கு மத்தியில் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் நாம், எமது உற்பத்திப் பொருள்களைச் சந்தைப் படுத்தும்போதும் தரகர்களால் பெரும் நட்டத்தை எதிர்கொள்கின்றோம். தரகர்களின் தொல்லையை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர் விவசாயிகள்.

பக்.04

## ஆக்கிரமிப்புக்கு துணைபோகும் வர்த்தமானி

அரசமைப்புக்கு முரணாக இராணுவ ஆக்கிரமிப்புக்குத் துணை போகும் வர்த்தமானிப் பிரசுரத்தை நீக்க வேண்டும் என்று வடக்கு மாகாண சபையில் நேற்று பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

பக்.02

## கண்காட்சி நீடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.12
யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றுவரும் நகர திட்டமிடல் கண்காட்சி

பக்.30

## கைதான மீனவரை உடன் விடுவித்த கடற்படை!

இலங்கைக் கடற்பரப்பில் எல்லைதாண்டி மீன்பிடித்தமைக்காக எம்மைக் கைது செய்த இலங்கைக் கடற்படை, உடனடியாக விடுவித்தது என்று கூறுகின்றனர் இராமநாதபுரம் மீனவர்கள். ஆயினும் அப்படி ஒரு சம்பவமே நடக்கவில்லை என்றுதெரிவிக்கின்றது இலங்கைக் கடற்படை.

பக்.24

# சுன்னாகத்தில் 150 கிணறுகள் ஒயிலால் நாசம்

## 109 கிணறுகள் முற்றாகப் பயன்படுத்தமுடியாத நிலையில்

யாழ்ப்பாணம், டிசெ 12
சுன்னாகத்தில் உள்ள மின் உற்பத்திநிலையங்களைச்சூழவுள்ள பகுதிகளில் காணப்படும் 150 கிணறுகள், 2012ஆம் ஆண்டில் இருந்து இந்த ஆண்டு ஓகஸ்ட் 13ஆம் திகதி வரையான காலப் பகுதியில் பல தடவைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அந்தப் பரிசோதனைகளின் ஆய்வறிக்கையின் படி, 143 கிணறுகளில் கழிவு ஒயில் கலந்திருப்பதும், 73 சதவீதமான அதாவது, 109 கிணறுகளில் உள்ள நீரில் முற்றாகப் பயன்படுத்த முடியாதவாறு ஒயில் கலந்துள்ளது என்றும் அறியப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.
சுன்னாகத்தில் காணப்படும் மின் உற்பத்திநிலையங்களில்இருந்து வெளியேற்றப்படும் கழிவு ஒயிலால் அந்தப் பகுதி நிலத்தடி நீர் மாசடைந்துள்ளது என்று கூறப்படுகின்றது. சுன்னாகம் மின்நிலையச் சுற்றுவட்டத்தில் இருந்து வடக்கு நோக்கியதாக 1.5 கிலோமீற்றர் தொடக்கம் 2 கிலோமீற்றர் வரையிலும் தெற்கு நோக்கியதாகக் குறைந்தது 1.5 கிலோ மீற்றர் தூரத்துக்கும் கழிவு ஒயில் பரவியுள்ளது என்று கூறப்படுகின்றது. அது விவகாரம் தொடர்பில் தற்போது நீதிமன்றில் வழக்குகளும் நடைபெற்று வருகின்றன.

பக்.29

# கையில் கறை இல்லை

## முதலாவது பரப்புரைக் கூட்டத்தில் மஹிந்த ராஜபக்ஷ சத்தியம்





யாழ்ப்பாணம், டிசெம்பர் 12
எனது கையில் எந்த இரத்தக் கறையும் இல்லை. அப்படி இரத்தக் கறை கையில் படிந்திருந்தால், எனது கையை வெட்டி வீசியிருப்பேன். எங்கள் படையினர் எந்தவொரு பொதுமகனையும் கொலை செய்யவில்லை. – இவ்வாறு தனது முதலாவது பரப்புரைக் கூட்டத்தில் தெரிவித்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

பக்.29

# இடர் நிவாரண நிதியம் உடனடியாக வேண்டும்

## வடமாகாண சபை உறுப்பினர்கள் நேற்றுக் கூட்டாக வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், டிசெ. 12
உடனடியாக வடக்கு மாகாண இடர் நிவாரண நிதியத்தை உருவாக்கவேண்டும் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் நேற்று வலியுறுத்தினர்.
பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன எவ்வாறு, சிறுநீரக நோயாளிகளுக்கு உதவுவதற்காக ஒரு நிதியத்தை தனிப்பட்ட ரீதியில் உருவாக்கினாரோ அதேபோன்று நாங்களும் உருவாக்கவேண்டும் என்று அவர்கள் அழுத்தமாகக் கூறினர்.
வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில், ஆளுங்கட்சி உறுப்பினர் தியாகராசாவினால் கொண்டு வரப்பட்ட முன்மொழிவின் மீது உரையாற்றுகையிலேயே உறுப்பினர்கள் இவ்வாறு வலியுறுத்தினர்.
வவுனியா மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள இடரின்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு வடக்கு மாகாண சபை உதவி செய்யவில்லை என்ற குற்றச்சாட்டை தியாகராசா முன்வைத்தார்.
இதன்போது உரையாற்றிய ஆளுங்கட்சியின் பல உறுப்பினர்கள், கொழும்பு அரசு உதவி செய்யும் என்று பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எமது மக்கள் வடக்கு அரசிடமிருந்து உதவிகளை எதிர்பார்க்கின்றனர்.

பக்.29

## பொது எதிரணி தேர்தல் அறிக்கையில் தமிழருக்கான தீர்வில்லை

பக்.27

# ஒரு கோப்பை தேநீரில் ரணிலையும் வளைப்போம்

## மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 12
ஒரு கோப்பை தேநீர் போதும். எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் அரசு பக்கம் தாவச் செய்யலாம் என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

பக்.30

# தூக்கு விதிக்கப்பட்ட மீனவரை விடுவிக்குக

## வடக்கு மாகாண சபை ஜனாதிபதியிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 12
தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட இந்திய மீனவர்களை பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்தது போன்று, அவர்களுடன் தண்டனை விதிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூன்று மீனவர்களையும் விடுதலை செய்ய வேண்டும் என்று வடக்கு மாகாண சபை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பக்.29



# ஹெல உறுமயவை உடைத்தார் மஹிந்த

## மீண்டும் அரசு பக்கம் தாவினார் உதய கம்மன்பில

கொழும்பு, டிசெ. 12
ஆளும் கட்சியிலிருந்துவிலகி பொது எதிரணியுடன் இணைந்திருந்த ஹெல உறுமயவின் மேல் மாகாண சபைஉறுப்பினர்உதய கம்மன்பில, மீளவும் நேற்று

பக்.30

சீனி லொறியை கடத்துவதற்காக

# கொல்லப்பட்ட தமிழ் இளைஞரின் தலை இல்லை

## டி.என்.ஏ. பரிசோதனைக்காக உடல் கொழும்புக்கு

யாழ்ப்பாணம், டிசெ.12
கொழும்பில் இருந்து லொறியில் கொண்டுவரப்பட்ட சீனி மூடைகளைக் கடத்துவதற்காக, கொலை செய்யப்பட்ட தமிழ் இளைஞரின் உடல் மீட்கப்பட்டபோதும், தலையைக் காணவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். உடல் தனது மகனுடையது என்று தாய் அடையாளம் காட்டியுள்ளபோதும், தற்போது உடல் டி.என்.ஏ. பரிசோதனைக்காகக் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

பக்.30

# நெல்சிப் திட்ட ஊழல் விசாரணை ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 12
நெல்சிப் திட்டத்தில் இடம்பெற்றதாகச் சொல்லப்படும் ஊழல் தொடர்பில் கடந்த இரண்டு தினங்களாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. கொழும்பு அரசின் அதிகாரி ஒருவர் இங்கு வந்து விசாரணையை முன்னெடுத்து வருகின்றார். வடக்குமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் சபையில் நேற்று இவ்வாறு தெரிவித்தார்.
நெல்சிப் ஊழல் தொடர்பிலான பிரேரணை ஆளுங்கட்சி உறுப்பினர் க.சர்வேஸ்வரனினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதில், நெல்சிப் திட்டத்துக்கு உலக வங்கியினால் நிதி வழங்கப்படுகின்றது. இருப்பினும் மாகாண உள்ளூராட்சி அமைச்சே திட்டங்களைச் செயற்படுத்துகின்றது. எனவே இந்த விடயத்தில் மாகாண உள்ளூராட்சி அமைச்சும் பங்குதாரர். இந்த ஊழல் தொடர்பில் மக்களுக்குப் பதில் சொல்லும் கடப்பாடும், உள்ளூராட்சி அமைச்சை ஊழலற்ற நிர்வாக

பக்.30

# செய்திகள்

# இராணுவ ஆக்கிரமிப்புக்கு துணைபோகும் வர்த்தமானி

## உடன் நீக்குமாறு வடமாகாண சபையில் நேற்றுப் பிரேரணை

யாழ்ப்பாணம், டிசெ. 12

அரசமைப்புக்கு முரணாக, இராணுவ ஆக்கிரமிக்கும் துணைபோகும் வர்த்தமானி பிரசுரத்தை நீக்கவேண்டும் என்று வடக்கு மாகாண சபையில் ஏகமனதாக நேற்றுப் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

'அரசமைப்புக்கு முரணாக இராணுவத்தின் காணி ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு துணைபோன மத்திய அரசின் 1882/6 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலை நீக்கக் கோர வேண்டும்' என்று வடக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் எஸ்.சிவமோகன் பிரேரணையைச் சமர்ப்பித்தார்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு மக்களைத் தற்காலிகமாக இடம்பெயரச் செய்து வவுனியா செட்டிகுளத்தில் அடைத்து விட்டு, இராணுவம் தன்னிச்சையாக மக்களின் பூர்வீகக் காணிகளைக் கபளீகரம் செய்தது. மக்கள் குடியமர்ந்தபோதும், பொதுமக்களுக்குச் சொந்தமான புதுக்குடியிருப்பு கிழக்கு கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட 3.13 ஹெக்டேயர் காணி இராணுவத்தின் ஆயுதமுனைக் கட்டுப்பாட்டில் எவரும் செல்லாத வகையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேபோல் மேலும் பல காணிகள் விசுவமடு, தொட்டியடி, சுதந்திரபுரம், கிளிநொச்சிக் காடு ஆகிய பிரதேசங்களிலும் அபகரிக்கப்பட்டுள்ளன.

எனவே 30.09.2014 திகதியிடப்பட்ட 1882/6 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலை, அரசமைப்புக்கு முரணான காணி அபகரிப்பு நடவடிக்கை என்று பின்வரும் காரணங்களால் மேற்கோள் காட்டி இந்தச் சபை, மத்திய அரசை நீக்கக் கோருகின்றது.

ஆயுதமுனையில் இராணுவத்தினர் அத்துமீறி மக்களின் காணிகளுக்குள் மக்கள் இல்லாத நேரம் புகுந்து கொண்டமை ஜனநாயகமற்ற அடாவடிச் செயல், காணி அபகரிப்புக்கு என்று ஒரு அதிகாரியை நியமித்து மக்கள் கருத்து அறியாது எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கை ஏற்றுக் கொள்ளக் கூடியதில்லை. மக்கள் நேரடியாக ஒரு தடவை பெரியதொரு ஆர்ப்பாட்டம் நடத்தி பிரதேச செயலாளருக்கும், ஜனாதிபதிக்கும் மனுக் கையளித்த பின்னரும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது தவறானது. காணி அபகரிப்புக்கு முன் வடக்கு மாகாண சபை காணி அமைச்சர் என்ற முறையில் வட மாகாண சபை முதலமைச்சரின் விதப்புரை பெற்றிருக்கப்பட வேண்டும். ஆனால் இந்த விடயத்தில் அது கடைப்பிடிக்கப் படவில்லை.

ப 1 விரிவு

மேலும் காணி உத்தியோகத்தரோ, பிரதேச செயலாளரோ, காணி ஆணையாளரோ வடக்கு மாகாண சபை பரிந்துரை செய்து தெரிவிக்காது நேரடியாகச் செயற்பட்டிருந்தால், அரசமைப்புக்கு முரணானதாகையால் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க ஏதுவாக காணி அமைச்சை ஒரு நேரடி விசாரணை செய்து தெரியப்படுத்துமாறு கோரும் தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போது பதிலளித்த முதலமைச்சர், விசாரணை அறிக்கையை சமர்ப்பிப்பதாகத் தெரிவித்தார். இந்த விடயத்தில் சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதாகச் சொல்வதில் உடனடியான பயன் கிடைக்குமா என்று தெரியவில்லை. இதில் அரசியல் ரீதியான நடவடிக்கையே தேவை – என்றார்.

(த–5)

# ஊடக சுதந்திரத்தை காக்க 'உதயன்' முயன்றால் தடை

### மாகாண சபையில் கோரினார் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா



யாழ்ப்பாணம், டிசெ. 12

பத்திரிகைச் சுதந்திரத்தை 'உதயன்' நிலை நிறுத்த முயன்றால் வடக்கு மாகாண சபை தொடர்பான செய்தி சேகரிப்புக்கு உதயனுக்குத்தடைவிதிக்க வேண்டும். இவ்வாறு வடக்குமாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பியின் உறுப்பினருமான சி.தவராசா சபையில் நேற்றுத் தெரிவித்தார்.

'உதயன்' பத்திரிகை வெளியிட்ட செய்தி தொடர்பில் தனது சிறப்புரிமை மீறப்பட்டதாகத் தெரிவித்து, 'உதயன்' மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பி உறுப்பினருமான சி.தவராசா உதயன் பத்திரிகைச் செய்தி தொடர்பில் தனது சிறப்புரிமை மீறல் விடயத்தைத் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் 19 ஆவது அமர்வு கடந்த நவம்பர் மாதம் 19 ஆம் திகதி இடம்பெற்றது. மறுநாள் 20 ஆம் திகதி உதயன் பத்திரிகை தலைப்புச் செய்தி வெளியிட்டது. 'ஐஸ்கிறீமில் அரசியல் விசாரணை வேண்டும்' என்ற தலைப்பிலான செய்தியின் உள்ளே, அதிகாரிகள் விளக்கத்தில், தவராசா தெரிவித்ததைப் பொய் என்று அதிகாரிகள் மறுத்துள்ளதாகச் செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது.

மாகாண சபை உறுப்பினர் ஒருவர் மாகாண சபையினுள் கதைப்பதை அதிகாரி ஒருவர் விமர்சனத்துக்கு உட்படுத்தமுடியாது. ஏன் நீதிமன்றம் கூட அதனை விமர்சனத்துக்கு உட்படுத்த முடியாது. இவ்வாறிருக்கையில் அதிகாரி ஒருவர் மறுத்திருப்பது, சபை நடவடிக்கை ஒழுங்கு விதிகளின் 36 ஆவது பிரிவின் 3 ஆவது உபபிரிவின் கீழ் சிறப்புரிமை மீறலாகும்.

எனவே குறித்த அதிகாரி மாகாண சபை நடவடிக்கைக் குழுவினால் விசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டும். இந்தச் செய்தியில் குறித்த அதிகாரி யார் என்பதை வெளிப்படுத்தவில்லை. எனவே பத்திரிகையின் ஆசிரியரை, சபை நடவடிக்கைக் குழு முன்பாகக் கூப்பிட்டு விசாரணை நடத்தி அந்த அதிகாரி யார் என்பதை அறியவேண்டும்.

இதன்போது பத்திரிகைச் சுதந்திரத்தைக் காரணம் காட்டி அந்த அதிகாரியின் பெயரைப் பத்திரிகை ஆசிரியர் வெளிப்படுத்தத் தவறினால் வடக்குமாகாணசபை தொடர்பான செய்தி சேகரிப்புக்கு குறித்த நிறுவன ஊடகவியலாளர்கள் வராமல் தடை விதிக்க வேண்டும். இதை நான் எதிர்க்கட்சித் தலைவராகச் சொல்லவில்லை. இங்குள்ள ஆளுங்கட்சி உறுப்பினர்களும் இதற்கு ஆதரவு வழங்கவேண்டும். நாளைக்கு உங்களுக்கும் இது நடக்கலாம் – என்றார்.

இதன்போது வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனி ஜெகநாதன் மாத்திரம், ஆதரவாகக் கருத்துத் தெரிவித்தார். இந்த விடயத்தைசங சபை நடவடிக்கைக் குழுவுக்குப் பாரப்படுத்துவதாக அவைத் தலைவர் தெரிவித்தார். (த–5)

# அமைச்சரவைத் தீர்மானங்கள் 2015 முதல் உறுப்பினர்களுக்கு

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 12


வடக்கு அமைச்சரவையின் தீர்மானங்கள் அடுத்த வருடத்திலிருந்து சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும். அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

–இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் நேற்றுத் தெரிவித்தார்.

வடக்கு மாகாண அமைச்சரவை விவரங்கள் உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். அது தொடர்பில் சபைக்கு அறிவிக்கப்பட வேண்டும்–இவ்வாறு பல தடவைகள் உறுப்பினர்களால் கோரிக்கை விடப்பட்டிருந்தது. இந்த விடயம் நேற்றைய அமர்விலும் சுட்டிக் காட்டப்பட்டது.

இதன்போது முதலமைச்சர் பதிலளித்தார்.

இதுவரையில் எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்கள், உங்களுக்கு ஆங்கிலத்தில் வழங்கப்படும். அதனை மொழிபெயர்ப்புச் செய்யும் வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இருப்பினும் அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் அமைச்சரவைத் தீர்மானம் வழங்கப்படும்.



அதனைத் தொடர்ந்து தொடர்ச்சியாக அமைச்சரவைத் தீர்மானங்கள் அவைத்தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அவைத் தலைவர் ஊடாக உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(த–5)

## செங்கோல் எறிந்தமைக்கு மன்னிப்புக் கோரமாட்டேன்





பக்.23

## ஜனாதிபதியின் வருகைக்கு மாகாணக் கல்வியமைச்சின் 88 இலட்சம் ரூபா செலவு



பக்.21

# ஜனரஞ்சகம்



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** உடல் ஆரோக்கியம் ஏற்படும். எதிர்ப்பாலினத்தாரால் இலாபம் கிடைக்கக் கூடும். மற்றவர்களுக்கு உதவிகள் செய்ய நேரிடும். பணவரத்து கூடும். வீண் அலைச்சல் திடீர் கோபம் உண்டாகலாம்.

**இடபம்:** மதிப்பும், அந்தஸ்தும் உயரும். நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்தவை நல்லபடியாக முடியும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சில விடயங்களை தவறாகப் புரிந்து கொண்டு சங்கடப்பட வேண்டி இருக்கும்.

**மிதுனம்:** வாக்குவன்மையால் நன்மை ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். மற்றவர்களுக்கு உதவி செய்வதால் வீண் அலைச்சல் உண்டாகலாம். காரிய வெற்றி பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும்.

**கடகம்:** உங்களின் சாமர்த்தியமான செயல்களால் மற்றவர் மனதில் இடம் பிடிப்பீர்கள். உங்கள் வேலைகளில் மட்டும் கவனம் செலுத்துவது நன்மையைத் தரும். எதிலும் மிகவும் கவனமாக ஈடுபடுவது நன்மை தரும்.

**சிங்கம்:** மனதில் துணிச்சல் உண்டாகும். அதனால் எதை பற்றியும் முன்பின் யோசிக்காமல் செயல்களில் இறங்கிவிடுவீர்கள். தேவையற்ற இடமாற்றம் உண்டாகலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எந்தவொரு வேலையையும் செய்து முடிப்பதில் வேகம் காட்டுவார்கள்.

**கன்னி:** உறவினர்கள் வருகை இருக்கும் அதே நேரத்தில் அவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது. கணவன், மனைவிக்கிடையே மனம் விட்டு பேசுவதன் மூலம் கருத்து வேற்றுமை வருவதைத் தவிர்க்கலாம்.

**துலாம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். மனதில் தைரியம் உண்டாகும். பணவரத்து கூடும். வாழ்க்கை துணையின் உடல்நலத்தில் கவனம் தேவை.


**விருச்சிகம்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் எந்த வேலையை செய்யும் முன்பும் அதுபற்றி அதிகம் யோசிப்பார்கள். சிலருக்கு புதிய வேலையும் கிடைக்கலாம்.

**தனுசு:** எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நன்மை தரும். வீண் மனக்குழப்பம் ஏற்பட்டு நீங்கும். மற்றவர்களுக்கு உதவப்போய் வீண் பிரச்சினையில் சிக்கி கொள்ளலாம். கவனமாக இருப்பது நல்லது.

**மகரம்:** திடீர் கோபம் ஏற்படும். தேவையற்ற வீண் செலவுகளும் உண்டாகும். ஆன்மிக எண்ணம் ஏற்படும். விருப்பமான நபரை சந்திப்பதன் மூலம் மனதுக்கு மகிழ்ச்சி ஏற்படலாம்.

**கும்பம்:** உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் பணிச்சுமையும், வீண் அலைச்சலும் உண்டாகும். கவனமாக வேலைகளை செய்யாவிட்டால் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாக நேரிடலாம்.

**மீனம்:** உங்கள் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்படும். சுப காரிய விடயமாக வெளியூர் செல்ல நேரிடலாம். உங்களுக்கு சம்பந்தமில்லாத பிரச்சினைகளில் தலையிடுவதும் கருத்துச் சொல்வதையும் தவிர்த்தல் நலம்.



## ஓட்டம் பிடிக்கும் தமன்னா



தமன்னாவுக்கு என்ன பயமோ கன்னடப் படங்கள் என்றாலே தலைதெறிக்க ஓட்டம் பிடிக்கிறார்.

புனித் ராஜ்குமார் நடிக்கும் படத்தில் தமன்னாவை ஒப்பந்தம் செய்ய முடிவு செய்து அவரை அணுகினார்கள். புதிய படம் என்றதும் கதை கேட்க ஒப்புக்கொண்டார். ஆனால் கன்னடப் படம் என்று தெரிந்ததும் 'இப்போது நேரம் இல்லை' என்று நழுவி விட்டார்.

இப்படி நழுவுவது இது முதல் முறை அல்ல. ஏற்கனவே நிறைய முறை கன்னடத்தில் நடிக்க வாய்ப்பு வந்தும் அதை ஏற்க மறுத்திருக்கிறார். மற்ற மொழி படங்களில் நடித்து வருவதால் கன்னடத்தில் நடிக்க முடியவில்லை என்று அவரது தரப்பில் காரணம் சொல்லப்பட்டாலும், அங்கு அவருக்கு வழங்கப்படும் சம்பளம் கட்டுப்படியாகாது என்பதாலேயே தமன்னா நழுவி விடுவதாகக் கூறப்படுகிறது.

## 1242 கோடி சம்பாதித்த பூனை



அமெரிக்காவில் உள்ள பூனை ஒன்று ஹொலிவூட் நடிகர்களை விட அதிகம் சம்பளம் வாங்குகிறது. அமெரிக்காவின் அரிசோனா மாநிலத்தைச் சேர்ந்த ஒருவர், வளர்ச்சி குறைபாடுள்ள பூனை ஒன்றை வளர்த்து வருகிறார்.

அந்த பூனையின் சேட்டையை வீடியோ எடுத்து கடந்த 2012 ஆம் ஆண்டு யூடியூப்பில் வெளியிட்டார். அதன்மூலம் அந்தப் பூனை பிரபலமாகிவிட்டது.

கடந்த 2 ஆண்டுகளில் அந்தப் பூனை 100 மில்லியன் அமெரிக்க டொலர்(இலங்கை ரூபா மதிப்பில் சுமார் 1242 கோடி) சம்பாதித்துள்ளது.

ஹொலிவூட் நடிகர், நடிகைகளை விட இந்த பூனை அதிகம் சம்பாதித்துள்ளது. மேலும் பிரபல கால்பந்து வீரர் கிறிஸ்டியானா ரொனால்டோவின் இந்த ஆண்டு வருமானம் 27.1 மில்லியன் டொலர், ஆனால் இந்தப் பூனையின் வருமானம் அதை விட அதிகமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பேட்டரியை கண்டு பிடிச்சது வெள்ளைக்காரனாய் இருக்கலாம். ஆனா நாக்குல வைச்சி சார்ஜ் இருக்குதான்னு கண்டுபிடிச்சவன் என் தமிழன்டா...

## கொஞ்சம் சிரியுங்க பாஸ்

தலைவரே தொண்டர்கள் கூட்டமா இருக்கிற போது, ஓட்டோகிராப் போட வேண்டாம் என்று சொன்னேன் கேட்டீங்களா ?
ஏன் இப்ப என்னாச்சு ?
கூட்டத்தோடு கூட்டமா எவனோ ஒருத்தன் உங்க செக் புத்தகத்தில் கையெழுத்து வாங்கிட்டான்.

ஆசிரியர்: யார் அடுத்த கேள்விக்கு பதில் சொல்றாங்களோ அவங்க வீட்டுக்குப் போயிடலாம். (உடனே ஒரு மாணவன் அவன் பாடசாலைப் பையைத் தூக்கி வெளியே போட்டான்)

ஆசிரியர் (கோபமாக) : எவன்டா பாடசாலை பையை இப்பவே தூக்கி வெளியே போட்டது- என்றார்.

மாணவன் : நான் தான் அது. பதில் சொல்லிட்டேன் என்று சொல்லி விட்டு கிளம்பிட்டான்....





# செய்திகள்

## தரகர்களால் பெரும் நட்டம்

### விவசாயிகள் கடும் விசனம்

பக்கம் 1 விரிவு

சங்கானை, டிசெ.12

எத்தனையோ இடர்களுக்கு உட்பட்டுப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றோம். ஆயினும் எமது உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்தும்போது தரகர்களினால் பெரும் நட்டத்தை எதிர்கொள்கின்றோம் என விவசாயிகள்விசனம்வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாகக்கீரை கொண்டுவரும் விவசாயி100 பிடிகீரை கொண்டு வந்தால் ஒரு பிடியை ரூபா 10 அல்லது 15 இற்கு தரகர்கள் மூலம் விற்பனை செய்ய வேண்டிய நிலை உள்ளது. ஆனால் கீரை வியாபாரிகளோ ஒரு பிடி கீரையை அதன் இரு மடங்குகளில் விற்பனை செய்து வருகின்றனர். உதாரணத்துக்கு 10 ரூபா வீதம் 100 பிடி கீரையை 1000 ரூபாவுக்கு விற்கிறார் விவசாயி. அதனை வாங்கும் வியாபாரி 20 ரூபாவுக்கு விற்று ரூபா 1000 இலாபம் ஈட்டுகின்றார். கஷ்டப்பட்ட விவசாயியும், கஷ்டப்படாத வியாபாரியும் அதேயளவு இலாபத்தைப் பெறுகின்றனர். கீரைக்கு இப்படி என்றால், கிழங்கு, கத்தரிக்காய், வெங்காயம் போன்றவையும் தூக்குத் தராசில் நிறுக்கப்பட்டுக் கழிவு இவ்வளவு என்று கூறித் தரகர்களினால் வியாபாரிகளுக்கு விலை கூறப்படுகின்றன. அவர்கள் அத்துடன் நின்றுவிடாமல் விவசாயிடமும், வியாபாரியிடமும் தமக்கான தரகுப் பணத்தையும் பெறுகிறார்கள். மேலும் கீரை, கத்தரிக்காய் , கிழங்கு மற்றும் விளைபொருள்களையும் தமது அன்றாடத் தேவைக்காக விவசாயியிடம் இருந்து இலவசமாக எடுக்கின்றனர்.

சங்கானை மரக்கறிச் சந்தையில் தரகுத் தொழிலில் ஈடுபட முடியாது என வலி.மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் பத்திரிகை மூலம் அறிவித்தல் விட்டிருந்தார். ஆனால் இந்தத் தரகர் தொல்லையை நிறுத்துவதற்கு இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர். (த-29)



யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள தனியார் பஸ் நிலையத்துக்கு அருகாமையில் இராணுவத்தினரால் நத்தார் விழாவுக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மிக உயரமான கிறிஸ்மஸ் மரம் ஒன்றும் அங்கு அமைக்கப்பட்டு வருகின்றது. (த-20)

## கழிவு ஒயிலினால் பாதிப்புற்றோர் மனு

### ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பு

வலி.வடக்கு, டிசெ. 12

சுன்னாகம் மின்சார நிலையத்தில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு ஒயிலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் பெற்றுத் தரவேண்டும் என்ற கோரிக்கை அடங்கிய மனு ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள ஜனாதிபதியின் இந்து விவகாரங்களுக்கான ஆலோசகர் பாபுசர்மா மூலம் இந்த கோரிக்கை அடங்கிய மனு ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் பாபுசர்மாவுக்கும் சுன்னாகத்தில் கழுவு ஒயிலால் கிணறுகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன் தினம் புதன்கிழமை இரவு இடம் பெற்றது. இதன்போது குறிப்பிட்ட மனு கையளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதியின் நேரடிக் கவனத்துக்குக் கொண்டு வந்து உடனடியாகக் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக பாபுசர்மா தெரிவித்துள்ளார். (த-86)

## மரக்கறிகளின் விலை உச்சம்

### வவுனியாவில் நாளுக்கு நாள்

வவுனியா, டிசெ. 12

வவுனியாவில் மரக்கறிகளின் விலைகள் நாளுக்கு நாள் உயர்வடைந்து செல்வதனால் நுகர்வோர் அதிருப்தியடைந்துள்ளனர்.

பாவற்காய் கிலோ 240 ரூபா முதல் 320 வரையும், கத்தரிக்காய் கிலோ 80 ரூபா முதல் 100 ரூபா வரையும், தக்காளிப் பழம் கிலோ 240 ரூபா முதல் 250 ரூபா வரையும், பயிற்றங்காய் கிலோ 150 ரூபா முதல் 170 ரூபா வரையும், பூசணிக்காய் கிலோ 70 ரூபா முதல் 80 ரூபா வரையும், போஞ்சிக்காய் கிலோ120ரூபாமுதல் 130 ரூபா வரையும், கரட் கிலோ 240 ரூபா முதல் 250 ரூபா வரையும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.



இந்துக்களின் நவராத்திரி காலம் முதல் மரக்கறிகளின் விலை அதி கரித்துச் செல்கின்றது. விரத காலத்தில் மரக்கறிகளின் விலை அதிகரித்துச் செல்வது வழமையாக இருப்பினும் இந்த ஆண்டுமரக்கறிகளின் விலைஉச்சத்தில்உள்ளமையால் வறிய மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். (த-402)

## விளையாட்டரங்கு, ஆரம்ப் பாடசாலை அமைக்க அடிக்கல்



மன்னார் சாந்திபுரம் விளையாட்டு மைதானத்துக்கான விளையாட்டு அரங்கு மற்றும் ஜீவபுரம் ஆரம்பப் பாடசாலை ஆகியவை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் புதன் கிழமை காலை இடம்பெற்றது.

கைத்தொழில் வர்த்தக வாணிப அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் குறித்த வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மன்னார் சாந்திபுரம் விளையாட்டு அரங்கு ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படவுள்ளது. அதேவேளை ஜீவபுரம் ஆரம்பப் பாடசாலை ஒருமில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படவுள்ளது.

வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தார்.(த-56)



## துரையப்பா அரங்கு சீரமைப்பை இந்தியப் பதில் தூதுவர் பார்வை

யாழ்ப்பாணம், டிசெ. 12

இந்திய அரசின் அனுசரணையுடன் நடைபெற்று வரும் துரையப்பா விளையாட்டு அரங்கின் புனரமைப்புப் பணிகளை இந்திய பதில் துணைத் தூதுவர் எஸ். டி.மூர்த்தி நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

இதன்போது பணியில் ஈடுபட்டிருந்தபொறியியலாளர்களையும் சந்தித்து முன்னெடுக்கப்படும் பணிகள் பற்றி அவர் கேட்டறிந்தார்.

145 மில்லியன் ரூபா செலவில் நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட இந்த புனரமைப்புப் பணிகள் எதிர்வரும் மே மாதமளவில் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பாக இரண்டு பார்வையாளர் அரங்குகள், சர்வதேச தரத்திலான 400 மீற்றர் நீளம் உள்ள தடகளப் பாதை, கழிப்பிட அறைகள், கழிவுநீர், மழைநீர் கால்வாய்கள், தானியங்கி நீர் தெளிப்பான்கள் ஆகியன இதன்போது அமைக்கப்படவுள்ளன.

கடந்த ஓகஸ்ட் மாதம் இந்த புனரமைப்புக்கான அடிக்கல் நடும் விழாவில் பொருளாதார அமைச்சர் பஷில் ராஜபக்ஷ மற்றும் இந்தியத் தூதுவர் வை.கே. சின்ஹா ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(த-10)

# கிளிநொச்சி - யாழ் ரயில் சேவையும் உடன் தேவை

## சமநேரத்தில் ஆரம்பிக்குமாறு அரச பணியாளர்கள் கோரிக்கை

கிளிநொச்சி, டிசெ.12

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த அரச பணியாளர்கள், மாணவர்களின் நலன் கருதி யாழ்.ரயில் நிலையத்திலிருந்து கிளிநொச்சி வரை ரயில் சேவை நடத்துவது போன்று கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து யாழ்.மாவட்டத்தில் உள்ள அலுவலகங்கள், பல்கலைக்கழகங்கள், வங்கிகள் போன்றவற்றுக்குச் செல்வோரின் நலன் கருதி கிளிநொச்சி ரயில் நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம் வரையான ரயில் சேவையை நடத்துமாறு கிளிநொச்சி மாவட்ட மக்கள் கோரியுள்ளனர்.



யாழ்.ரயில் நிலையத்திலிருந்து ரயில் புறப்படும் அதே நேரத்தில் கிளிநொச்சியில் இருந்தும் சேவையை ஆரம்பிக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை - யாழ்.ரயில் நிலையத்திலிருந்து மாலை 4.05 மணிக்குப் புறப்படும் சேவையை மாலை 4.30 மணிக்கு ஆரம்பிக்குமாறும், அதேபோன்று கிளிநொச்சியிலிருந்தும் சேவையில் ஈடுபடுத்துமாறும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. (த-9)



பாடசாலைகளில் தற்போது விடுமுறை விடப்பட்டுள்ளதால் மாணவர்கள் விடுமுறைக் கொண்டாட்டத்தை மகிழ்ச்சியாகக் கொண்டாடுகின்றார்கள். ஐந்துமாடி குடியிருப்புப் பகுதியில் பேணிப் பந்து விளையாட்டில் ஈடுபடும் சிறுவர்கள். (த-21)

## 3 பாடசாலைகளில் அதிபர் வெற்றிடம்

### இலங்கை ஆசிரியர் சங்கம் கவலை

அச்சுவேலி, டிசெ. 12

அதிபர்கள் இடமாற்றம் மற்றும் ஓய்வு பெறும்போது சுற்றறிக்கைக்கு அமைய அதிபர்களை நியமிக்கவேண்டும். இந்த விடயத்தில் வடக்கு மாகாண கல்வி நிர்வாகம் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம், கோண்டாவில் மகா வித்தியாலயம், சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைகளில் வெற்றிடமாக உள்ள அதிபர் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை என இங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்ராலின் கவலை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரின் கவனத்துக்கும் தெரியப்படுத்தியுள்ளார்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்ராலின் இது குறித்து தகவல் தெரிவிக்கையில்;

பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடமாகும்போது அதிபர்கள் நியமிக்க வேண்டிய நடைமுறை ஒழுங்கு விதிகள் மற்றும் அதற்கான கால அளவு என்பன கல்வி அமைச்சின் 1998/23 இலக்க சுற்றறிக்கையில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இந்த நடைமுறைகள் வடக்கு மாகாண கல்வி நிர்வாகத்தில் புறம் தள்ளப்படுகின்றன.

அதிபர்கள் ஓய்வுபெறுவது, இடமாற்றம் செய்யப்படுவது முன்கூட்டியே தெரிந்த விடயமாகும். யாழ்.கல்வி வலயத்தில் உள்ள சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம், கோண்டாவில் மகா வித்தியாலயம் மூன்றிலும் அதிபர் பதவி நிரப்பப்படாமல் உள்ளது - என்றார். (த-11)

## கஞ்சா சந்தேகநபருக்கு பிணை

சுமார் 15 கிலோ கஞ்சா போதைப் பொருளைத் தன் வசம் வைத்திருந்து வியாபாரம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் விளக்கமறியலில் இருந்தவர் யாழ். மேல் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

உடுத்துறை வடக்கு, தாளையடியைச் சேர்ந்த பு.மயூரன் என்பவரே பிணையில் விடுவிக்கப்பட்டார். கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 13 ஆம் திகதி குறித்த நபர் கைது செய்யப்பட்டார். அவரை விளக்கமறியலில்வைக்க நீதிமன்று உத்தரவிட்டிருந்தது.

அவரைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி யாழ்.மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது. அதனைப் பரிசீலித்த நீதிமன்று பிணை அனுமதி வழங்கியது. இதன்படி அவர் 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், 2 லட்சம் ரூபா பெறுமதியான 2 ஆள் பிணையிலும் விடுவிக் கப்பட்டதோடு மாத இறுதி ஞாயிற்றுக் கிழமையில் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிட வேண்டும் என்றும், வழக்கு முடிவடையும் வரை வெளிநாடு செல்லக் கூடாது என்றும் நிபந்தனை விதித்தது. (த-4)

## கமக்கார அமைப்புகளை ஜனவரிக்குள் புனரமையுங்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் இது வரை புனரமைப்பு செய்யப்படாத கமக்கார அமைப்புக்கள் யாவும் ஜனநாயக முறைப்படி எதிர்வரும் ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னதாகத் தெரிவு செய்யப்படும் என மாவட்ட கமநலஅபிவிருத்தி உதவிஆணையாளர் இ.தயாரூபன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 217 வரையான கமக்கார அமைப்புக்கள் உள்ளன. இதில் 60 வீதமான அமைப்புக்கள் மீள் புனரமைப்புச் செய்யப்படாமல் 15 முதல் 20 வருடங்களாக உள்ளன.

இவற்றை மீள்புனரமைப்பு செய்யுமாறு பலதடவைகள் கோரிக்கை விடுத்தபோதும் அவை மீள் புனரமைப்புச் செய்யப்படவில்லை என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுவருகின்றது.

கடந்த 9ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கமக்கார அமைப்புக்கள் புனரமைக்கப்படாமை தொடர்பாகக் கேள்வி எழுப்பப்பட்டபோது, அதற்குப் பதிலளித்த மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் இ.தயாரூபன், மாவட்டத்தில் 217 கமக்கார அமைப்புக்கள் உள்ளன. இதில் பளை, முழங்காவில், பூநகரி ஆகிய பிரதேச கமக்கார அமைப்புக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதுவரை தெரிவு செய்யப் படாத அமைப்புக்கள் யாவும் எதிர்வரும் ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் புனரமைப்புச் செய்யப்படும் - என்றார். (த)

## நவீன சந்தைத் திருத்தத்துக்கு வாடகைப் பணமே பயன்படும்

யாழ்ப்பாணம், டிசெ. 12

நவீன சந்தை திருத்த வேலைகளுக்குச் சந்தைகளில் பெறப்படும் வாடகைப் பணமே பயன்படுத்தப்படவுள்ளது. வேறு வேலைகளுக்காக அவை பயன்படுத்தப்படமாட்டாது என யாழ். மாநகர சபை ஆணையாளர் எஸ். பிரணவநாதன் தெரிவித்தார்.

கல்வியங்காட்டுச் சந்தையின் மேல்மாடிக் கூரைகள் வழியாக மழை நீர் கடைகளில் ஒழுகுவதாகவும், கூரைகள் திருத்தியமைக்கப்பட வேண்டும் எனவும் படிக்கட்டுகளை மலசலகூடமாகச் சிலர் பயன்படுத்தி விடுவதால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ஆணையாளர் தெரிவித்தார். (த-7)

## தட்டிக் கேட்டவருக்கு தண்டனை பயிரழிவு

தென்மராட்சி, டிசெ. 12

பயிர் அழிவு செய்த ஆடுகளைப் பிடித்துக் கட்டி நட்டஈடு பெற்றவரின் தோட்டத்தினுள் நுழைந்த ஆடுகளின் உரிமையாளர் தோட்டத்தில் காணப்பட்ட பயிர்களைப் பிடுங்கி எறிந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த 7 ஆம் திகதி இரவு சாவகச்சேரி கெருடாவிலில் இடம்பெற்றது.

கெருடாவில் பகுதியில் பட்டியில் ஆடுகள் வளர்க்கும் ஒருவர் அண்மையில் பெய்த மழையையடுத்து இரவில் ஆடுகளைக் கட்டுவதில்லை. இதனால் ஆடுகள் வீதிகளில் படுத்து விபத்துக்களை ஏற்படுத்தி வந்துள்ளன.

பாதிக்கப்பட்ட ஆடுகளின் உரிமையாளரிடம் சொல்லியும் அவர் செவிமடுக்காததால் அந்தப் பகுதி கமக்கார அமைப்பு மற்றும் சாவகச்சேரி நகர சபை, சாவகச்சேரி பொலிஸ் நிலையம் போன்றவற்றில் முறையிட்டுள்ளனர். இந்த ஆடுகள் வளவுக்குள் செல்லும் வேளையில் நாய்கள் துரத்தினால் ஆடுகளின் உரிமையாளர் நாய்களைக் கொன்று விடுகிறார். இதனால் தமது வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்க்க வேண்டிய நிலையில் அந்தப் பகுதி மக்கள் உள்ளனர். சுதந்திரமாக நடமாடும் ஆடு, மாடுகள் அந்தப் பகுதியில் உள்ள குடியிருப்புக்களுக்குள் காணப்படும் தென்னம்பிள்ளைகள், வாழைகள், பூங்கன்றுகள் போன்றவற்றை தின்றும் அழித்தும் வருகின்றன.

கடந்த வாரம் அந்தப் பகுதியில் உள்ள காணி ஒன்றினுள் விதைக்கப்பட்டிருந்த உழுந்துப் பயிரை மாடுகள் அழித்தமை தொடர்பாக உரிமையாளரிடம் தெரிவித்தபோது அன்று இரவு மாடுகளை வளவினுள் விட்டு முழு உழுந்துப் பயிரையும் அழிக்கச் செய்துள்ளார்.

இந்த நபரால் வளர்க்கப்படும் ஆடு, மாடுகளை கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் கேட்டுள்ளனர். (த-9)

# செய்திகள்



## விஷமிகளால் சூறையாடப்படும் பாலியாற்றுப் பாலக் கம்பிகள்

முல்லைத்தீவு, டிசெ.12

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கிலுள்ள பாண்டியன்குளம், நட்டாங்கண்டல், கரும்புள்ளியான், பனங்காமம், மூன்றுமுறிப்பு ஆகிய கிராமங்களையும் குறித்த கிராமங்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் மல்லாவியையும் இணைக்கும் பிரதான வீதியில் நீர்ப்பாசனத் திணைக்களத்தால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பாலியாற்றுப் பாலத்தின் பாதுகாப்பு கம்பிகளை விஷமிகள் இரும்புக்காக உடைத்து சூறையாடி வருகின்றனர். இதனால் குறித்த பாலம் பாதுகாப்புக்கு போக்குவரத்துக்கு ஆபத்தான நிலையில் காணப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (வ)

## மன்னார் நகரசபை ‘பட்ஜெட்’ மக்களின் பார்வைக்கு

மன்னார், டிசெ. 12

மன்னார் நகர சபையின் 2015 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டம் மக்களின் பார்வைக்காக மன்னார் நகர சபையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக மன்னார் நகரசபை உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் தெரிவித்தார்.

மன்னார் நகர சபையின் விசேட கூட்டம் கடந்த 3 ஆம் திகதி நடைபெற்றது. குறித்த கூட்டத்தில் மன்னார் நகரசபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம், உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ், நகரசபைச் செயலாளர் எஸ்.எல். றொனால்ட் மற்றும் நகர சபை உறுப்பினர்களான எஸ்.பிருந்தாவனநாதன், ஏ.சி.மெரினஸ் பெரேரா ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த கூட்டத்தின்போது நகர சபைத் தலைவர் 2015 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவு திட்டத்தின் முதலாம் வாசிப்பை முன்வைத்தார். அதனையடுத்து சபை உறுப்பினர்களால் வரவு– செலவுத் திட்டம் தொடர்பாக விவாதிக்கப்பட்டு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் இந்த வரவு செலவுத்திட்டம் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளதுடன் குறித்த வரவு செலவுத்திட்டத்தை அலுவலக நேரங்களில் மக்கள் பார்வையிடுவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (வ–56)

## மன்னாரில் சிறப்பாக நடைபெற்ற மனித உரிமைகள் தின நிகழ்வு

மன்னார், டிசெ.12

சர்வதேசமனிதஉரிமைதினத்தை முன்னிட்டு மனித உரிமை கோட்பாடுகளை வலி யுறுத்தி மன்னார் சமாதான அமைப்பின் ஏற்பாட்டில் மனித உரிமைகள் தினம் மன்னாரில் கடந்த 3 ஆம் திகதி அனுட்டிக்கப்பட்டது.

அன்றையதினம் முற்பகல் 10 மணியளவில் மன்னார் சமாதான அமைப்பின் தலைவர் பீ.ஏ.அந்தோனி மார்க் தலைமையில் மன்னார் அரச பஸ் தரிப்பிடத்தில் நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது மனித உரிமைகள், பெண்கள் உரிமைகள், சிறுவர் உரிமைகள், பொருளாதார உரிமைகள், கல்வி உரிமைகள் போன்றவற்றை வழியுறுத்திப் பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறுமனிதஉரிமைகள்தினத்தை அனுட்டித்தனர். (வ–56)





நாவலரின் சிலைக்கு மாலை அணிவிக்கும் மாணவன்

## கலை, இலக்கிய வட்டத்தின் நாவலர் தினம் வவுனியாவில்

வவுனியா கலை,இலக்கிய நண்பர்கள் வட்டம், மற்றும் வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கமும் இணைந்து நடத்திய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் 135 ஆம் ஆண்டு நினைவு தினம் வவுனியா இலுப்பையடியில் அமைந்துள்ள நாவலர் பெருமான் சிலையடியில் தமிழ்மணி அகளங்கன் தலைமையில் இடம் பெற்றது .

இந்தநிகழ்வில் வட மாகாண சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரும், முன்னாள் வவுனியா நகர பிதாவுமான ஜி.ரி. லிங்கநாதன், முன்னாள் உப நகர பிதா சந்திரகுலசிங்கம் (மோகன்), வவுனியா நகரசபைச் செயலாளர் க.சத்தியசீலன், கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன், எஸ். எஸ். வாசன், வவுனியா சி.சி.ரி. எம். எஸ். பாடசாலையின் அதிபர் பஸ்தியாம்பிள்ளை, தமிழ் ஆசிரியர் கதிர்காமசேகரன், முன்னாள் அதிபர் வையாபுரிநாதன், முன்னாள் கோவில் குளம் இந்துக் கல்லூரி அதிபர் சிவஞானம், இலங்கை வங்கி முகாமையாளர் ரோய் ஜெயக்குமார், வட மாகாண சுகாதார அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் ப.சத்தியசீலன், பிரதேச சபை உறுப்பினர் சிவம், மாணவர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (வ–402)

## வெள்ள வடிகால்கள் விரைவில் சீராகும்

### நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள்

யாழ்ப்பாணம்,டிசெ. 12

நல்லூர்ப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வெள்ளம் வழிந்தோடும்வடிகால்வாய்களை சீர் செய்வதற்கு உரிய ஏற்பாடுகள் மேற்கொள் ளப்படவுள்ளதாக சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

குறிப்பாக சபைக்கு உட்பட்ட பகுதியில் குளங்களை அண்டியுள்ள வடிகால்வாய்கள் உரிய முறையில் அமைக்கப்படாததால் வெள்ளம் வழிந்தோட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணத்தால் தாழ்ந்த குடியிருப்புப் பகுதியில் தேங்கி நிற்கும் வெள்ளம் வழிந்தோட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்தநிலையில்சபைக்குஉட்பட்ட பகுதியில் குளங்களை அண்டி காணப்படும்வடிகால்வாய்களை சீரமைத்து புனர்நிர்மாணம் செய்வதற்கு சபை நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளது. (வ–17)

## சட்டவிரோத பனை தறிப்பு வடமராட்சி கிழக்கில்

தென்மராட்சி, டிசெ. 12

வடமராட்சி கிழக்கின் எல்லைப்புறமான கேவில், போக்கறுப்பு போன்ற இடங்களில் காணப்படும் பனை மரங்கள் குழுவாக வருவோரால் தினமும் தறித்துச் செல்லப்படுவதாக அந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

வாகனங்களில் வருவோர் அரச காணிகளிலும் குடியிருப்பு இல்லாத காணிகளிலும் அத்து மீறி அங்குள்ள பனை மரங்களைத் தறித்து எடுத்துச் சென்றுள்ளனர். இது தொடர்பாக பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தும் பயன் கிடைக்கவில்லை என்றும், இந்தக் கிராமங்களில் இருந்து சுமார் 20 கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் பொலிஸ் நிலையம் உள்ளதால் தொலைபேசியில் தகவல் கொடுத்தாலும் பொலிஸார் வருவதில்லை என்றும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (வ–9)



## மனித உரிமைகள் சட்டங்கள் குறித்த செயலமர்வு சனியன்று

யாழ்ப்பாணம், டிசெ.12

சர்வதேச மனித உரிமைகள் சட்டங்களும் சர்வதேச மனித உரிமைப் பொறிமுறைகளும் தொடர்பான செயலமர்வு ஒன்று சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இலங்கை மனித உரிமைகள்ஆணைக்குழுவின்யாழ்ப்பாணப் பிராந்திய காரியாலயம் இதனை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த நிகழ்வில் பங்குகொள்ள விரும்பும் சிவில் சமூகப் பிரதிநிதிகள், கல்வியியலாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சமாதான நீதிவான்கள், மத்தியஸ்த சபை அங்கத்தவர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் 021 222 2021 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டுஉறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை இந்தச் செயலமர்வு யாழ்.கிறீன்கிறாஸ் விருந்தகத்தில் இடம்பெறும் என்று யாழ்.பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் அறிவித்துள்ளார். (வ–4)

# நா டெங்கும் மிளிரும் வலர் பெருமான்

■ பேராசிரியர் சி.க. சிற்றம்பலம்

நமது சைவ சமயத்தின் ஐந்தாம் குரவரான ஸ்ரீலஸ்ரீஆறுமுகநாவலர் அவர்களை அறிஞர்கள் இந்துக்களின் சீர்திருத்தவாதி எனவும் நல்லை நாவலர் தோன்றிலரேல் சொல்லு தமிழெங்கே சுருதி எங்கே எனவும் பலவாறு புகழ்ந்துரைத்தனர். நல்லூர் முருகப் பெருமான் மீது தீவிர பக்தி கொண்ட இவர், தமது சமயப் பணியை முன்னிலைப் படுத்த நல்லூர் கந்தசாமி ஆலய முன்றிலில்சைவப்பிரகாசமடாலயம் ஒன்றையும் ஸ்தாபித்தார். இந்த மடாலயத்தை ஸ்தாபிக்க விரும்பிய நாவலர் அதற்குரிய 5 பரப்பும், 12 குழியும் கொண்ட அம்மையன் வளவு என்ற காணியைத் தமது பணத்தில் 2000 ரூபாவைக் காணிச் சொந்தக்காரரான சுப்பையா கார்த்திகேசு என்பவருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்டார். நாவலர் மறைவோடு அவரது பணிகள் முடங்கின.

1961 இல் அரசும் இதனைப் பொறுப்பேற்றது.

1968 இல் இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு மிகவும் கோலாகலமாகஅறிஞர்அண்ணா முதலமைச்சராக இருந்த காலத்தில் தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் முயற்சியால் சென்னையில் நடைபெற்றது.

இதன்போது சென்னை மரினாக் கடற்கரையில் தமிழ் வளர்த்த பெரியார்களுக்கெல்லாம் சிலை அமைக்கப்பட்டாலும் கூட, பதிப்புத்துறையிலும், சமய மறுமலர்ச்சியிலும் தமிழகத்திற்கே வழிகாட்டிய நாவலர் பெருமானுக்குரிய சிலை அமைக்கப் படவில்லை. இதனால் மாநாட்டுக்குச் சென்ற ஈழத்துப் பெரியார்கள் பலர் கவலை அடைந்தனர். நாவலருக்கு வெண்கலத்தில் சிலை அமைத்து நல்லூரில் முருகன் ஆலய முன்றிலில் உள்ள அவரது காணியில் பிரதிஷ்டை செய்ய நடவடிக்கை எடுத்தனர். இந்தப் பெரும் பணியில் முன்னின்று உழைத்தவர் அன்றைய மெய்கண்டான் அச்சக உரிமையாளர் இரத்தினசபாபதி ஆவார்.

1969 ஆம் ஆண்டு ஜூன் 24 ஆம் திகதி கொழும்பிலிருந்து பெரு வாழ்த்து வணக்கத்துடனும், அரச மரியாதைகளுடனும் அரசபவனியாக வழி அனுப்பப்பட்ட நாவலர் சிலை தேச பவனியாக யாழ் குடாநாடெங்கும் ஊரூராகக் கொண்டு செல்லப்பட்டு பின்னர் ஜூன் 29 இல் ஸ்தாபகம் செய்யப்பட்டது. யாழ் குடாநாடே சிலை வைப்பைக் காண்பதற்குத் திரண்டுநின்றது. நல்லூர் தொடங்கி முற்றவெளிவரை ஒரு கிழமைக்கு மேலான காலம் ஒரே விழாக்கோலமும் பெருஞ்சனச் செறிவுமாகவே காணப்பட்டது. அந்தநாளில் இலங்கைவானொலி

> 1969 ஆம் ஆண்டு ஜூன் 24 ஆம் திகதி கொழும்பிலிருந்து பெரு வாழ்த்து வணக்கத்துடனும், அரச மரியாதை களுடனும் அரச பவனியாக வழி அனுப்பப் பட்ட நாவலர் சிலை தேச பவனியாக யாழ். குடாநாடெங்கும் ஊரூராகக் கொண்டு செல்லப்பட்டு பின்னர் ஜூன் 29 இல் ஸ்தாபகம் செய்யப்பட்டது.

நிகழ்வை நேரடி அஞ்சல் செய்தமையும் நினைவு கூரத்தக்கதாகும். யாழ்ப்பாணத்து தமிழ் அரசர் காலத்துக்குப் பின் சைவத்தின் பெயரால் இம்மண்ணில் நடந்த முதற் பெரு வைபவம் இதுவாகும் எனவும் பொது மக்கள் மத்தியில் பேசப்பட்டது. இத்தகைய மகிமை வாய்ந்த சிலையை இதனைப் பிரதிஷ்டை செய்த நாவலர் சபையினரே மிகவும் மீர்மமான முறையில் அகற்றி முறையான அனுமதியுமின்றி, ஏற்பாடுகளுமின்றி தற்போதைய நாவலர் கலாசார மண்டபத்துக்கு எடுத்துச் சென்று அதன் முகப்பில் வைத்துவிட்டனர்.

அக்காலத்தில் நாவலர் மணி மண்டபம் பொலிவிழந்து காணப்பட்டதை அவதானித்த அப்போதைய இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் இந்து கலாசார அமைச்சின் மூலம் அதனைப் பொறுப்பேற்றார். எனினும் சிலை அற்ற மண்டபத்தைத் தரிசிக்க வந்த மக்கள் கவலை அடைந்தனர். எனினும் இந்த மண்டபத்தை அகற்றுவதற்காகக் கரிசனை உள்ள சிலரால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும்அன்று இயங்கிய நாவலர் நற்பணி மன்றத்தால் அந்த நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டது.

எனினும் இந்த மண்டபத்தின் எதிர்காலம் பற்றிச் சிந்திப்பதற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களால் 24.08.2010 ஆம் திகதியன்று நல்லூர் மாநகர சபை மண்டபத்தில் ஓர் ஆலோசனைக் கூட்டம் கூட்டப்பட்டது. அப்போது சைவ மன்றங்களின் பிரதிநிதிகளால் சிலை மண்டபத்தை அடைந்த வரலாறு பற்றி விரிவாக எடுத்துரைக்கப்பட்டு, மறுபடியும் நாவலர் சிலை கோலாகலமாக நாவலர் மணி மண்டபத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டது. அமைச்சின் இம்முயற்சியைப் பலரும் பாராட்டினர்.

எனினும் நல்லூரில் மட்டுமே பொலிவுடன் காணப்பட்ட நாவலர், சிலை வடிவில் ஊரெங்கும் காட்சிதர வேண்டும் என அன்பர்கள் விரும்பினர். இவர்களில் முதன்மையானவர் கருணை ஆனந்தனாவார். இவர் மெய்கண்டான் இரத்தினசபாபதியின் மருமகனாவார். பொக்கிஷமான நாவலர் மாநாட்டு மலர் இவரது பெருமுயற்சியால் மறுபிரசுரம் செய்யப்பட்டு செலவிலும் குறைந்த விலையில் பாடசாலைகளின் நூல் நிலையங்களுக்கு வழங்கப்பட்டது. அத்தோடு நில்லாது நாவலர் சிலைகளை பாடசாலைகளிலும் பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்பதிலும் அவர் அக்கறை காட்டினார். அவரது கடும் முயற்சியால் நாவலர் சிலை கொழும்பிலுள்ள பிரபல பாடசாலையாகிய றோயல் கல்லூரியில் பிரதிஷ்டை செய்யப்பட்டபோது கல்லூரிச் சமூகமே திரண்டு நின்று சிலையை வரவேற்றது. அத்துடன் கொழும்பிலுள்ள இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, இந்துக் கல்லூரி, இரத்மலானை இந்துக் கல்லூரி போன்ற இடங்களிலும் இவரது முயற்சியால் நாவலர் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டன. அது மட்டுமன்றி மலையகத்தில் மாத்தளை, கண்டி, நுவரெலியா ஆகிய இடங்களிலுள்ள பிரபல பாடசாலைகளிலும் நாவலர் இன்று சிலை வடிவமாக காட்சி தருகின்றார். மன்னார், மட்டக்களப்பிலும் நாவலர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இத்தகைய அரும்பணியை யாழ். குடாநாட்டிலும் இன்று அவர் முன்னெடுத்து வருகின்றார். ஆரம்ப நடவடிக்கையாக ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நாவலர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது. தொடர்ந்து காரைநகர் இந்துக் கல்லூரி, விக்ரோறியாக் கல்லூரி, பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, இளவாலை மெய்கண்டான், யாழ் இந்து மகளிர் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, வட்டக்கச்சி அறநெறிப் பாடசாலை, மன்னார் சித்திவிநாயகர் கல்லூரி ஆகியனவற்றிலும் நாவலர் சிலைகளை ஸ்தாபித்தார்.

தன்னந்தனியாக, எதுவித எதிர்பார்ப்போ அன்றிப் பதவி ஆசையோ இன்றி நண்பர் கருணை ஆனந்தன் மேற்கொள்ளும் இந்தப் பணி என்றும் நிலைத்து நிற்கும். நாவலரின் பரிசுத்த ஆத்மாவின் செயற்பாடு இஃதன்றோ? இன்று இவர் ஸ்தாபக தலைவராக நாவலர் நற்பணி மன்றத்தை நடத்துகிறார்.

ஓய்வுபெற்ற இறைவரித் திணைக்கள உதவி ஆணையாளரான கருணை ஆனந்தன் யாழ்.பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரை என்றும் சைவ உலகம் மறவாது.



## சைவம் தமிழ் வளர்த்திடவே மீண்டும் இத்தரணி வாராய்!

கருவினிலே திருவுடைய கனியே சைவக்
கலங்கரையின் தனிவிளக்கே தவத்தின் பேறே
உருவினிலே விபூதி உருத்தி ராக்கம்
உண்மைநெறி பிறழாத வாழ்வின் ஆக்கம்
பெருமையுறு க்ந்தர்சிவ காமி தந்த
பேராளா ஆறுமுக நாவலரே ஐயா
அருமையுறு சிவக்கனியே அமுதே எமது
சைவத்தை வாழவைக்க உதித்த பேறே.

பாவடிவில் ஆன எங்கள் புராண மெல்லாம்
பகருதற்கு எளிதாக்கி வசனம் செய்து
யாவருமே படித்தறிய வசதியாக
நல்லசைவ நூல்களையும் ஆக்கித் தந்தாய்
சோர்வதுவே இல்லாது துணிந்து நின்றாய்
சொல்லவல்ல தூயவனே துணிந்தாய் என்றும்
ஆர்வமொடு இந்தியநன் னாடு சென்று
ஆற்றினாய் பிரசங்கம் பெருமை சேர்த்தாய்..

அச்சகமும் அமைத்துநல்ல நூல்கள் ஆக்கி
அறிவினையே வளர்ப்பதற்கு வழிகள் செய்தீர்
பொய்ச்சமய நெறிபோகா வாழ்ந்தி டற்குப்
புண்ணியனே நீசைவ எழுச்சி செய்தாய்
இச்சகத்தில் உன்பேச்சால் வெற்றி கொண்டாய்
ஏற்றமொடு சைவம் தமிழ் வளர்த்து வந்தாய்
மெய்ச்சமயம் சைவமென நிறுவி வாழ்ந்தாய்
மீண்டும் அவைபால் இத்தரணி வாராய்!

உன்னுடைய எழுச்சியினால் உதய மான
உயர்சைவக் கல்லூரி பலவும் கண்டோம்
பன்னரிய சைவநல்ல பெரியா ரான
பண்புநிறை சிவபாத சுந்த ராத்தார்
எண்ணரிய செயல்வீரர் இராம நாதர்
இணையில்லா இந்துபோட் ராஜ ரத்னம்
கண்ணெனவே சைவமதை வளர்த்திட் டார்கள்
கார்முகிலே நீரவர்க்குக் கருவி யானீர்.

■ – பண்டிதை பொன்.பாக்கியம்

தினக்குரல்

# செய்திகள்

## இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட நூல்கள் அன்பளிப்பு




யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் பிரதித் துணைத்தூதர் எஸ்.தெட்சணாமூர்த்தி நூல்களைக் கையளிக்கிறார்

யாழ்ப்பாணம்.டிசெ.12

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தால் வட மாகாணத்திலுள்ள 4 நூலகங்களுக்கு ஒரு தொகுதி நூல்கள் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டன. இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட ஒரு தொகுதி நூல்கள் வட மாகாணத்தில் பின்தங்கிய நூலகங்களுக்கு யாழ்ப் பாணத்திலுள்ள இந்தியத்துணைத் தூதரகத்தால் கடந்த மாதம் தொடக்கம் வழங்கப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் மாந்தை பொதுநூலகம், நானாட்டான் பொதுநூலகம், கிளிநொச்சி பொது நூலகம், முல்லைத்தீவு பொதுநூலகம் ஆகிய 4 நூலகங்களுக்கும் நூல்கள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் பிரதித் துணைத்தூதர் எஸ்.தெட்சணாமூர்த்தி அந்தந்த நூலகங்களின் நூலகர்களிடம் நூல்களைக் கையளித்தார்.

இதன் போது வடமாகாணத்தின் அபிவிருத்திக்காக இந்தியா பல உதவிகளை வழங்கி வருவதாகவும், பிரதானமாக ரயில் சேவைக்கு உதவி புரிந்துள்ளதாகவும், இனி வரும் காலங்களிலும் இது போன்ற உதவிகளை வழங்குவதுடன் இன்னும் சில நூலகங்களுக்கும் நூல்கள் வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்றும் பிரதித் துணைத்தூதர் தெரிவித்தார். (வ–14)



நல்லை ஆதீன முதல்வர் சிறந்த சமூக சேவகரான சி.வ.சங்கரப் பிள்ளைக்கு 'சேவைச் செம்மல்' கௌரவ பட்டம் வழங்குகிறார்.

## மூத்தோர் மற்றும் மாணவருக்கு நல்லூரில் ஒருங்கே மதிப்பளிப்பு

யாழ்ப்பணம்,டிசெ.12

நல்லூர் தெற்கு சிரேஷ்ட பிரசைகள் சங்கத்தின் ஏற்பாட்டில், நல்லூர் முருகன் சனசமூக நிலையம் மற்றும் நல்லூர் தெற்கு பொதுமக்கள் அமைப்புக்களின் ஆதரவுடன் சிரேஷ்ட பிரஜைகள் மற்றும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமாணவர்களைக்கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் க.குமாரசுவாமியின் தலைமையில் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் திருமதி விஜய லட்சுமி ரமேஸ், சிறப்பு விருந்தினர்களாக வைத்திய கலாநிதி இராசையா கணேசமூர்த்தி, வைத்திய கலாநிதி ஜெயதேவி கணேசமூர்த்தி ஆகியோரும்–கௌரவ விருந்தினர்களாக ஈ.எஸ்.பி. நாகரத்தினம், ச.சிவஞானம், சி.சுகுமார், சமூகசேவை உத்தியோகத்தர் த. கனகராசா, நல்லூர் கிராம அபிவிருத்தி உத்தியோகத் தர் திருமதி மாலினி பாஸ்கரன், யாழ். மாநகரசபை சனசமூக நிலைய அதிகாரி எஸ்.லோக சிவம் ஆயோரும் கலந்து கொண் டனர். நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர பரமாச் சார்ய சுவாமிகள் மங்கல விளக்கேற்றி ஆசியுரையுடன் நிகழ்வை ஆரம்பித்து வைத் தார். தலைமையுரை, விருந்தினர் உரைகளை அடுத்து நல்லை ஆதீன முதல்வர் சிறந்த சமூக சேவகரான சி.வ.சங்கரப் பிள்ளைக்கு 'சேவைச் செம்மல்' கௌரவ பட்டம் வழங்கியும், வடக்கு மாகாண சபையின் செயலாளர் திருமதி விஜய லட்சுமி ரமேஸ், பதக்கம் அணிவித்தும் கௌரவித்தனர். நல்லூர் பிரிவைச் சேர்ந்த 70 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரசைகளும் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுமாக 150 பேரும் கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் பெருமளவு பொது மக்கள் கலந்து கொண்டனர். (வ–7)

## குழந்தை அடித்துக் கொலை சந்தேக நபருக்கு பிணை

யாழ்ப்பாணம், டிசெ.12

அரியாலையில் ஒன்றரை வயதுடைய ஆண் குழந்தையொன்றை அடித்துக் கொலை செய்த குற்றச்சாட்டில் விளக்கமறியலில் இருந்த அந்தக் குழந்தையின் வளர்ப்புத் தந்தை யாழ்.மேல்நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 25 ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

அதில் அதே இடத்தைச் சேர்ந்த சீலன் டிலக்சன் என்ற குழந்தையே கொல்லப்பட்டது. அடித்தனால் ஆபத்தான நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் அந்தக் குழந்தை உயிரிழந்திருந்தது.

குறித்த குழந்தையைக் கொலை செய்த குற்றச்சாட்டில் யாழ். திருநகரைச் சேர்ந்த சிறில் வெஸ்லி என்பவர் சம்பவதினத்துக்கு மறுநாள் கைது செய்யப்பட்டார். அவர் யாழ். மாநகரசபை சுத்திகரிப்புத் தொழிலாளியாவார்.

அவரை விளக்கமறியலில் வைக்க யாழ்.நீதிமன்று உத்தரவிட்டிருந்தது. அவரைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி யாழ்.மேல்நீதிமன்றில் பிணை விண்ணப்பம் செய்யப்பட்டிருந்தது. அதனைப் பரிசீலித்த மேல்நீதிமன்று பிணை அனுமதி வழங்கியது. அதன்படி 10 ஆயிரம் ரூபா ரொக்கப்பிணையிலும், தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையிலும் அவர் விடுவிக்கப்பட்டார். தவிர ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் யாழ். பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திட வேண்டும் என்றும் வழக்கு நிறைவடையும் வரை வெளிநாடு செல்லக்கூடாது என்றும் நிபந்தனை விதித்தது. (வ–4)

## தெல்லிப்பழை பொலிஸார் நடத்திய நடமாடும் சேவை

வலி.வடக்கு, டிசெ.12

தெல்லிப்பழை பொலிஸாரின் ஏற்பாட்டில் நடமாடும் மருத்துவ முகாம் அளவெட்டி பிரதேச மருத்துவமனையில் தெல்லிப்பழை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கஸ்தூரி ஆராய்ச்சி தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரணவீர கலந்துகொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். மருத்துவ முகாமில் சுமார் 250 இற்கும் மேற்பட்ட பொது மக் கள் கலந்து கொண்டனர். குறிப் பாக கண் சிகிச்சை பரி சோதனை உட்பட பல்வேறு பரி சோதனைகளும் மேற்கொள் ளப்பட்டன.

கண் பாசோதனை மேற் கொண்டு கண்ணாடிகள் தேவையென பரிந்துரை செய்யப்பட்டவர் களில் நூறு பேருக்கு எதிர்வரும் 26 ஆம் திகதி கண்ணாடிகளும் வழங்கப்படவுள்ளன. குறித்த குருதி கொடை முகாமில் பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து குருதிக்கொடையையும் வழங்கினர். (வ–86)

## ஒலி பெருக்கி சாதனங்கள் கையளிப்பு



பன்முகப்படுதப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தியால் வழங்கப்பட்ட 50 ஆயிரம் ரூபா நிதியிலிருந்து வாங்கிய ஒலி பெருக்கிச் சாதனங்களை வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் வட்டுக்கோட்டை மாவடி அடைக்கலம் தோட்ட கந்தசுவாமி கோயில் நிர்வகத்திடம் வழங்குகிறார். (வ–115)

# அம்மாடியோவ்!

## இவ்வளவு போட்டிகளும் பரிசுகளும் எமக்கா?

| இல | போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு ரூ. | 2 ஆம் பரிசு ரூ. | 3 ஆம் பரிசு ரூ. | மட்டம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| 02 | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| 03 | கட்டுரை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 7,000 | 5,000 | 4,000 | மாகாணம் |
| 04 | ஓவியம் | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 7,000 | 5,000 | 4,000 | மாகாணம் |
| | | C | தரம் 3, 4, 5 | 5,000 | 4,000 | 3,000 | மாகாணம் |
| 01 | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 02 | கவிதை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 03 | கட்டுரை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 04 | ஓவியம் | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | B | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | C | தரம் 3, 4, 5 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |

# 30

அகவையில்

உதயன்

**தமிழ் வளர்ப்போம் தமிழால் இணைவோம்!**

# மாணவர்களே!

## சிறுகதைப் போட்டிக்கு தயாரா நீங்கள்?

நீங்கள் தரம் 10, 11, 12, 13 வகுப்பில் கற்பவர்களாயின்
சிறுகதை ஒன்றினை ஆக்கி,
உங்கள் ஆசிரியர் ஒருவரின் வழிகாட்டலுடன், அதிபர் ஊடாக உறுதிப்படுத்தி

30ஆவது அகவையில் உதயன்,
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு, 2015 பெப்ரவரி 28ஆம் திகதிக்கு முன்னர் உங்கள் சிறுகதைகளை அனுப்பி வையுங்கள்.

மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் தலா 10 சிறுகதைகள், வடக்கு மாகாண மட்டத்தில், பிரபல சிறுகதை எழுத்தாளர்களால் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு, சான்றிதழ்களும், பெறுமதியான பரிசுகளும் வழங்கப்படும். வடக்கு மாகாண பாடசாலைகளில் தரம் 10, 11, 12, 13 இல் கற்கும் மாணவர்கள் இந்தத் தேர்வில் பங்கு கொள்ளலாம்.

உதயன் முப்பதாவது ஆண்டுத் தேர்வுகளில் பங்கு கொள்ள முத்திரை பதிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பி, உங்கள் சிறுகதையை இணைத்து அனுப்புங்கள். விண்ணப்பப் படிவங்கள் எங்கள் உதயன் நாளிதழில் வெளிவரும்.

சிறுகதைகள் 'ஏ 4' தாளில் இரண்டரைப் பக்கம் தொடக்கம் நான்கு பக்கங்களுள் அடங்கியிருத்தல் வேண்டும். (தாளின் ஒரு பக்கத்தை மட்டும் பயன்படுத்தி மறுபக்கம் வெறுமையாக விடப்பட வேண்டும்) கையால் எழுதியோ, கணினியில் தட்டச்சுச் செய்தோ அனுப்பலாம். சிறுகதையானது, மாணவர் பிரச்சினையையோ சமூகப் பிரச்சினையையோ மையமாகக் கொண்டு அமையலாம். மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் வெற்றியாளர்கள் தேவைப்படுமிடத்து மேலும் எழுத்துத் தேர்வு ஒன்றுக்குச் சமுகமளிக்கத் தயாராக இருக்க வேண்டும். மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் முதல் மூன்று வெற்றியாளர்களுக்கும், சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கப்படும்.

ஏனைய 07 வெற்றியாளர்களுக்கு மாவட்ட மட்டச் சான்றிதழ் வழங்கப்பட்டு அந்த ஆக்கங்கள் மாகாண மட்டத் தேர்வுக்கு அனுப்பி வைக்கப்படும்.

மாகாண மட்டத்தில் மூன்று இடங்களைப் பெறுகின்ற வெற்றியாளர்களுக்கு சான்றிதழ்களும், பரிசுகளும் ஏனைய 07 வெற்றியாளர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**எங்கே?! உங்கள் சாதனையை நிலைநாட்ட இன்றே சிந்தனையில் மூழ்குங்கள்! சிந்தனைக்கு வரி வடிவம் கொடுங்கள்! அவற்றை எமக்கு அனுப்பி வையுங்கள்!**

ஆக்கங்களில் உங்கள் பெயரோ, பாடசாலையின் பெயரோ இடம்பெறாது பார்த்துக்கொள்ளுங்கள். அவற்றை விண்ணப்பப் படிவத்தில் நிரப்பி, உங்கள் ஆக்கங்களுடன் விண்ணப்பப்படிவத்தை இணைக்க மறந்து விடாதீர்கள். ஓர் ஆக்கத்துக்கு மேலும் பங்குகொள்வதாயின் ஒவ்வொரு ஆக்கத்துடனும் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்தை இணைத்தல் அவசியம்.

2015 புத்தாண்டுப் பிறப்பன்று வெற்றியாளர்களது பெயரும், பாடசாலையும் உதயன் நாளிதழில் இடம்பெறும். வழிகாட்டும் ஆசிரியர்களுக்கும் பரிசில்களும் சான்றிதழ்களும் காத்திருக்கின்றன.

### உதயன் 30ஆவது ஆண்டு ஆக்க இலக்கியத் தேர்வுகள்

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம்
(பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றை கீறி வெட்டி விடவும்)

பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A – பிரிவு / தரம் 6, 7, 8, 9 B – பிரிவு / தரம் 3, 4, 5 C – பிரிவு
(பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றை கீறி விடவும்)

பங்குபற்றும் மாணவர் பெயர்:-
செல்வன்/ செல்வி ____________________

சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியத் தலைப்பு
____________________

கற்கும் பாடசாலை: ____________
தரம்: ________
பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ____________
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்: ____________ ________
ஆசிரியரின் பாடத்துறை: ____________

அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் ________ இல், கல்வி கற்கும் செல்வன்/ செல்வி ____________ அவர்களது சுய ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும்
பதவி முத்திரையும்

உதயன்

ஆக்கம் தொடர்பான பணிமனை பயன்பாட்டுக்கு

உதயன்

பத்திரிகையுடன் நாளாந்தம் இணைந்திருங்கள்!

# கருத்து

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நம்பிக்கை தருகிறது இளைஞர் எழுச்சி

நீண்ட காலத்தின் பின்னர் வடக்கில் நம்பிக்கை தரும் ஓர் எழுச்சியைக் காட்டியுள்ளனர் தமிழ் இளைஞர்கள். போரின் பின்னர் முடங்கிக் கிடந்த தமிழ்ச் சமூகத்திற்கு இது புதுத் தெம்பையும் புத்துணர்ச்சியையும் நம்பிக்கையையும் ஊட்டியிருக்கிறது.

போருக்குப் பின்னர் இளைஞர்கள் திசை மாறிப் போனார்கள், சீரழிந்து போனார்கள், போதைப் பாவனையினுள்ளும் பண்பாட்டுச் சீரழிவுகளுக்குள்ளும் மூழ்கிப் போய் விட்டார் கள், மதுப் பாவனை அவர்களைப் பாடாய்ப் படுத்துகிறது என்றெல்லாம் இளைஞர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் அடுக்கப்பட்டுக் கொண்டிருக்கையில், எத்தனை தான்தோன்றித் தனமாக இருந்தாலும் அரசியல் தெளிவும் உத்வேகமும் கொண்டவர்களாகவே தாம் இருக்கிறார்கள் என்பதை உலக மனித உரிமைகள் தினத்திலே யாழ். நகரில் கூடி அரசியல் பிரகடனங்களை வெளியிட்ட ஆயிரக்கணக்கான இளைஞர்கள் நிரூபித்திருக்கிறார்கள்.

விளையாட்டும், வேடிக்கையும், கேளிக்கையும் தமது வாழ்வின் ஒரு பகுதியே தவிர, தமக்கான அரசியல் பொறுப்புணர்வையும் விழிப்புணர்வையும் தாம் இழந்துவிடவில்லை என்பதை அவர்கள் ஆணித்தரமாக உணர்த்தியிருக்கிறார்கள்.

அரசியல் கூட்டங்களுக்கு நூற்றுக்கணக்கில் ஆள்களைத் திரட்டுவதற்கு கட்சிகளே அஞ்சிக் கொண்டிருக்கையில், ஆயிரக்கணக்கான இளைஞர்கள் திரண்டு, இராணுவக் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் தமது அரசியல் வேணவாவை பகிரங்கமாக முன்வைத்திருப்பது போற்றத்தக்கது; பேணித் தொடரவேண்டியது.

1970களில் வீறு கொண்டு எழுந்த இளைஞர்கள்தான் ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை வேகத்துடன் முன்னெடுத்தவர்கள் என்பதை வரலாறு மறந்துவிடவில்லை. அப்போதும் மூத்த அரசியல் தலைவர்கள் இருந்தார்கள். ராஜதந்திரத்துடன் அவர்கள் காய்களை நகர்த்தினார்கள். ஆனால் அவர்களின் மந்திரத்தால் மாங்காய்களை வீழ்த்த முடியவில்லை. விழுந்த ஒன்றிரண்டு மாங்காய்களும் இளைஞர்கள் எறிந்த கற்களினாலேயே வீழ்ந்தன என்பதுதான் வரலாறு. அந்த மாங்காய்கள் ருசியானவையா, எறிந்தவர்களும் மற்றவர்களும் அவற்றை உண்டார்களா என்பவற்றுக்கு அப்பால், விளைவுகளை – தீர்வுகளைக் கொண்டு வந்தவர்கள் இளைஞர்களே என்பது மறுக்க முடியாத உண்மை.

இப்போதும், ஒரு புறத்தில் மூத்த தலைவர்கள் அரசியல் செய்கிறார்கள். ராஜதந்திரமாகக் காய்களை நகர்த்துகிறார்கள். மென்வலிமை என்று அதற்கு அர்த்தமும் சொல்லப்படுகிறது. அதேநேரத்தில் இளைஞர்கள் எழுச்சிக்கும் கால்கோள் இடப்பட்டிருக்கிறது. அவர்கள் தமது பொறுப்புகளை மீண்டும் கைகளில் எடுத்திருக்கிறார்கள். தமக்கு என்ன வேண்டும், தமது அரசியல் எது என்பதை உறுதியாகப் பறைசாற்றியிருக்கிறார்கள்.

அவர்களின் கோரிக்கைகள், வலியுறுத்தல்கள் கூர்ந்து கவனிக்கப்படவேண்டும். அவற்றுக்கான தீர்வுகள் விரைவில் முன்வைக்கப்படவேண்டும். இளைஞர் சக்தி மகத்தானது. அதனை நல்லவழியில் நகர்த்திச் செல்லவேண்டிய பொறுப்பு தமிழ்ச் சமூகத்திற்குரியது. இளைஞர்கள் வீறுகொண்டெழும்போது அவர்களுக்கு முன் நல்ல வழிகாட்டிகள் இருந்தாகவேண்டும். அப்போதே விடிவு விரைவில் கிட்டும். இளைஞர்கள் தமது பொறுப்புணர்ந்திருக்கிறார்கள். சமூகம் தனது பொறுப்பைச் செம்மையாக நிறைவேற்ற வேண்டும்.

# இந்தியாவின் மனச்சாட்சியிடம் வேண்டுகோள் வைத்தார் விக்கி

தமிழில்: ரஜீவன்

இலங்கைத் தமிழர்களுக்கு நீதி கிடைப்பதற்கு இந்தியா உதவி புரிய வேண்டும் என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் விடுத்த வேண்டுகோளை, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அமிர்தலிங்கத்தின் காலத்திற்குப் பின்னர் எந்தத் தலைவராலும் முன் வைக்கப்படாத மிகவும் உணர்வுபூர்வமான – ஆணித்தரமான ஒன்று எனக் குறிப்பிடலாம்.

வரலாற்றுப் பின்புலத்தில் குறிப்பிட்ட உரையை வைத்து நோக்கினால், 1989இல் அமிர்தலிங்கம் கொலைசெய்யப்பட்ட பின்னர், தமிழர்களின் நிலை குறித்து அவர்களால் தெரிவுசெய் யப்பட்ட தலைவர் ஒருவர் சென்னையில் பொது மேடையொன்றில் ஆற்றிய முதல் உரை இதுவெனத் தெரிவிக்கலாம். 2009 மே மாதம் இலங்கையின் இராணுவத் திட்டங்கள் பெரிய வெற்றியைக் கண்டபின்னர் ஆற்றப்பட்ட முதல்உரையும் இதுவே. இலங்கை அரசுக்கு இந்தியா வழங்கிய அழுத்தங்கள் காரணமாக இடம்பெற்ற தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் விக்னேஸ்வரன் சென்னைக்கு மேற்கொண்ட முதலாவது பயணம் இது.

தன்னுடைய மாகாணத்தை ஆள்வதற்கு ஒரு வருட காலமாக மேற்கொண்டுள்ள பயனற்ற முயற்சிகள், அர்த்தமற்ற அலுவலகத்தில் தொடர்ந்தும் பணியாற்ற வேண்டிய நிலையில் உள்ளமை, தமிழ்மக்கள் மீதான இராணுவ ஆக்கிரமிப்பு மேலும் இறுக்கப்படுதல் போன்றவற்றின் பின்னணியில் இலங்கையின் முன்னாள் உச்சநீதிமன்ற நீதியரசர், சிவில் உரிமைகளுக்கான மக்கள் அமைப்பு வழங்கிய மனித உரிமை அரங்கைப் பயன்படுத்தி தற்போதைய நிலை மற்றும் எதிர்கால நடவடிக்கை குறித்து தனது கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

இந்தியப் பணி குறித்து, பாதுகாப்பு மற்றும் இறைமையின் பெயரில் உரிமைகளைப் பறிக்க முடியாது. பாதுகாப்பு என்பது மனித பாதுகாப்பே. அதனை அரசின் பாதுகாப்பாக அர்த்தப்படுத்தக் கூடாது என்பது அன்றைய உரையின் முக்கிய கருப்பொருளாக அமைந்திருக்கலாம்,

ஆனால், அவர் ஆற்றிய உரை என்பது உரிமைகள் குறித்தது அல்ல. மாறாக, இந்தியாவின் மனச்சாட்சியை நோக்கிய வேண்டுகோளாக அமைந்திருந்தது.

இந்த வேண்டுகோள் இந்தியாவால் புறக்கணிக்க முடியாதது; இது மனங்களைத் தொட்டுச்செல்வது. அதன் உள்ளடக்கம் என்பது பல வருட காலமாக தமிழ் மிதவாதத் தலைமை சர்வதேச சமூகத்தின் முன்னால் தனது வலுவான வேண்டுகோள்களாக முன்வைத்து வருவதை ஒத்ததாகக் காணப்பட்டது.

அவரது உரையில் காணப்பட்ட வேண்டுகோள்கள், இலங்கை அரசு வெளிப்படையாக அளித்த உறுதி மொழிகள் மற்றும் விடுதலைப்புலிகளை அழித்தொழிப்பதற்கு இராணுவம் மற்றும் அரசியல், தார்மீக உதவிகளை வழங்கும்போது சர்வதேச சமூகம் இலங்கை அரசிடம் கோரிய உத்தரவாதங்களை அடிப்படையானதாகக் கொண்டது. 2009இல் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்துடன் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாக உறுதியளித்ததுடன், தமிழ் அரசியல் கட்சிகளுடன் பேச்சுகளை தீவிரப்படுத்துவதாகவும் உறுதியளித்ததை விக்கினேஸ்வரன் நினைவுகூர்ந்தார்,

தனது உரையில் இந்தியாவுக்குள்ள சட்ட மற்றும் தார்மீக கடப்பாடுகளைச் சுட்டிக்காட்டிய விக்னேஸ்வரன், 1987 இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை நினைவூட்டியதுடன், அர்த்தபூர்வமான அரசியல் தீர்வொன்று முன்வைக்கப்படும் என அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நம்பியே இந்தியா விடுதலைப்புலிகளுக்கு எதிரான இறுதிப் போரில் இராணுவ, அரசியல் மற்றும் புலனாய்வு உதவிகளை வழங்கியது – என்றார்.

அரசியல் விவகாரங்களுக்கு போர் மூலமாகத் தீர்வை காண முடியாது. அதிகாரமற்ற மாகாண சபையை நிறுவுவதும், இராணுவம் தனது நிர்வாகத்தை மேற்கொள்ள அனுமதிப்பதும் நீதி மற்றும் நிரந்தர சமாதானத்துக்கு மாற்றீடாக அமையாது.

இந்திய அரசுக்கான தனது வேண்டுகோள்கள் என அவர் முன்வைத்தவற்றில் சந்தேகத்திற்கு இடமின்றி முக்கியமானது இராணுவமயப்படுத்தலைத் தடுக்குமாறு அவர் விடுத்த வேண்டுகோளாகும். இது குறித்து சர்வதேச சமூகம் நன்கு அறிந்துள்ளது. எனினும், எதனையும் செய்ய முடியாத நிலையிலுள்ளது. மஹிந்த ராஜபக்ஷ அரசின் நிர்வாகத்தின் கீழ் இலங்கையின் உள்நாட்டு அரசியல் பெரும் மாற்றம் கண்டுள்ளதே இதற்குக் காரணம்.

நாட்டில் இடம்பெறும் இராணுவமயப்படுத்தல், வடபகுதியின் சனத் தொகை பரம்பலை மாற்ற முயலுதல், சிங்கள பேரினவாதக் குழுக்களின் வலு அதிகரித்தலும் அவற்றால் சிறுபான்மைச் சமூகங்களுக்கு உருவாகி யுள்ள அச்சுறுத்தல், நீதித்துறை அடிமையாக்கப்பட்டுள்ளமை, நாட்டின் பொதுவாழ்க்கையை ஒரு குடும்பம் முடக்கியுள்ளமை, நிர்வாகக் கட்டமைப்புகள் சீர் குலைந்துள்ளமை, அச்சம் மற்றும் பய உணர்வு போன்ற அனைத்துக்கும் ராஜபக்ஷவே காரணம்.

இலங்கையில் சட்டத்தின் ஆட்சியையும் ஜனநாயகத்தையும் மீண்டும் ஏற்படுத்துவதற்கு இந்தியாவின் உதவியை விக்கினேஸ்வரன் கோரினார். இது இலகுவாக சாத்தியப்படக் கூடியதல்ல, இது நிறைவேறுவதற்கு தனது நிர்வாகத்தை சீர்திருத்துமாறு இந்தியா ராஜபக்ஷவை கேட்க வேண்டும் அல்லது அவரது போட்டியாளரை ஆதரிக்கவேண்டும்.

இரண்டும் சாத்தியமான இலக்குகள் அல்ல. கடந்த ஒன்பது வருடங்களில் மஹிந்த ராஜபக்ஷ இரண்டு விடயங்களை வெற்றிகரமாக சாதித்துள்ளார்.

ஒன்று, நாட்டுக்குள் உள்ள அரசியல் தளத்தை முற்று முழுதாகத் தன்வசப்படுத்தியது.

மற்றையது, மேற்குலகம் மற்றும் அமெரிக்காவின் வேண்டுகோள்கள், கருத்துகளைப் புறக்கணிப்பதால் உருவாகக்கூடிய இராஜதந்திர விளைவுகளை எதிர்கொள்வதற்காக சீனா மற்றும் இந்திய துருப்புச் சீட்டுக்களைப் பயன்படுத்தல்.

மிகத் திறமையாக இருதரப்பையும் சமாளிப்பதன் மூலமாக அவர் வெளிநாடுகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதை கருத்தில்கொள்ளும்போது,அவரது ஆட்சிக்காலத்தில் சட்டத்தின் ஆட்சி மறுபடி நிலைநாட்டப்படுவதற்கான சாத்தியமில்லை என்றே தோன்றுகின்றது. இந்த அடிப்படையில் பார்க்கும்போது மஹிந்த ராஜபக்ஷவுக்கு மூன்றாவது ஆட்சிக்காலத்தை வழங்குவது ஆபத்தானது.

இதேவேளை, கடந்தகால தேர்தல்களைப் போன்று சிங்க ளவர்கள் மத்தியில் அவரது ஆதரவு குறையாமலுள்ளதா என்பது நிச்சயமற்றதாகவுள்ளது. ஜனவரியில் நடைபெறும் தேர்தலில் அவர் வெற்றி பெறுவார் என்பது நிச்சயமற்றதாகவுள்ளது.

தேர்தல் குறித்த தன்து நிலைப்பாட்டை எடுப்பது என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் கடினமான விடயமாகவே காணப்படும்.

கடந்த முறை இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளித்ததன் மூலமாக நாடு முழுவதும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு தோல்வி கிடைப்பது தடுக்கப்பட்டது.

ராஜபக்ஷவின் எதிராளிக்கு தமிழ்க் கட்சிகள் ஆதரவளிப்பது என்ற நிலைப்பாட்டை எடுத்தால் அதனை மஹிந்த ராஜபக்ஷ பயன்படுத்துவார். சிங்கள தேசத்துக்கான ஆபத்தாகக் காண்பிக்க முனைவார். எனினும், தமிழ்க் கட்சிகளுக்கு வேறு வழியில்லை. பரந்துபட்ட ஜனநாயக எதிர்க்கட்சி கூட்டமைப்பே இலங்கைக்கு தற்போது அவசியமாகவுள்ளது.

*நன்றி–த ஹிந்து*

# வெற்றிக்காகப் போராடும் மஹிந்த ராஜபக்ஷ

கந்தவனம் கோணேஸ்வரன்

2015 ஜனவரி 8இல் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே வெற்றிபெறுவார் என்றிருந்த நிலைமை மாறி அவர் வெற்றி பெறுவாரா என்று கேட்கும் நிலைமை உருவாகி விட்டது. தனக்கொப்பார் எவரும் தேர்தல் களத்தில் இலர் என்ற நம்பிக்கையுடன் ஜாம்பவான்போல்காட்சிதந்த மஹிந்த 21ஆம் திகதி வெள்ளியன்று இடம்பெற்ற சம்பவத்தால் நிலைகுலைந்து போயிருக்கிறார். தொலைவில் உள்ளவர்களிடையேயிருந்து தனது போட்டியாளரை எதிர்பார்த்துக் கொண்டிருந்த மஹிந்தவுக்கு அவருக்கு அருகிலிருந்தவரே இன்று பலத்த போட்டியாளராக மாறியிருக்கிறார்.

ஒன்பது வருட அரசியல் அஞ்ஞானவாசத்துக்குப் பிறகு சந்திரிகா பூதாகரமான தோற்றத்துடன் அரசியலில் பிரவேசித்திருக்கிறார். 'என்னை ஓரங்கட்டினார்கள், வெளியில் சொல்ல முடியாத வெட்கக்கேடான விதத்தில் என்னை நடத்தினார்கள். இப்போது என் தாய்வீட்டுக்கு வந்த மகிழ்ச்சியோடு இருக்கிறேன்' எனது அவர் தெரிவித்த கருத்துகள் அவரது அரசியல் எதிரிகளின் உள்ளங்களைக் கூட ஊடுருவிச் செல்லவல்லனவாக இருக்கின்றன.

சந்திரிகாவின் அரசியல் வாழ்க்கை முடிந்துவிட்டது என்று இருந்தவர்களுக்கு அவர் வரவு பேரிடியாக அமைந்திருக்கிறது.

சந்திரிகா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தாபகரின் புதல்வி. தன் தந்தை, தாய் இருவரும் இந்த நாட்டின் பிரதமர்களாக இருந்திருக்கிறார்கள் என்று பெருமைபேச வல்லவர். அவரது பெற்றோர் இலங்கை அரசியலில் மாறுதல்களை ஏற்படுத்தியவர்கள்.

சந்திரிகாவின் தந்தை பண்டாரநாயக்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பித்து நான்கு ஆண்டுகளிலேயே ஆட்சியைப் பிடித்தவர். தனிச் சிங்களச் சட்டத்தை இந்நாட்டில் நடைமுறைப்படுத்திய இனவாதச் சிங்களத் தலைவர். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தன் கணவரைவிட எவ்விதத்திலும் குறைந்தவரல்லர். உலகின் முதலாவது பெண் பிரதமர் என்ற பெருமையைப் பெற்றவர். தனது கணவரால் தொடக்கி வைக்கப்பட்ட வெள்ளையர் அதிகாரத்தை முற்றாக அகற்றும் பணியை நிறைவு செய்துகாட்டியவர். முதலாவது குடியரசு அரசமைப்பைஅறிமுகம்செய்து டொமினியன் அந்தஸ்து நிலையிலிருந்த இலங்கையை முழுச் சுதந்திர நாடாக்கியவர். சிங்களத்தையும் பௌத்தத்தையும் முன்னிலைப்படுத்தியவர்.

சந்திரிகா இரு பிரதமர்களின் புதல்வியாக மாத்திரமன்றி, நல்ல மனிதரின் மனைவியாகவும் அறியப்பட்டவர். சந்திரிகாவின் கணவரான குமாரதுங்க தமிழர்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்த ஒருவர். தமிழர்களின் வாக்குகளையும் பெற்றுப் பதவிக்கு வந்த ஒரே ஜனாதிபதி என்ற பெயரும் சந்திரிகாவுக்கு இருக்கிறது. எனினும், பதினொரு வருடங்களாக ஆட்சி செய்தபோதிலும் தமிழர்களுக்கு எந்த நன்மையும் செய்யாமலேயே பதவியை விட்டகன்றவர்.



அவரது சீடனாக இருந்தவர்தான் இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. சந்திரிகாவின்நம்பிக்கைக்குரியவர்களுள் ஒருவராக இவர் ஒருகாலத்தில் விளங்கியிருந்தார். மஹிந்தவின் தந்தையார்கூட சந்திரிகாவின் தந்தை பண்டாரநாயக்காவுக்கு விசுவாசமான நண்பராகவும், அரசியல் பங்காளியாகவும் இருந்தவர். இந்தப் பின்னணிகளால்தான் மஹிந்தவின் கைஓங்குவதற்கு சந்திரிகாவும் காரணமாக இருந்திருக்கிறார்.

ஆனால், மஹிந்த ஜனாதிபதியானதும் அவரது போக்கு வித்தியாசமாகிப்போனது. தனது தலைவியாக ஒரு காலத்தில் விளங்கிய சந்திரிகாவையே அரசியல் தேவை கருதி முற்றுமுழுதாக ஓரங்கட்டினார். இந்த ஓரங்கட்டலுக்குச் சந்திரிகா கொடுத்த பதில்தான் இப்போது மஹிந்தவுக்கு பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளராகப் பணியாற்றிய சக்திமிக்க தலைவர்களுள் ஒருவரான மைத்திரிபால சிறிசேனவை மிக நாசூக்காகச் சந்திரிகா மஹிந்தவிடமிருந்து பிரித்திருக்கிறார். கடைசி நிமிடம்வரைக்கும் மஹிந்த தரப்பார் இதுதொடர்பாக எதையும் அறிந்திருக்கவில்லை என்பதுதான் பரிதாபகரமானது.

சபைக்கு வந்து கலகலவென்று உரையாடித் தனது சகாக்களுடன் மதிய உணவு அருந்திச் சென்ற மைத்திரிபால சிறிசேன இரண்டு மணித்தியால இடைவெளிக்குள்ளாகவே கொழும்பு நகர மண்டபத்தில் ஊடகவியலாளர்கள் முன்னிலையில் எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருந்தார்.

எதிரணி வேட்பாளராக ரணில், சஜித், கரு, ஷிராணி என்று பட்டியலிட்டு மக்கள் ஆய்வு செய்துகொண்டிருக்கையில் ஆளுந்தரப்புக்குள் இருந்தே எவரும் எதிர்பாராத வகையில் எதிரணியின் பொதுவேட்பாளரை தேர்வுசெய்ததன் மூலம் சந்திரிகா இலங்கை அரசியலில் அதிரடி மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறார்.

இரகசியமான காய்நகர்த்தல்கள் மூலம் வேட்பாளரை வெளிக்கொணர்ந்தது மாத்திரமன்றி அவர் எல்லோரும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஒருவராக இருப்பதும் சந்திரிகாவின் உச்ச அரசியல் சாணக்கியம் எனலாம்.



மைத்திரிபால சிறிசேன எதிரணியின் பொதுவேட்பாளராக அறிவிக்கப்பட்டமை பொதுமக்கள் மத்தியில் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது.

மஹிந்த வெல்லப்படமுடியாதவர் என்ற மாயை நொடிப் பொழுதில் தகர்த்தெறியப்பட்டிருக்கிறது. மஹிந்தவுக்கு எதிரான கருத்துள்ளவர்கள் மத்தியில் மைத்திரிதான் சரியான போட்டியாளர் என்ற மகிழ்ச்சி கரைபுரண்டோடுகிறது. நான் கொடுத்த முட்டை அப்பங்களைச் சாப்பிட்டுவிட்டு இப்படிச் செய்துவிட்டார்களே என்று மஹிந்தவைப் புலம்ப வைத்திருக்கிறது. வெளியேறியவர்களின் கோப்புகள் என்னிடம்தான் இருக்கின்றன, கண்ணாடி வீட்டுக்குள் இருந்துகொண்டு கல்லெறிய அவர்கள் முயலக்கூடாது என்று மிரட்டல் தொனியில் பேசவும் வைத்திருக்கிறது.

மைத்திரிபாலவின் கோப்புகள் மஹிந்த வசம் இருப்பது உண்மையானால் அவை மைத்திரியின் தவறான நடவடிக்கைகள் சம்பந்தப்பட்டனவாகவே இருக்க வேண்டும். சரியான நடவடிக்கைகளுக்குக் கோப்பு வைப்பதற்கோ அவை தன்னிடமிருக்கின்றன என்று பயமுறுத்துவதற்கோ மஹிந்த விவரம் தெரியாதவரல்லர். இப்போது எழுகின்ற கேள்வி என்னவென்றால், பிழையான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த ஒருவரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளராகவும், சுகாதார அமைச்சராகவும் மஹிந்த இவ்வளவு காலமும் வைத்திருந்தமை சரியானதா என்பது தான்.

மைத்திரிபால சிறிசேன அணி மாறிய தினமான நவம்பர் 21ஆம் திகதி வெள்ளியன்று காலையிலிருந்து மதியம்வரை ஆற்றிய தவறுகள் மட்டும் திடீர்க் கோப்புகளாக மாறியிருந்திருக்க முடியாது. ஏற்கனவே பல ஆண்டுகளாக மைத்திரி செய்த தவறுகள், சட்டவிரோத நடவடிக்கைகள் என்பவை பற்றிய தகவல்களே கோப்புகளாகி இருக்கமுடியும். இது சரியாயின் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த எல்லோருடைய கோப்புகளும் மஹிந்தவின் கையிலிருக்க வேண்டும். ஒருவருக்கு மாத்திரம் கோப்புத் திறந்து அதனைப் பராமரிப்பது பயனற்றதொன்று. இது ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தனது அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரினதும் பதவி விலகல் கடிதங்களை தனது சட்டைப்பைக்குள் வைத்துக்கொண்டிருந்த கதையாகத்தான் இருக்கிறது.



இப்போது மஹிந்தவுடன் இருப்பவர்கள் அனைவரும் கோப்புகளுக்குப் பயந்து வாய்மூடியிருப்பதாகவே தெரிகிறது.

எவ்வாறெனினும் மஹிந்த பற்றிய கோப்புகள் தம்வசமிருப்பதாகவும், தாங்கள் ஆட்சி அமைத்தால் அவை தூசு தட்டி எடுக்கப்படும் எனவும் சந்திரிகா சொல்லியிருப்பது இங்கு கவனிக்கத்தக்கது. இவற்றை அடிப்படையாக வைத்துத் தான் சந்திரிகா தனது காய்களை நகர்த்தி வருகின்றார். பொருத்தமான ஆளை வளைத்துப் பிடித்திருக்கின்றார்.

தொலைபேசி உரையாடல்கள் அரசால் ஒட்டுக்கேட்கப்படலாம் என்ற காரணத்தால் செய்மதி உரையாடல்கள் மூலம் மைத்திரியுடன் தொடர்புகொண்டு கடைசி நேரம் வரைக்கும் எவரும் சந்தேகம் கொள்ளாத வகையில் செயற்பட்டிருக்கிறார்.

இது மேற்குலக நாடுகளின் அனுசரணையுடனேயே இடம்பெற்றது என்று அரச தரப்புக் கூறத் தொடங்கியிருக்கிறது. நோர்வேயும், புலம்பெயர் தமிழர்களும் இதன் பின்னணியில் இருக்கிறார்கள் என்றும் அது தெரிவித்திருக்கிறது.

என்றாலும் ஆட்சி மாற்றம் ஒன்று நிகழவேண்டுமென்ற கருத்து மக்களிடையே பரவலாகக் காணப்படுகிறது.

ஒரு குடும்பத்தவரின் ஆதிக்கத்தில் நாட்டைத்தொடர்ச்சியாக விட்டுவைப்பது சர்வாதிகாரத்துக்கு வழிவகுக்குமென்ற அச்சமும் உலா வருகின்றது. இந்த அரசியல் நிலைமையில் தமிழ், முஸ்லிம் மக்களின் தலைவர்கள் செயற்படப் போகின்ற விதத்தில்தான் சிறுபான்மை மக்களின் விடிவு தங்கியிருக்கிறது.

# கருத்து

## வாசகர் திருமுகம்

### அலைச்சலுக்கு முடிவில்லையா?

நான் பருத்தித்துறை மின்சார நிலையத்துக்கு 5 தடவைகள் மின்சார இணைப்பை பெறுவதற்குச் சென்றேன். ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு ஆவணம் இல்லை என்று திருப்பி அனுப்பி விடுகின்றனர். இதனை ஒரு தடவையில் கூறினால் நாம் எல்லாவற்றையும் கொடுத்து விடுவோம். எமது வறுமையையும் முதுமையையும் இயலாமையையும் ஏளனமாகப் பார்த்து இப்ப தானே வந்து குடியமர்ந்ததுகள் அதற்குள் மின்சாரம் தேவையா என்று எமது காதுபட குத்தல் கதைகள் கூறுகின்றனர். (வடக்கின் வசந்தம் திட்டம்)

குறிப்பிட்ட சில மக்களுக்கு மின்சாரம் கிடைத்துவிட்டது. மிகுதிப் பேரும் அதே இடம் பெயர்ந்தவர்கள். அவர்களை வேறு கண்கொண்டு பார்க்கின்றார்கள். அந்த அலுவலகத்துக்கு ஒரே ஒரு தொலைபேசி இணைப்பு மட்டுமே உள்ளது. அதனோடு தொடர்பு கொண்டு எமது விண்ணப்பப் படிவம் தொடர்பாகக் கதைத்தால் சம்பந்தப்பட்டவர் வெளியில் சென்று விட்டார், அவரது கைத் தொலைபேசி இலக்கம்தாறோம், நீங்கள் கதையுங்கள் என்று சொல்கின்றார்கள். அவருடன் கதைத் தால் நீங்கள் வேலையாக நிற்கும் போது எடுக்கக்கூடாது. என்னைச் சந்திக்கவேண்டும்ானால் காலை 9மணிக்கு முதல் வந்தால் சந்திக்கலாம் என்று தொடர்பு துண்டிக்கப்படும். நாம் எத்தனை மணிக்கு பஸ் எடுத்து 9 மணிக்கு முதல் போய் இவர்களைச் சந்திப்பது? எந்த நிறுவனமும் பொதுமக்கள், நிறுவன ஊழியர்களைச் சந்திப்பதற்கு வசதியாக ஊழியரோடு தொ்டர்பாடலுக்கு வழி வகுக்கும். இங்கு பில் கட்டு வது போல் ஊழியர் கண்ணாடி ஜன்னலுக்குள் இருப்பார். அவர் தனது கைப்பேசி, பொது நம்பர் என்பவற்றுக்குவருகின்ற அழைப்புக்களைக் கதைத்து இடையிடையே எமது அலுவல் களையும் பார்ப்பார். இதற் கென்று நிரந்தர ஒரு ஊழியரை நியமிக்கலாம் எஞ்சினியரை சந்திப் போம் என்றால் எமது கதை கேட்க அவருக்கு நேரமும் இல்லை. ஒரு வேலைக்குப் போனால் ஊழியர்கள் ஒவ் வொருவரும் கைகாட்டுகிறார்கள். நான் மூன்றாவது தடவை சென்றபோது ஆவணங்கள் தொலைந்து விட்டது என்று கூறினார்கள். மீண்டும் ஒரு சில ஆவணங்களை எடுத்து வருமாறு கூறினார்கள். தந்துவிட்டேன் தம்பி என்று சொன்னேன். நீங்கள் என்னிடம் தரவில்லை என்றார்கள். உங்கள் நன்மைக் குத்தான் சொல்கின்றோம். கெதியாத் தந்தால் விரைவில் மின்சாரம் தருவோம் என்றார்கள் என் விதி என்றேன். நான்சென்ற அத்தனை நாளும் 2, 3 மணித்தியாலம் செலவழித்து இறுதியில் உங்கள் விண்ணப்பம் மேலிடத்துக்கு அனுப்பப்பட்டுவிட்டது. அவர்கள் அனுமதி கோரியிருக்கிறோம் என்றார்கள். இப்படியே நான் கரை மாதம் கடந்து விட்டது இன்னமும் ஒரு முடிவில்லை. நேரடியாக முறையிட்டால் பின்பு பழி வாங்கலுக்கு ஆளாகு வோம் என்ற பிரச்சினையும் உண்டு. நிர்வாகத்தில் இருந்து ஊழியர் வரை அமைச்சரின் ஆள்கள் என்றால் நாம் யாரிடம் போய் முறையிடுவது? இப்படியொரு சேவை நிலையத்தை ஏன் பருத்தித்துறையில் திறந்தார்கள்? என்று புரியவில்லை.

தயவு செய்து இந்தப் பிரச்சினைகளை தங்களது பத்திரிகையில் பிரசுரித்து எம்மைப் போன்ற வய தானவர்களுக்கு ஒரு விமோசனத்தை ஏற்படுத்தித் தருமாறு வேண்டி நிற்கின்றோம். தயவு செய்து இதனை பிரசுரிப்பதால் வடமராட்சி கிழக்கு மக்களுக்கு மட்டுமல்ல பொதுவாக எல்லா வடமராட்சி மக்களுக்கும் விமோசனம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம்.

*க.விசயரத்தினம்*
*ஆழியவளை, தாளையடி.*

### உரிய காலத்தில் கிடைக்குமா?

வடமாகாணத்தில் உள்ள உப தபாலகங்களில் வர்த்தமானிகளை உரிய காலத்தில் பெற முடியாதுள்ளது. வாராந்தம் வெளியிடப்படும். வர்த்தமானிகளை இரு வாரங்களுக்குப் பின்னரே பார்வையிட முடிகிறது. இது பற்றி உப தபால் அதிபர்களிடம் வினவும் போது தமக்கு அவை கால தாமதமாகவே கிடைக்கப்பெறுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். இந்தக் கால தாமதத்தால், பெரும்பாலான வேலை வாய்ப்புக்கள் தொடர்பாக விண்ணப்ப முடிவுத் திகதியின் பின்னரே நாம் அறிகின்றோம். சாதாரண தபால்களே இலங்கையின் எப்பாகத்திலிருந்து வேறு எப்பாகத்துக்கும் மூன்றோ, நான்கோ நாள்களில் சென்றடையக் கூடியதாய் உள்ளது. இந்தக் காலகட்டத்தில் வர்த்தமானிகள் மாத்திரம் இந்த அளவுக்கு தாமதிப்பது ஏன்? திட்டமிடப்பட்டே தாமதித்து தபாலில் இடப்படுகிறதா என்றே எம் மனதில் கேள்வி எழுகின்றது. தயவு செய்து, இனிமேலாவது இந்த விடயத்தைக் கருத்தில் கொண்டு உரிய காலத்தில் வர்த்தமானிகள் கிடைக்கப் பெறுமாறு ஒழுங்கு செய்து தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*பாதிக்கப்பட்ட இளைஞர்கள், யுவதிகள்*

### கேலிச் சித்திரம்



நன்றி: லங்காதீப

## காத்திரு..! போராடு..! காத்திரு..!

தமிழகத்தில் ஈழத்தமிழருக்கு ஆதரவாக நடக்கும் போராட்டங்கள் குறைந்துவருகின்றன. புதிய அரசின் கொள்கை, ஜெயலலிதாவின் பதவியிறக்கம், தமிழகக் காவல்துறையினரின் அடக்குமுறைகள், உட்கட்சிப் பூசல்கள், ஈழ மற்றும் புலம்பெயர் தமிழர்கள் மீதான நம்பிக்கையீனம் போன்ற காரணங்கள் இந்தக் குறைவுக்குக் காரணமாகியுள்ளன.

அத்துடன் இதற்குப் பிறிதொரு காரணமும் சேர்க்கப்படவேண்டியதாயிருக்கின்றது. சீசன் போராட்டங்கள் எப்போதும் இப்படித்தான் நலிவடைந்து போகும் என்று சொல்லப்படுவதுண்டு. அதாவது நேரம் கிடைக்கின்றபோது மட்டும் கோஷம் போடும் போராட்டங்களும், கொடி காட்டும் எதிர்ப்புக்களும் இப்படித்தான் நீர்த்துப் போனதாக வரலாறு உண்டு. அதற்கு பிந்திய உதாரணமாக ஈழம் குறித்த தமிழக போராட்டங்களை எடுத்துக் கொள்ள முடியுமா என்று சிந்திக்கும் மையத்தில் வந்துநிற்கிறது தமிழகம்.

2009 இல் போர் அதிர்ந்து கொண்டிருந்த போதும், மக்கள் நலன்புரி நிலையங்களில் அடைக்கப்பட்டபோதும் தமிழகம் தீயாகக் கொதித்துக் கொண்டிருந்தது. ஈழ விடுதலை உணர்வு தீயாகப் பரவியது. ஆனால் அதுவே கொஞ்சம் கொஞ்சமாக மங்கிவந்த வேளையில் மாணவர் போராட்டம் வெடித்தது. தமிழகத்தில் சாத்தியமேயில்லை என்ற எண்ணத்தோடு இருந்த மாணவர் எழுச்சி திடீர் என்று வானைப் பிளந்தது. ஐ.நா. வரை அதிர்ந்தது. ஆனால் அதுவும் சில அதிர்வுகளோடு பல்வேறு கட்சிகளாக, குழுக்களாகப் பிரிந்துபோய்விட்டது. இப்போது அந்தப் போராட்டங்களை நடத்தியவர்களில் ஒரு சிலரைத் தவிர மற்றைய எவரையும் கண்டுபிடிக்கவே முடியாது.

அதன் பின்னர் முள்ளிவாய்க்கால் நினைவாலய உடைப்பின்போது சில அதிர்வுகள் கேட்டன. அதுவும் அடங்கியது. பின்னர் மீனவர் கைதுக்காகவும், லைகா மொபைல் தயாரித்த கத்தி படத்துக்காகவும் போராட்டங்கள் நடந்தன. இறுதியாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திருப்பதிக்கு சென்றபோது அதனை எதிர்த்து நடத்திய போராட்டங்களோடு அடுத்த போராட்டம் எப்போது வரும் என்று காத்திருக்கின்றது தமிழகம்.


இப்படியாக ஈழம் குறித்த தமிழகப் போராட்டங்கள் தொய்ந்து மறைந்து போவதற்கு இதுதான் காரணம். அதாவது ஒரு விடயத்தில் மையமாகத் தரித்து நின்று போராடாத குணம். குறித்த பிரச்சினைக்காகப் போராடி அதில் வெற்றியையோ, தோல்வியையோ சந்தித்தபின் அடுத்த கட்டத்துக்கு நகராது, அதை அப்படியே விட்டுவிட்டு அடுத்த போராட்டத்துக்குத் தயாராகிவிடும் பாய்ஞ்சான் குணம்தான் இந்தப் பின்னடைவுக்குப் பிரதான காரணம்.

முன்னெடுக்கப்படும் போராட்டத்தை வெற்றி காணும்வரை தொடர்வதற்கு கட்சிசார், இயக்கம்சார் போராட்டங்களும், கட்சிகளுக்குள் இருக்கின்ற அதீத ஜனநாயகத்தன்மையும் பிரதான காரணங்களாக இருக்கின்றன.


அத்துடன் தமிழர்கள் மத்தியில் பண்பாட்டு அடையாளமாகவே மாறிவிட்ட தலைமைக்கான போட்டியும், துரோகத்தனமும் சேர்ந்தே தமிழகப் போராட்டங்களை மங்கச் செய்துவிட்டன. இப்படியே போனால் இனி அடுத்த தடவை ராஜபக்ஷ திருப்பதி வரும் வரைக்கும், ஐ.நா சபை இலங்கை விடயத்தை எடுத்துக் கொண்டு பேசத் தொடங்கும் வரைக்கும், தமிழக மீனவர்கள் கூட்டாகப் படுகொலை செய்யப்படும் வரைக்கும் போராட்டங்களுக்காகக் காத்திருக்க வேண்டியதுதான்.

பத்தி எழுத்து

# சிறுவர்





## முட்டை



முட்டை என்று சொன்னாலே உங்களுக்குக் கோழி முட்டை மட்டும்தானே ஞாபகத்துக்கு வரும். ஏனைய பறவைகளின் முட்டை பார்ப்பதற்கு எப்படி இருக்கும், என்ன வண்ணத்தில் இருக்கும் என்பதை எல்லாம் தெரிந்துகொள்ள ஆசையா?

✱ உலகிலேயே மிகப் பெரிய முட்டை 'ஒஸ்ட்ரிச்' எனப்படும் நெருப்புக்கோழியின் முட்டைதான். ஒரு முட்டையின் எடை மட்டுமே கிட்டத்தட்ட ஒன்றேகால் கிலோ இருக்கும்.

✱ ரொபின் பறவையின் முட்டைகள் வெளிர் நீலத்தில் அழகாக இருக்கும். ஒருநாளைக்கு ஒரு முட்டை வீதம் நான்கு முட்டைகளை மட்டுமே இட்டு அடை காக்கும்.



✱ ஈமுக் கோழி முட்டையும் நெருப்புக்கோழி முட்டையைப்போலவே கொஞ்சம் பெரிதாக இருக்கும். இந்த முட்டை 700 கிராம் எடை கொண்ட தாகவும் கரும்பச்சை நிறத்திலும் காணப்படும்.

✱ 'ஹம்மிங் பேர்ட்' பறவையின் முட்டைதான் உலகிலேயே சிறிய முட்டை. ஒரு பட்டாணிக் கடலையின் அளவுக்குத் தான் முட்டைய்பின் அளவு இருக்கும்.

✱ சிட்டுக் குருவிகளின் முட்டை இளம் பழுப்பு நிறத்தில் அடர் பழுப்பு வண்ணப் புள்ளிகளுடன் காணப்படும்.

✱ காசோவரி பறவையின் முட்டைகள் இளம் பச்சை, நீலமும் பச்சையும் கலந்த நிறங்களில் காணப்படும். ஒரே நேரத்தில் 8 முட்டைகள் வரை இடும்.

✱ மயில்கள் அடர் பழுப்பு வண்ணத்தில் முட்டைகளை இடும். ஒரே நேரத்தில் 4 முதல் 8 முட்டைகள் வரை இட்டு அடை காக்கும்



**அ.றெமிங்கன்,**
தரம்– 8
யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி.



**வேலையாள்கள் தேவை**
யாழ். பஸ்நிலையத்துக்கு சமீபமாக உள்ள சிறுகைத்தொழில் நிறுவனத்துக்கு வாகன சாரதி (A.D) மற்றும் ஆண், பெண் வேலையாள்கள் தேவை.
தொடர்பு: 021 300 3000 (54859) (45.6.3)

**நாதா மருத்துவ நிலையம்**
✱ பாரிசவாதம், ஆஸ்மா, தீராத புண்கள், மூட்டுவாதம், உயர் குருதி அமுக்கம்
✱ தீர்க்க முடியாதெனக் கருதும் வேதனை தரும் நோய்
✱ குழந்தையின்மை - நிபுணத்துவ மருத்துவர்.
TP: 077 321 2740
வங்கி முன்லேன், சாத்தாவத்தை வைரவர் கோயிலடி (ஜெகபதிவீடு), மானிப்பாய். (54858) (12.3)

**சேவை**
தாவடியில் மிருகவைத்திய சேவைக்கு
தொடர்பு: 077 973 8802 (54830) (45.6.3)

**செல்லா சினிமா** யாழ்ப்பாணம்
விஜய், சமந்தா நடிப்பில்
**கத்தி**
(தினசரி 4 காட்சிகள்)
10.30, 2.30, 6.30, 9.30
எமது செல்லா சினி திரையரங்கில் உங்களது விளம்பரங்களை காட்சிப்படுத்த
அழையுங்கள்: 077 326 6949



**கூறுவிலை கோரல்**
**தேர் தரிப்பிட மீள் நிர்மாணம் பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்**
மேற்படி ஆலயத் தேர் தரிப்பிடத்தை மீள நிர்மாணிப்பதற்குப் பொருத்தமான அனுபவமும், ஆளணி மற்றும் உபகரண வசதிகளும் கொண்ட நிர்மாண ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கூலிக்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. இம்மீள் நிர்மாணத்திற்குத் தேவையான கட்டடப் பொருள்களைப் பரிபாலனசபை வழங்கும். கூறுவிலை சமர்ப்பிப்பதற்கான படிவத்தையும் வேலை பற்றிய விவரங்களையும் பரிபாலன சபைப் பொருளாளரிடமிருந்து (தொலைபேசி இல.0772493083) பெற்றுக்கொள்ள முடியும். வழங்கப்படும் பொறியியல் ஆலோசனைகளுக்கேற்ப இவ்வேலையை 03 மாத காலத்தினுள் நிறைவேற்றுதல் வேண்டும். கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித்திகதி 22.12.2014 ஆகும். கூறுவிலைகள் அனுப்பப்பட வேண்டிய முகவரி: பொதுச் செய்லாளர், பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் தேவஸ்தானப் பரிபாலன சபை, பொன்னாலை, சுழிபுரம் ஆகும். கூறுவிலைகளை நேரடியாகப் பொருளாளரிடமும் ஒப்படைக்கலாம்.
பொதுச் செயலாளர், பரிபாலன சபை,
பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்.
12.12.2014 (54839)(12.3)

**JTC**
இலுப்பையடிச்சந்தி, யாழ்ப்பாணம்
BA.Part I
✱ ENGLISH
By.R.MAHES WARAN
BA (Dip in Eng)
ஆரம்பம் 13.12.14
Sat / Sun - 9-10/10-11
✱ தமிழ் K.தர்மராஜா (MA)
ஏனைய பாடங்களும்


**கிருஷ்ணா அடகு சேவை**
பதிவு இல:J/DS/BR/472
மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2013 ஆம் ஆண்டு 30.11.2013 இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி (15.01.2015) இற்கு முன்பு மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் (15.01.2015) ஆம் திகதி விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.
உரிமையாளர்: A.S.Surendran
இல.9, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5046
இல.370, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். 021 490 0311 (சி/18237)(4.3.6)



## வணிகம்

# மொபிடெலின் யாழ்.கிளை நவீன வசதிகளுடன் திறப்பு





யாழ்ப்பாணம்.டிசெ.12

மொபிடெல் நிறுவனத்தின் நவீன வசதிகளுடன் விஸ்தரிக்கப்பட்ட யாழ்ப்பாணக் கிளை நேற்று யாழ்.ஸ்ரான்லி வீதியில் திறந்து வைக்கப்பட்டது.

நிறுவனத்தின் பிரதான முகாமையாளர் ரஞ்சித் ஜி ரூபசிங்க மற்றும் சிரேஷ்ட முகாமையாளர் சமன் பெரேரா உள்ளிட்ட அதிகாரிகள் விருந்தினர்களாகக் கலந்து கொண்டு கிளையை வைபவ ரீதியாகத் திறந்து வைத்தனர்.

யாழ்ப்பாணத்துக்கான கிளை இதுவரை கே.கே.எஸ் வீதியில் செயற்பட்டு வந்த நிலையில் தற்போது நவீன வசதிகளுடன் தொழில்நுட்ப சேவைகளை வழங்கக்கூடிய வகையில் இந்தக் கிளை செயற்படவுள்ளது.

பின் தங்கிய கிராமங்களுக்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்காக யாழ்ப்பாண வாடிக்கையாளர் சேவைக் கட்டமைப்பும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் 3 ஆவது சேவை நிலையமாகவும் இந்தக் கிளை அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வட மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கான சேவைகளை வழங்கும் வகையில் அழைப்பு நிலையமும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கிளையில் புதிய கையடக்க தொலைபேசிகள், டொங்கிள்கள், டப்லெட்கள், டேட்டா சாதனங்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. இதேவேளை ரயில் சேவைக்கான முற்பதிவு, விமான சேவை, கொள்வனவு சேவை, சுகாதாரப் பராமரிப்பு சேவை, விசேட ஹோட்டல்கள் முற்பதிவு, ஓட்டோ வாடகை சேவை, தொலைதூரக் கல்விச் சேவை, எரிபொருள் கார்ட் முறை, போன்ற சேவைகளும் இங்கு விஸ்தரிப்புச் செய்யப்பட்டுள்ளன. (த-14)

# ஏ.எம்.டபிள்யூ. ரயர் துறை

## புதிய சஞ்சிகை வெளியீடு



இலங்கையின் கூட்டாண்மைத்துறையில் முன்னோடி நிறுவனமாக திகழும் அசோசியேட்டட் மோட்டர்வேய்ஸ் பிறைவேற் லிமிடெட் நிறுவனம், இலங்கையின் ரயர் துறை மற்றும் நிறுவனங்கள் குறித்த விளம்பரங்களை உள்ளடக்கிய புதிய சஞ்சிகை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்தச் சஞ்சிகைக்கு 'அபி எக்கட்ட' (நாம் ஒன்றாக) என பெயரிடப்பட்டுள்ளது.

இந்த அறிமுக நிகழ்வு கண்டி, ஏர்ள்ஸ் ரீஜென்ஸி ஹோட்டலில் ஏ.எம்.டபிள்யூ நிறுவனத்தின் உற்பத்தி பணிப்பாளர் புஷ்பிக ஜனதீரவின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது.

இலங்கையின் ரயர் விநியோகத்தர்கள் மத்தியில் இந்த சஞ்சிகை இலவசமாக விநியோகிக்கப்படவுள்ளது.

எட்டுப் பக்கங்களைக் கொண்ட இந்த 'அபி எக்கட்ட' (நாம் ஒன்றாக) சஞ்சிகையில், ரயர் விநியோகத்தர்களின் விவரங்கள், ரயர் உற்பத்தியில் பின்பற்றப்படும் புதிய நுட்ப முறைகள் மற்றும் ரீபில்டிங் துறை, பிறந்தநாள் மற்றும் திருமண நாள் வாழ்த்துக்கள் மற்றும் துறையுடன் தொடர்புடைய இதர பொருத்தமான விடயங்கள் போன்றவை உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஏ.எம்.டபிள்யூ இன் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைப் பிரிவின் சிரேஷ்ட முகாமையாளர் நிமல் எஸ்.ரத்நாயக்க இந்த 'அபி எக்கட்ட' (நாம் ஒன்றாக) சஞ்சிகை நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில், நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான ரயர் விநியோகத்தர்கள் காணப்படுகின்றனர். அவர்களின் மூலமாக ரயர் உற்பத்தித் துறைக்கு நிகரற்ற பங்களிப்பு வழங்கப்படுகிறது. இது போன்றதொரு சஞ்சிகையை அறிமுகம் செய்யும் திட்டத்தை வேறெந்தவொரு நிறுவனமும் முன்னெடுத்ததில்லை. இந்தச் சஞ்சிகையில் ரயர் விநியோகத்தர்கள் பற்றிய வியாபார விவரங்கள், அவர்களின் அனுபவங்கள் மற்றும் சிந்தனைகள், இந்தப் பெரிய துறையில் எழும் புதிய முயற்சிகள் போன்ற பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன – என்றார். (த)

## மரண அறிவித்தல்

### பூதப்பிள்ளை பூலோகசுந்தரம்



புன்னைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும், பெரியவளவு, ஆஸ்பத்திரி வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட பூதப்பிள்ளை பூலோகசுந்தரம் நேற்று (11.12.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூதப்பிள்ளை - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகசபாபதி - தங்கராணி தம்பதியரின் அன்பு மருமகனும், சேதுப்பிள்ளையின் (திரவியம்) பாசமிகு கணவரும், ருஷிவா (Sea Care Colombo - 10), காலஞ்சென்ற தேனுசிவா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞானசக்தி (பிரதி அதிபர் விபுலானந்த மகாவித்தியாலயம் தெமட்டகொட) அவர்களின் அன்பு மாமனும், விநாயகமூர்த்தி, காலஞ்சென்ற வைரவநாதன் ஆகியோரின் மைத்துனரும், யோகேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் சகலனும், மட்டுவில் சந்திரபுரம் வைரமுத்து-சிவபாக்கியம் தம்பதியரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2014) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் ஒரு மணியளவில் விளாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


பெரியவளவு,
ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

தகவல்:
மகன் - ருஷிவா
077 742 5486, 077 350 6702,
021 791 3361

(54865)(45.6.3)

## மரண அறிவித்தல்

### Dr.சிவஞானம் விவேகானந்தராஜா LLB (Attorney at Low)



கோண்டாவில், குமரகோட்டத்தைப் பிறப்பிடமாகவும், தாவடி தெற்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட Dr.சிவஞானம் விவேகானந்தராஜா 08.12.2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவஞானம் - மனோன்மணி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியரின் மருமகனும், தெய்வநாயகியின் அன்புக் கணவரும், Dr.சுந்தரவல்லி (ஜேர்மனி), கார்த்திகேயன் (கணக்காளர் - Australia), ஆனந்தவல்லி (பொறியியலாளர் UK) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மரியரசன் (C.N.C Programmer - Germany), அஜந்தினி (முன்னாள் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் - Austrelia), Dr.சிவகுமாரன் ஆகியோரின் மாமனும், சாருகன் (ஜேர்மனி), விகாசினி (Australia), விசாகனன் (Austrelia), சேயோன் (U.K), அபிதா (U.K) ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரானந்தராஜா, அமிர்தானந்தராஜா, சிவானந்தராஜா மற்றும் ஏகானந்தராஜா (Germany) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.12.2014 ஞாயிற்றுக்கிழமை பத்தானை வீதி, தாவடி தெற்கு, கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்தானை வீதி,
தாவடி தெற்கு, கொக்குவில்.

(54861)
(12.3.6)

தகவல்: குடும்பத்தினர்.
021 205 2627

## மரண அறிவித்தல்

### மு.வ.சுப்பிரமணியம் இரத்தினசபாபதி (சபா)



கொக்குவில் மேற்கு, மணியர்பதி வீதியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸினை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இரத்தினசபாபதி 09.12.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பவளம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, மகாதேவா மற்றும் பாக்கியநாதன் (ஜேர்மனி), பரமேஸ்வரி, ஞானேஸ்வரி (பிரான்ஸ்), கமலாதேவி, அசோக்குமார் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் (16.12.2014) செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்


மணியர்பதி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
(54827) (45.6.)

தர்மரட்ணம் கமலாதேவி
(பச்சைக்கிளி)
021 205 2095

## மரண அறிவித்தல்

### திருமதி லூர்த்துநாயகி பிரான்ஸிஸ்

(பாக்கியநாதன் சோபிதாமணி- ஓய்வுபெற்ற ஆசிரியை)



பிறப்பு 31.10.1931 — இறப்பு 10.12.2014

26ஏ. பீச் றோட். குருநகர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி லூர்த்துநாயகி பிரான்ஸிஸ் (பாக்கியநாதன்) 10.12.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பித்துரை பாக்கியநாதனின் (மிருதங்க வித்துவான்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற வர்களான கிறிஸ்தோப்பிள்ளை - திரேசம்மா தம்பதியரின் மகளும். காலஞ்சென்றவர்களான தம்பித்துரை- ஆரோக்கியம் தம்பதியரின் மருமகளும். திலகம் (ஜேர்மனி). அகிலன் (குரு வீடியோ). மாலா. கபிலன் (துபேலாவாத்தியக் கலைஞர்). நகுலன். எழிலன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும். ஜெரி(ஜேர்மனி). ஜீன். ஆனந்தி. மரினா. ஜரின் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும். கென்டர்சன். ஆசா. பேட்டர்சன். றெமிசா. சாரா. பிபியானா. சரோன். பேர்டினற். மிலின். டயானா. ஜென்சி. டெனிஷ். மிதுன். கருண். சானுகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று (12.12.2014) வெள்ளிக்கிழமை பி.ப 3 மணியளவில் புனித யாகப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு. பின்னர் பூதவுடல் நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார் . உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

26ஏ, பீச் றோட்,
குருநகர்.

(54855)(4.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

# தொழில்நுட்பம்




## நீரில் பயணிக்கும் கார்

நீர் நிலைகளில் மிகவும் வேகமாகப் பயணிக்கக்கூடிய கார் வடிவிலான படகு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. சுவீடன் வாசியான Eduard Gray என்பவரால் வடிவமைக்கப்பட்டுள்ள இந்தப் படகு சுமார் 20 மில்லியன் யூரோக்கள் பெறுமதியானதாகும். இந்தப்படகில் சூரியப் படலம் பொருத்தப்பட்டுள்ளதுடன் சூரியப் படலத்தைப் பயன்படுத்தியே படகு இயங்குவதற்கான மின்சக்தி உற்பத்தி செய்யப்படுகின்றது.

---

## புதிய கண்டுபிடிப்பு



ஒரு முறை பிரிண்ட் செய்த பின் அச்சுத் தாள்களை (Papers) மீண்டும் பயன்படுத்த முடியாது.

எனினும் அவ்வாறு மீண்டும் 20 முறைகள் வரை மீள் பதிப்பு செய்து பயன்படுத்தக்கூடிய தாளைக் கலிபோர்னியாவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இதேவேளை அவற்றில் மீண்டும் பதிப்பு செய்வதற்கு மேலதிக மை (Ink) தேவை இல்லை என்பதும் இதில் உள்ள விசேட அம்சமாகும்.

இந்த தாள்களில் பிரிண்ட் செய்யும் போது எழுத்துக்கள், படங்கள் எதுவும் உடனடியாகத் தென்படாது.

காற்றில் உள்ள ஒட்சிசனுடன் தாக்கமடைந்த பின்னரே எழுத்துக்கள், படங்கள் தென்பட ஆரம்பிக்கும்.

மேலும் இந்தத் தாள்களைச் சூடாக்குவதன் ஊடாக பதிவுகளை அகற்றலை வேகப்படுத்தக்கூடியதாக இருப்பதுடன் இதற்கு 10 நிமிடங்கள் வரை எடுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சதாவதானி கதிரைவேற்பிள்ளை சி.க.கூ. சங்கம் (J/1791)
தம்பசிட்டி - பருத்தித்துறை

யாழ்.மாவட்ட கூட்டுறவு சபையால் 2013/2014ஆம் ஆண்டுக்கான தரப்படுத்தலில் மேற்படி சங்கமானது யாழ்.மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. இதனை நாம் அகமகிழ்ந்து பாராட்டுவதோடு, மேன்மேலும் வளர்ந்து அதன் அங்கத்தவர்களுக்கும், எமது கிராமத்திற்கும் சிறந்த சேவையாற்ற வேண்டுமென உளமார வாழ்த்துகின்றோம்.

Best wishes "கூட்டுறவே நாட்டுயர்வு" Best wishes

வாழ்த்துவோர்: மேலைப்புலோலி சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை, சனசமூக நிலையத்தினர்.

(சி18733)(12.3.6)

## பாராட்டு விழா



1966.04.01 ஆம் திகதி தொடக்கம் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக ஒப்புயர்வற்ற மருத்துவ சேவையை ஆற்றிய வரும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் பத்தாண்டுகள் அரும்பணியாற்றி ஓய்வு பெற்றவரும் கடவுள் என எல்லோராலும் அன்பாக அழைக்கப்படுபவருமாகிய வைத்தியக்கலாநிதி

உயர்திரு **சங்கரப்பிள்ளை அம்பிகைபாகன்**

அவர்களுக்கான பாராட்டுவிழா.

Congratulation

இடம்: **தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபம்**
(சிவன் கோயில் வீதி, சாவகச்சேரி)

காலம்: 2014.12.14 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணி

தலைமை: **யோ.ஜெயக்குமார்** அவர்கள்
(விழாக் குழுத் தலைவர்)

அனைவரையும் வருகைதந்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி/18238) (4.3.6)

**சாவகச்சேரி.** -விழா ஏற்பாட்டுக்குழு-

## மீள் கேள்வி தொடர்பான திருத்த அறிவித்தல்

10.12.2014 ஆம் திகதியில் வெளியிடப்பட்ட வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் மீள்கேள்விக்கான விளம்பரம் திருத்தப்படுகின்றது. இதற்கமைய **சங்கானை மீன் சந்தை** மீள் கேள்விகோரலில் இருந்துவிலக்கப்பட்டுள்ளது.

**திருமதி நாகரஞ்சினி ஜங்கரன்,**
**தவிசாளர்,**
**வலிமேற்கு பிரதேசசபை, சுழிபுரம்.**
12.12.2014

(சி.17989)
(45.3.6)

## PALMYRAH DEVELOPMENT BOARD
MINISTRY OF TRADITIONAL INDUSTRIES AND SMALL ENTERPRISE DEVELOPMENT

PALMYRAH DEVELOPMENT BOARD
REGISTRATION OF SUPPLIERS – 2015

Applications are here by invited from the Suppliers/ Agents/ Cooperative/ Public & Private Companies who wish to register themselves for the supply of under mentioned Goods & Services for the Year 2015.

### GOODS

Item No

1) Stationery (All kinds of stationery including computer & typing paper, etc.)
2) Photocopy paper.
3) Toner (Computer, fax & Photocopy machines).
4) Office equipment (Calculator/ Adding machines, Duplicators & other office equipment).
5) Photocopy machines.
6) Computer & Computer accessories.
7) Steel office equipment.
8) Office furniture (wooden)
9) Materials for uniforms.
10) Electrical equipment.
11) Drinking water.
12) Refrigerators/ Air conditioners.
13) All sizes of tyres & tubes & vehicle batteries.
14) Cushioning of vehicle seats (Uphoistering).
15) Rubber seals, date stamps, plastic name boards.
16) Laboratory chemicals.
17) Laboratory equipments.
18) Laboratory furniture.
19) Laboratory glassware.

### SERVICE

20) All kinds of printing (Letter heads, Posters & Others Printing work).
21) Repairs to all kinds of motor vehicles.
22) Servicing of all kinds of motor vehicles.
23) Repairs to & servicing of all kinds of office machines & equipment (Computers, Printers, Fax machines, Photocopy machines).
24) Repairs to and polishing of office furniture (wooden).
25) Vehicle air c conditioning.
26) Supply of vehicle on rent (cars, vans, cabs, jeeps)
27) Architectural planning, supply of natural flowers & consultancy services.
28) Trade stalls, construction, propaganda equipment, electricity supply for Trade Fairs & Exhibitions.
29) Digital screen printing and textile printing banners, flags.
30) Building construction work (up to 2.0 million).
31) Office partitioning.
32) Web site development, information Technology Solution & Service Provision.
33) Electrical epuipment repairing & servicing.
34) Laundering.
35) Repairs to doors, windows & locks at the office.
36) Repairs to audio visual equipment.
37) Palmyrah based food production machineries & equipment.
38) Palmyrah fibre production machineries.
39) Handicraft tools & equipments.
40) Raw materials for Handicraft production.

### CONDITIONS

1. Separate applications should be sent for each category of items requesting for registration indicating item number and the given description clearly (On one application, it is impossible to register for several categories of items)
2. Applications for registrations for Suppliers/ Services should be made on forms to be obtained on payment of as non - refundable fee of Rs. 1,000/- to the cashier of the Palmyrah Development board before 3:30 PM on any working day of the week. The duly completed application form should be submitted together with the receipt issued in respect for non-refundable fee of Rs. 1,000/-. Application form for registration will be issued from 12th December 2014 to 30th December 2014. Application for registration should be duly completed and sent by registered post to reach the Chairman, Palmyrah Development Board, 1st Floor, National Housing Secretariat, Kanady Road, Jaffna, on or before 31st December or may be deposited in the Tender Box at the Office. The envelope enclosing the application should be marked **"Registration of Suppliers - 2015"** on the top left - hand corner of the envelope.
3. Although quotation for suppliers/ services will be normally called from registered Suppli ers. The Chairman, Palmyrah Development Board reserves the right to call quotations from other sources of suppliers as well.
4. Names of the suppliers who fail to submit quotations, when quotations are called for, or fail to make supplies in stipulated time period or which are not in conformity with samples or specifications and those who supply goods of inferior quality, will be struck off from the list of suppliers without prior notice.
5. Chaiman, Palmyrah Development Board reserves the right to reject applications for registration, without giving any reason whatsoever.
6. Credit facilities should be granted at least for one calendar month, for the clearance of bills, for the supply of goods & services.

Chairman,
Palmyrah Development Board,
1st Floor, National Housing Secretariat,
Kandy Road, Jaffna.

(சி17986)
(12.3)

# உலகச் செய்திகள்



## அபுதாபி ஹோட்டல்களுக்கு படையெடுக்கும் வெளிநாட்டவர்

அபுதாபி, டிசெ.12

அபுதாபி ஹோட்டல்களில் தங்கும் ஒட்டுமொத்த வெளிநாட்டவர்களில் ஜேர்மனியர்கள் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

அபுதாபி ஹோட்டல்களில் தங்கும் வெளிநாட்டவர்களின் பட்டியலை சுற்றுலா மற்றும் கலாசார ஆணையம் வெளியிட்டுள்ளது. இந்தப் பட்டியலில், இந்தியர்கள் முதலிடத்தை பிடித்துள்ளனர் என தெரியவந்துள்ளது. இந்தியர்களை அடுத்து, 22 சதவீத பங்களிப்புடன் இங்கிலாந்து இரண்டாவது இடத்திலும், 11 சதவீத பங்களிப்புடன், ஜேர்மனி மூன்றாவது இடத்திலும் உள்ளன. (ஒ–ரி)

## பங்களாதேஷ் கடற்படையால் தமிழக மீனவர்கள் சிறைபிடிப்பு



டாக்கா, டிசெ. 12

தமிழகத்தின் குமரி மாவட்டத்தைச் சேர்ந்த 24 மீனவர்கள் தங்களின் 3 மீன்பிடி படகுகளை மேற்கு பங்களாதேஷ் மாநில மீன்வளத் துறை அதிகாரிகளிடம்பதிவுசெய்து கொண்டு கடந்த நவம்பர் மாதம் 17ஆம் திகதி கொல்கத்தா அருகில் உள்ள பெட்டுவாகட் பகுதியில் இருந்து கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்றனர்.

ஆவே மரியா, அன்னை, ஸீ மேரி ஆகிய படகுகளில் சென்ற அவர்களுடன் புதுவை மாநிலத்தில் உள்ள யானம் பகுதியை சேர்ந்த ஒரு மீனவரும், கேரள மாநிலத்தை சேர்ந்த மற்றொரு மீனவரும் சென்றனர்.

மொத்தம் 26 மீனவர்களுடன் சென்ற இந்த 3 படகுகளும் மீன்களைப் பிடித்துக் கொண்டு எதிர்வரும் 16ஆம் திகதி கரைக்கு திரும்பும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில், இந்த 26 மீனவர்களையும் பங்களாதேஷ் கடலோரக் காவல் படையினர் நேற்று வழி மறித்து பிடித்து வைத்துள்ளதாக தமிழக மீனவர்கள் மேம்பாட்டு அமைப்பின் தலைவர் ஜஸ்டின் அந்தோனி செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷ் கடலோரக் காவல் படையினரிடம் பிடிபட்ட மீனவர்களை விடுவிக்க உதவுமாறு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ், தமிழ்நாடு முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோருக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (ஒ–ரி)


## இந்தியாவுக்கான அமெரிக்க தூதராக இந்தியரான ராகுல் வர்மா நியமனம்

சென்னை, டிசெ. 12

இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதுவராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிச்சர்ட் ராகுல் வர்மாவை நியமிக்க அமெரிக்க செனட் சபை ஒப்புதல் அளித்துள்ளது. இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிச்சர்ட் ராகுல் வர்மாவை இந்தியாவுக்கான அமெரிக்க தூதராக அதிபர் ஒபாமா நியமித்தார்.இந்த நியமனத்தை உறுதி செய்வது தொடர்பாக செனட் சபையின் வெளியுறவு விவகாரக் குழு கூட்டம் முன்பு நடைபெற்றது. இந்த நிலையில் ரிச்சர்ட் ராகுல் வர்மாவை நியமிக்க அமெரிக்க செனட் சபையால் குரல் வாக்கெடுப்பு மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இந்தியாவுக்கான அமெரிக்க தூதராக நியமிக்கப்படும் முதல் அமெரிக்க இந்தியரான ராகுல் வர்மா விரைவில் பதவியேற்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ள அமெரிக்க அதிபர் ஒபாமாவுடன் ரிச்சர்ட் வர்மாவும் இந்திய குடியரசு தினவிழாவில் பங்கேற்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ–ரி)

## கடலோரப் பாதுகாப்புக்கு 36 நவீன ரேடார்கள்



டில்லி டிசெ 12

இந்தியாவின் கடலோரப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், நாடு முழுவதும் 36 நவீன ரேடார்கள் நிறுவப்பட்டுள்ளன என இந்திய கடலோரக் காவல் படை தெரிவித்துள்ளது.

தேச விரோத பயங்கரவாத கும்பல்களால் ஏற்படத்தக்க ஆபத்தைக் கருத்தில் கொண்டு இந்திய கடலோரக்காவல்படை, கிழக்கு பிராந்தியத்தில் உள்ள துறைமுகங்களில் பாதுகாப்பைப் பலப்படுத்தி உள்ளது. கடலோரக் காவல்படை இதற்காக பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டு வருகிறது. கண்காணிப்பில் எந்த இடைவெளியும் ஏற்படாத வகையில் மின்னணு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வருகிறது.இதற்காக படை வீரர்களது எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடலோரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் 36 நவீன ரேடார்கள் பல்வேறு மாநிலங்களில் நிறுவப்பட்டுள்ளன. பாதுகாப்புக் கருதி கடற்படை, கடலோரக் காவல்படை, கடலோரப்பொலிஸ் ஆகியவை இணைந்து செயற்படுகின்றன என கடலோர காவல்படை தெரிவித்துள்ளது. (ஒ–ரி)

## முதல் முறையாக நிலவை எட்டிப் பார்க்கப் போகும் ஆபிரிக்கா


ஜோகன்னர்ஸ்பேர்க், டிசெ.12

தென்னாபிரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சிக் கழகமான சென், நிலவை நோக்கிய தனது முதல் நிலவுப் பயணத்தை ஆரம்பித்துள்ளது.

பல்வேறு நாடுகளின் விண்வெளி ஆய்வு நிறுவனங்களுடன் இதற்காக சென் கைகோர்த்துள்ளது.

ஆபிரிக்கா 2 மூன் என்று இந்த நிலவுப் பயணத்துக்கு பெயரிட்டுள்ளது. கடந்த வாரம் இது தொடர்பான அறிவிப்பை அது கோலாகலமாக வெளியிட்டது. இந்தத் திட்டத்துக்கான செலவுத் தொகையாக 1.50 லட்சம் டொலர் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதேபோல லூனார் மிஷன் வன் என்ற திட்டத்தையும் அது ஆரம்பித்துள்ளது. இந்த இரு திட்டங்களையும் பல்வேறு தரப்பிலிருந்தும் நிதியுதவி பெற்று நிறைவேற்ற அது முடிவு செய்துள்ளது. (ஒ–ரி)

## நடுவானில் பிறந்த குழந்தை



அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ நகரிலிருந்து பீனிக்ஸ் நகரம் நோக்கி நேற்றுமுன்தினம் புறப்பட்ட விமானமொன்று விமானத்தில் ஏறிய பயணிகளைவிட கூடுதலாக ஒருபயணியுடன் இடையில் லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

சவுத் வெஸ்ட் ஏர்லைன்ஸ்' நிறுவனத்தின் அந்த விமானத்திலிருந்த பயணி ஒருவருக்கு நடுவானில் பிரசவம் நிகழ்ந்ததையடுத்து, மருத்துவ உதவிக்காக அந்த நகருக்கு விமானம் திருப்பிவிடப்பட்டது. விமானத்தில் பயணம் செய்த மருத்துவர் ஒருவரும், செவிலியர் ஒருவரும் விமானப்பணியாளர்களின் உதவியுடன் அந்தப் பெண்ணுக்குப் பிரசவம் பார்த்ததாக சவுத் வெஸ்ட் ஏர்லைன்ஸ் நிறுவன செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். (ஒ–ரி)

# பங்களாதேஷ் பிரிவினைக்காக பாகிஸ்தான் 1999 இல் கொடுத்த பதிலடியே கார்கில் போர்

## பர்வேஸ் முஷாரப் தெரிவிப்பு



இஸ்லாமாபாத், டிச.12

பாகிஸ்தானை இரண்டாக பிரித்து பங்களாதேஷ் என்ற தனி நாட்டை உருவாக்கித் தந்த இந்தியாவுக்கு 28 வருடங்களின் பின்னர் பாகிஸ்தான் அளித்த பதிலடி தான் கார்கில் போர் எனப் பாகிஸ்தானின் முன்னாள் ராணுவ தளபதியும், முன்னாள் அதிபருமான பர்வேஸ் முஷாரப் குறிப்பிட்டுள்ளார்.

சிறுபான்மையின மக்களை ஒடுக்கிவந்த பாகிஸ்தானில் இருந்து பிரிந்து பங்களாதேஷ் என்ற தனிநாடு உதயமாவதற்காக 1971ஆம் ஆண்டு பங்களாதேஷில் உச்சக்கட்ட உள்நாட்டுப் போர் நடைபெற்றது. இந்த விடுதலைப் போராட்டத்துக்கு இந்தியா ஆதரவு தெரிவித்தது. பாகிஸ்தான் ராணுவத்தால் விரட்டியடிக்கப்பட்ட பங்களாதேஷ் மக்கள் அகதிகளாக இந்தியாவுக்கு இடம்பெயரத் தொடங்கினார்கள். இதனையடுத்து, பாதிக்கப்பட்ட பங்களாதேஷ் மக்களுக்கு உதவும் வகையில் பாகிஸ்தான் மீது இந்தியா போர்தொடுத்தது. இந்தப் போரில் பாகிஸ்தான் தோல்வியுற்றது இந்தியா வெற்றி பெற்றது. பங்களாதேஷ் என்ற புதிய தனிநாடு உதயமானது.

இந்தப் போரில் பாகிஸ்தானை தோற்கடித்த இந்தியாவை பழி வாங்குவதற்காகவே 1999ஆம் ஆண்டு கார்கில் போர் தொடுக்கப்பட்டதாக முஷாரப் தற்போது பேட்டியளித்துள்ளார். இந்தியாவில் நரேந்திர மோடியின் தலைமையிலான தற்போதைய அரசு அமைந்துள்ள நிலையில் இந்தியாவுடன் நட்புறவு கொள்வது என்பது சாத்தியமானதே. ஆனால், அந்த நட்பானது, இந்தியாவுக்கு அடிபணிந்தோ, அவர்களின் நடவடிக்கைகளுக்கு கட்டுப்பட்டோ அமையக்கூடாது. இந்தியா தீவிரவாத நடவடிக்கைகளை பாகிஸ்தான் மீது தொடர்ந்தால் கார்கில் போர் போன்ற விதத்தில் பாகிஸ்தான் பதிலடி கொடுக்கும் என்று அவர்மேலும் தெரிவித்தார். (ஒ–ரி)

# பாக்.ராணுவம் வான் தாக்கு; 11 தீவிரவாதிகள் உயிரிழப்பு


பாகிஸ்தான் கைபர் மாவட்டம் திரா பகுதி ஆப்கானிஸ்தான் எல்லைப்பகுதியில் அமைந்துள்ளது. தலிபான் மற்றும் தடை செய்யப்பட்ட மற்றொரு தீவிரவாத இயக்கமான லஷ்கர் இஸ்லாம் ஆகியவற்றின் ஆதிக்கம் நிறைந்த இந்தப் பகுதியில் நேற்று முன்தினம் பாகிஸ்தான் ராணுவம் வான் வழி தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் 11 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக பாகிஸ்தான் ராணுவம் தெரிவித்துள்ளது.



தீவிரவாதிகளை குறிவைத்து ராணுவம் நடத்திய தாக்குதலில் இதுவரை 1,600 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். அதே சமயம் 126 வீரர்களையும் பாகிஸ்தான் இழந்துள்ளது. ஆனால், மனித உரிமை அமைப்புகள் இராணுவம் நடத்திய தாக்குதல்களில் பெரும்பாலான அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்துள்ளதாகக் குற்றம் சாட்டி இருப்பது குறிப்பிடத்தக்கது.



ஜப்பானில் ஒரு கிராமத்தில் 35பேர் மட்டுமே வசிக்கிறார்கள். அந்தக் கிராம மக்கள் அங்கே நிலவும் மயான அமைதியையும் தனிமையையும் போக்கவும் தானியங்களைப் பறவைகளிடமிருந்து காப்பாற்றவும் சோளக்கொல்லை பொம்மைகளைச் செய்து வைத்து மக்களாக அவற்றை கற்பனை செய்து பொம்மைகளுடன் வாழ்கிறார்கள்.



# ஐ.எஸ்ஸைஒழிக்க கூடுதல் அதிகாரம்

## அமெ.வெளியுறவுத்துறை அமைச்சர் வலியுறுத்தல்

வொஷிங்டன், டிசெ. 12

ஐ.எஸ். தீவிரவாத அமைப்பை இல்லாதொழிக்க கூடுதல் அதிகாரத்தை அளிக்க அமெரிக்க நாடாளுமன்றம் முன்வர வேண்டும் என்று அந்நாட்டு வெளியுறவுத்துறைஅமைச்சர் ஜோன் கெரி கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது:-

ஐ.எஸ். தீவிரவாதிகளின் நோக்கத்தை முறியடித்து, மத்திய கிழக்கு நாடுகளில் அமைதியையும், ஸ்திரத்தன்மையையும் ஏற்படுத்த வேண்டும். அதற்கு கூடுதல் அதிகாரத்தை அமெரிக்க நாடாளுமன்றம் வழங்க வேண்டும். ஐ.எஸ். தீவிரவாதம் தொடர்ந்து பல நாடுகளுக்கும் பரவும் வாய்ப்பு இருக்கிறது. அதை தடுத்து நிறுத்தாவிட்டால், சர்வதேச நாடுகளின் பாதுகாப்புக்கும், அமெரிக்க தேசத்தின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக மாறிவிடும். குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் ஸ்திரத்தன்மையற்ற நிலையை ஏற்படுத்திவிடும்.

ஐ.எஸ். தாக்குதல் நடத்தி வரும் ஈராக், சிரியாவிலிருந்து அகதிகளாக பிற நாடுகளில் தஞ்சமடைவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையில் தரைப்படையைப் பயன்படுத்தக் கூடாது என்ற அமெரிக்க நாடாளுமன்றத்தின் கருத்து, நமது படைத் தளபதியின் கைகளைக் கட்டி வைத்தது போல உள்ளது. விமானப் படையை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்ற நிலையை மாற்றி, போர்க்களத்தின் நிலவரத்துக்கு ஏற்ப தேவையான படைகளை பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்க வேண்டும் – என்று அவர் கூறினார்.

# பலஸ்தீன அமைச்சர் அடித்துக் கொலை

## இஸ்ரேல் இராணுவம் அடாவடி

பாலஸ்தீனம் டிசெ 12

பாலஸ்தீன அமைச்சர் ஒருவரை இஸ்ரேல் இராணுவத்தினர் அடித்து கொன்றுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



இஸ்ரேல்–பாலஸ்தீனத்துக்கு இடைப்பட்ட மேற்குக்கரைப் பகுதியில் உள்ள துர்முசியா என்ற கிராமத்தில் நடைபெற்று வரும் இரு நாட்டவர்களுக்கும் இடையேயான போராட்டத்தைப் பார்வையிட பாலஸ்தீன அமைச்சர் ஜையாத் அபு இன் அங்கு சென்றிருந்தார்.

அப்போது இஸ்ரேல் இராணுவ வீரர்கள் குறிப்பிட்ட பகுதிக்கு அப்பால் அவரைச் செல்லவிடாமல் தடுத்தனர்.

எனினும் அதையும் மீறி அந்தப் பகுதிக்கு செல்ல முயன்ற அமைச்சரை இஸ்ரேல் ராணுவத்தினர் பிடித்து தள்ளி அடித்து உதைத்துள்ளனர். மேலும் துப்பாக்கியின் மறுமுனையால் அமைச்சரின் நெஞ் சில் குத்தியுள்ளனர்.

இதில் படுகாயமடைந்து உயிருக்குப் போராடிய நிலையில் அவர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். ஆனால் போகும் வழியிலேயே அமைச்சரின் உயிர் பிரிந்துள்ளது.

இந்தச் சம்பவம் இரு நாடுகளுக்கிடையிலான பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளது.

# உலகப் புகழ் பெற்ற பொலிஸ் தலைமையகம் விற்பனையாகிறது

லண்டன், டிசெ. 12

உலகிலேயே திறமை மிக்க பொலிஸார் என்ற பெருமையை ஸ்கொட்லன்ட்யார்ட் பொலிஸார் பெற்றுள்ளனர். இத்தகைய பெருமைமிகு பொலிஸ் துறையின் தலைமை அலுவலகம் விற்பனை செய்யப்பட உள்ளது. அந்த அலுவலகத்தை அபுதாபியைச் சேர்ந்த ஒரு தனியார் நிறுவனம் விலைக்கு வாங்கவுள்ளது. அந்தக் கட்டடம் 1829ஆம் ஆண்டு கட்டப்பட்டது என்பதுடன் அது பல சரித்திர முக்கியத்துவங்களையும் கொண்டதொன்றாகும். அது பல முக்கிய சம்பவங்களின் நினைவுகளைத் தாங்கியுள்ளது. அவை குறித்த ஆவணங்கள் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.



# உருவில் சிறிய பைபிள்

ஜெருசலேம் நானோ பைபிள் நிறுவனம் உருவில்சிறியபைபிள் ஒன்றை தயாரித்துள்ளது. அதன் ஒவ்வொரு பக்கமும் வெறும் 4.76மி.மி அளவு. ஒவ்வொரு பகுதிக்குள்ளும் 27 புத்தகங்கள் உள்ளன. அதன் வார்த்தைகளை நுண்ணோக்கி மூலம் தான் படிக்க முடியும். அந்த நிறுவனம் இப்போது கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம்பெற வைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

# நாடு திரும்பினார் பிரான்ஸ் பணயக்கைதி பெரு மகிழ்ச்சியுடன் வரவேற்றார் ஜனாதிபதி

அல்குவைதா தீவிரவாதிகளால் பிரான்ஸைச் சேர்ந்த பணயக் கைதி ஒருவர் விடுவிக்கப்பட்டு நாடு திரும்பியுள்ளார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் செர்ஜி லாசாரெவிக் என்ற நபர் அல்குவைதா தீவிரவாதிகளால் ஆபிரிக்காவின் மாலி என்ற நாட்டில் கடத்தப்பட்டார். இதன்பின் பல முறை இவர் கொல்லப்படவுள்ளதாக தீவிரவாதிகளால் வீடியோவின் மூலம் அறிவிக்கப்பட்டார்.

ஆனால் தற்போது அதிஷ்டவசமாக இவரை அல்குவைதா அமைப்பினர் விடுவித்துள்ளனர்.

இதுகுறித்து செர்ஜி கூறுகையில், நான் கடந்த மூன்று வருடங்களாக சாவுப் பயத்தில் இருந்தேன் என்றும் என்னுடன் இருந்த பல பணயக் கைதிகள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர் எனவும் தெரிவித்துள்ளார்.



இந்தநிலையில் செர்ஜியை விமான நிலையத்திலேயே வரவேற்க பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்ஸிஸ் ஹோலாண்டே காத்திருந்து அவரை வரவேற்றுள்ளார். மேலும் அல்குவைதா பிடியில் இருந்த கடைசி பிரெஞ் பணயக்கைதி செர்ஜி எனக் கூறப்படுகிறது.

# அரபுநாடுகளுக்கு ஒருங்கிணைந்த கப்பற்படை

டுபாய், டிசெ.12

இன்டர்போல் போன்ற விதத்தில் அரபு நாடுகள் கூட்டமைப்பில் உள்ள நாடுகள் ஒருங்கிணைந்த பொதுவான பொலிஸ் மற்றும் பொதுவான கடற்படை போன்றவற்றை நிறுவ முடிவு செய்துள்ளன. பஹ்ரைன், குவைத், ஓமன், கத்தார், சவுதி அரேபியா ஆகிய நாடுகள் இணைந்து 'வளைகுடா அரபு நாடுகளுக்கான கூட்டுறவு' என்ற அமைப்பை 1981 ஆம் ஆண்டு ஏற்படுத்தியிருந்தன. இந்த அமைப்பின் வருடாந்த உச்சி மாநாடு கட்டார் நாட்டு தலைநகர் டோஹாவில் நடந்தது. இக் கூட்டத்தில் உறுப்பு நாடுகளின் முக்கிய தலைவர்கள் பங்கேற்றனர். கூட்டத்தில் இரு முக்கியமான முடிவுகள் இரண்டு எடுக்கப்பட்டுள்ளன. இன்டர்போல் போன்ற விதத்தில் இக்கூட்டமைப்பில் உள்ள அரபு நாடுகளுக்காக பொதுவான பொலிஸ் அமைப்பொன்றை உருவாக்க இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து கட்டார் நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் ஷேக் காலித் பின் முகமது அல் அட்டியா கூறுகையில் 'இந்த பொலிஸ் படை தீவிரவாதத்திற்கு எதிராகப் போராடும். இன்டர்போல் போன்று வளைகுடா நாடுகளில் இந்த பொலிஸ் படை செயற்படும்' என்றார். இந்தப் பொலிஸ் படை அபுதாபியை தலைமையகமாக கொண்டு செயற்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது..

# ஞானச்சுடர்



திருநீறு அணிவது எதற்காக?

குளியலைப்போலவே திருநீறு அணிவதும் அன்றாட வாழ்க்கையின் ஒரு முக்கிய அங்கமாய் இருந்தது முற்காலத்தில்.

முழுவிசுவாசத்துடன் ஒரு சிட்டிகை திருநீறு எடுத்து நெற்றியில் வைத்த பின்பே பண்டைய பக்தர்கள் ஜெபத்துக்கு அமருவர். ஜெபத்தில் நம்பிக்கை நிறைந்திருப்பது போலவே திருநீறில் மருத்துவ குணங்கள் நிறைந்திருக்கின்றன.

சுத்தமான திருநீறு தயாரிக்கும் முறை காலப்போக்கில் மாற்றமடைந்த போதிலும் பழைய முறைகளை கடைப்பிடிப்பவர்களுமுண்டு. புல் மட்டும் அருந்தும் பசுவின் சுத்தமான எருவை சிவராத்திரி அன்று உமியில் எரித்துக் கிடைக்கும் சாம்பலைத் தண்ணீரில் கலக்கி மறுபடியும் உலரவைத்து சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்தபின் நெற்றியிலிடுவதற்காக பாதுகாத்து வைக்க வேண்டும். திருநீற்றை நனைத்தும் நனைக்காமலும் அணிவதுண்டு. திருநீறு அணிந்தால் உடலின் துர் நீரை உறிஞ்சி எடுப்பதற்கும், உடல் வெப்பத்தைக் குறைப்பதற்கும், உடல்நிலையை மேன்மையடையச் செய்வதற்கும் வாய்ப்புண்டு என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. தியாகத்தின் வடிவமான சிவபெருமானை மகிழ்விக்க மிகச்சிறந்தது திருநீறு அணிதல் என்று இந்துமதம் கருதியுள்ளது. நெற்றி, கழுத்து, தோள், மூட்டு முதலிய இடங்களில் திருநீறு அணிய வேண்டும் என்று பொதுவாகக் கூறுவதும் உண்டு.

திருநீற்றை நனைத்து அணிவதன்மூலம் உடல் வெப்பம் குறைவதனால், ஜீரம் பாதித்தவர்களின் நெற்றியில் நனைந்த திருநீறு பூசினால் ஜீரம் இறங்குவதைக் காணலாம். மூலிகைச் செடிகளை சுத்தமான நெய்யில் ஹோம குண்டத்தில் வேக வைத்த பின் எஞ்சியிருப்பதை திருவிபூதி என அழைப்பதுண்டு.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | 5 | | 9 | 7 |
| | 8 | | | 1 | 7 | | 4 | |
| 7 | | 9 | 3 | | | 8 | | 1 |
| | | | | | | 9 | 2 | 5 |
| | | 7 | | | | 1 | | |
| 3 | 9 | 8 | | | | | | |
| 8 | | 2 | | | 6 | 4 | | 3 |
| | 5 | | 1 | 3 | | | 6 | |
| 6 | 3 | | 7 | | 2 | | | 9 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 4 | 3 | 7 | 9 | 8 | 1 | 2 |
| 3 | 1 | 9 | 8 | 4 | 2 | 7 | 6 | 5 |
| 7 | 2 | 8 | 1 | 6 | 5 | 3 | 9 | 4 |
| 9 | 3 | 7 | 4 | 5 | 6 | 2 | 8 | 1 |
| 5 | 4 | 6 | 2 | 1 | 8 | 9 | 3 | 7 |
| 1 | 8 | 2 | 9 | 3 | 7 | 5 | 4 | 6 |
| 8 | 9 | 5 | 6 | 2 | 4 | 1 | 7 | 3 |
| 4 | 7 | 1 | 5 | 8 | 3 | 6 | 2 | 9 |
| 2 | 6 | 3 | 7 | 9 | 1 | 4 | 5 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சுன்னாகம் | சாவகச்சேரி | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | முல்லைத்தீவு |
|---|---|---|---|---|---|---|---|
| கத்தரி | 160 | 140 | 100 | 180 | 120 | 140 | 170 |
| கரட் | 200 | 120 | 150 | 240 | 140 | 220 | 200 |
| மரவள்ளி | 40 | 40 | 40 | 50 | 40 | 50 | 40 |
| பயிற்றை | 240 | 240 | 150 | 200 | 200 | 220 | 210 |
| பாகல் | 300 | 400 | 300 | 320 | 380 | 200 | 300 |
| கருணைக்கிழங்கு | 40 | 50 | 60 | 60 | 50 | 80 | 70 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 110 | 110 | 100 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 80 | 100 | 70 | 100 | 80 | 110 | 110 |
| பூசணி | 30 | 40 | 30 | 50 | 40 | 50 | 60 |
| தக்காளி | 180 | 200 | 80 | 200 | 140 | 200 | 90 |
| வாழைக்காய் | 80 | 50 | 50 | 80 | 70 | 80 | 60 |
| கீரை | 40 | 60 | 30 | 20 | 40 | .30 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 40 | 50 | 40 | 30 | 40 |
| மிளகாய் | 350 | 380 | 350 | 400 | 360 | 450 | 380 |
| புடோல் | 140 | 120 | 110 | 120 | 80 | 90 | 110 |
| கோவா | 140 | 140 | 60 | 140 | 140 | 160 | 130 |
| வெண்டி | 120 | 160 | 120 | 120 | 140 | 120 | 150 |
| போஞ்சி | 160 | 140 | 110 | 200 | 200 | 180 | 170 |
| லீக்ஸ் | 300 | 240 | 250 | 240 | 260 | 240 | 260 |
| தேங்காய் | 40 | 40 | 40 | 40 | 30 | 30 | 40 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 120 | 120 | 120 | 80 | 130 |
| தேசிக்காய் | 100 | 100 | 80 | 80 | 120 | 80 | 90 |

## நாளை

கார்த்திகை-27
சனிக்கிழமை
13.12.2014
திதி: ஸப்தமி
பி.இ.04.04 வரை
நட்சத்திரம்:
மகம்
மு.ப.11.37 வரை
சுபநேரம்:
03.20-04.50
வரை
இராகுகாலம்:
09.20-10.50
வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....




**சிந்திப்பதன் மூலம் நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொள்ளுங்கள்.**

ஒவ்வொருவரும் தன்னுடைய வழிதான் சிறந்தது என்று நினைக்கின்றனர். மிகவும் நல்லது. ஆனால் உங்களுக்கு வேண்டுமானால் அது நல்லதாக இருக்கலாம். மற்றவர்களுக்கு அல்ல என்பதை நினைவில் வைக்க வேண்டும். கல்வியறிவில்லாத, பண்பாடற்ற, சிந்தனையில்லாத ஆண் பெண் அனைவரும் இத்தகைய குறுகிய எண்ணத்துக்குள் புகுத்தப்பட்டிருக்கிறார்கள். நீயாகவே சிந்தித்துப்பார். – மனதைப் பயன்படுத்திச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மற்றவர்களுடைய வழி தவறானது என்று சொல்வதற்கு உனக்கு என்ன உரிமை இருக்கிறது? உங்களுக்கு வேண்டுமானால் அது தவறாக இருக்கலாம். அதாவது நீங்கள் அந்த வழியைப் பின்பற்றினால் அதனால் உங்களுக்குக் கேடு விளையக்கூடும். ஆனால் அதற்காக அந்த வழியால் இன்னொருவர் கீழ்நிலையை அடைந்து விடுவார் என்பது அதன் பொருளல்ல. மனித உள்ளத்தில் ஏதோ ஒன்று நன்மை செய்வதாகச் சொல்கிறதோ. அந்தச்சக்தி தான் ஆன்மாவின் கம்பீரமான அழகைக் காட்டுகிறது. நல்லவனாக இருப்பதன் அழகைக் காட்டுகிறது. நல்லதற்கு எவ்வளவு சக்தி இருக்கிறது. இதைத்தான் நாம் கடவுள் என்று அழைக்கின்றோம். நான் சற்று மௌனமாக ஒரு விடயத்தை பற்றிப் பேச விரும்புகிறேன். கவனித்துக் கேளுங்கள். நான் சொல்வதைப் பற்றி அவசரமான முடிவுக்கு வர வேண்டாம். நாம் உலகிற்கு அதிக நன்மை செய்ய முடியாது. உலகுக்கு நன்மை செய்வது நல்ல விடயம் தான். நாம் எத்தனையோ வருடங்கள் போராடிக் கொண்டிருக்கிறோம். உலகின் இன்பத்துக்காக நாள் தோறும் ஆயிரக்கணக்கான வழிகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. துன்பம் இன்றி இன்பம் இருக்கமுடியாது என்று சொல்வது நியாயமற்றது. சற்று மௌனமாக ஒரு விடயத்தை பேச விரும்புகிறேன். வாழ்வில் மனிதன் உயர வேண்டுமானால் கடுமையான சோதனைகளைக் கடந்து நல்லவற்றைச் செய்தாக வேண்டும்.

## ஜோதிடம்

# எண் சோதிட பலன்கள் உங்களுக்கு எப்படி?



### பிறந்த எண் 4

மக்கள் பிரதிநிதியான 4ஆம் எண்காரர்களின் சிறப்புப் பற்றிப் பார்ப்போம். உலகத்தில் உள்ள பலவகையான செய்திகளையும், அனுபவங்களையும் தெரிந்து கொள்வதில் இவர்கள் ஈடுபாடு கொண்டவர்கள். எப்போதும் தன் இச்சைப்படி செயலாற்ற விரும்புவார்கள்.

எப்போதும் நான்கு பேருடன் கலகலப்பாக இருக்க வேண்டும் என்று விரும்புவார்கள். தனிமையை வெறுப்பார்கள். பணம் சம்பாதிக்கும்போது இருக்கும் பொறுமையை, பணம் செலவழிப்பதில் காட்ட மாட்டார்கள். கையில் பணம் இருக்கும்வரை கண்ணில்காண்பவற்றைவாங்கும் இயல்பினர். நான்கு பேரை அதட்டி, தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்வார்கள். எதிலும் எதிர்ப்பு உள்ள விவகாரங்களையே எடுத்து வாதாடுவார்கள். நண்பர்களுக்காகச் செலவு செய்யத் தயங்க மாட்டார்கள். ஆனால் இவர்கள் மற்றவர்களின் உண்மையான அன்புக்காக ஏங்குவார்கள். சமுதாயத்தின் முன்னேற்றம், நாட்டு நடப்புக்கள் ஆகியவற்றைப் பற்றிப் பொது இடங்களில் காரசாரமாக விவாதிப்பார்கள்.

உணவு விடயத்தில் தாராளமானவர்கள். சுவையான உணவு, இனிமையான காட்சி ஆகியவற்றுக்காகப் பண விரயம் செய்வார்கள். தங்களின் உடல்நலம், ஆரோக்கியம் பற்றி மிகவும் கவலைப்பட்டு, அதற்காக லேகியங்களையும் மாத்திரைகளையும் எடுத்துக் கொள்வார்கள்.

தங்களுடைய அபிப்பிராயங்களைத்தான் மற்றவர்களும் ஏற்க வேண்டும் என்று வற்புறுத்துவார்கள். பிறர் அபிப்பிராயத்தை அலட்சியம் செய்வதில் மகிழ்ச்சி அடைவார்கள். தங்கள் காரியம் வெற்றியடைய வேண்டும் என்பதற்காக, எந்த வழியையும் பின்பற்றத் தயங்க மாட்டார்கள். இருப்பினும், வாழ்க்கையில் வெற்றி பெறுவோமா என்ற வீண் பயம் இருந்து கொண்டே இருக்கும். எதிலும் அவசரமும் ஆத்திரமும் உண்டு. தங்களைக் கண்டு பயப்படுபவர்களை விரட்டிக் கொண்டே இருப்பார்கள். தங்களைக் கண்டு பயப்படாமல் இருப்பவரிடம் நயமாகப் பழகுவார்கள்.

சந்தேக குணமும் அதிகாரம் செய்யும் விருப்பமும் இருப்பதால் நண்பர்கள் குறை வாகவே இருப்பார்கள். தங்கள் முயற்சிகளில் அடுத்தவரின் குறுக்கீட்டை விரும்பமாட்டார்கள். அவரிடம் வெறுப்பைக் காட்டுவார்கள். குடும்பத்திலும் இவர்களது குறுக்கீடுகள் அதிகம் இருக்கும். எனவே, குடும்பத்திலும் இன்பம் குறைவுதான்.

இளமைப் பருவத்தில் விளையாட்டு, உடற்பயிற்சி ஆகியவற்றில் மிகவும் ஈடுபாடு கொள்வார்கள். சோம்பல் குணம்தான் இவர்களது சத்துரு. அதை விட்டு விட வேண்டியது அவசியம். முன்கோபம் ஓரளவு இருக்கும். சில சமயங்களில் அடுத்தவரைத் திட்டிவிட்டுப் பின்பு அதற்காக வருந்துவார்கள்.

சாதாரணமாக மற்றவர்களிடம் பேசிக்கொண்டிருக்கும்போதே, தங்கள் குரலை உயர்த்திப் பேசித் தங்களின் வாதங்களை வற்புறுத்துவார்கள். ஒரே விடயத்தைப் பற்றியே, பட்டிமன்றமாகப் பேசுவார்கள்.

தங்களது சொந்தப் புகழுக்கும் பொருளுக்கும் ஆசைப்படமாட்டார்கள். ஆனால் அனைத்தும் தெரிந்த மனிதர் இவர்தான் என்று உலகத்தார் பேச வேண்டும் என்று நினைப்பார்கள். பொதுநல சேவை செய்வார்கள். அரசியல்வாதிகளில் வெறி பிடித்த இலட்சியவாதிகள் என்று இவர்களில் சிலர் மாறி விடுவார்கள். இவர்களது வருமானம் உயர உயரச் செலவும் அதிகமாகிக் கொண்டே வரும். எனவே,

செலவு செய்வதில் நிதானம் தேவை. இவர்கள் மக் களை நிர்வகிக்கும் வித்தையை அறிந்தவர்கள். இதனால் பொலிஸ், முகாமையாளர் போன்ற தொழில்களில் சிறந்து விளங்குவார்கள்.

#### உடல் அமைப்பு

இந்த எண்காரர்கள் நடுத்தரமான உயரம் உடையவர்கள். வட்டவடிவமான முகத்தோற்றமும் சற்றுப் பருமனான உடல் அமைப்பும் உண்டு. ஆழ்ந்த கண்கள் இருக்கும். தலைமுடி கருமையாகவும், அதேசமயம் அழுத்தமாகப் படியாமல், சற்றுச் சுருண்டும் காணப்படும். அதிகமான நோய்கள் இவர்களை அணுகாது. உணவு விடயத்தில் மட்டும் கட்டுப்பாட்டுடன் நடந்து கொண்டால், ஆரோக்கியம் உறுதி.

#### அதிர்ஷ்ட நாள்கள்

ஒவ்வொரு மாதத்திலும் 1, 10, 19 ஆகிய தினங்களும், கூட்டு எண் 1 வரும் தினங்களும் மிகவும் அதிர்ஷ்டமானதே. 28 ஆம் திகதி நடுத்தரமான பலன்களையே கொடுக்கும். அதே போன்று 9, 18, 27 ஆகிய தேதிகளும், கூட்டு எண் 9 வரும் தினங்களும் நல்ல பலன்களையே கொடுக்கும்.

அதே போன்று 4, 13, 22, 31 ஆகிய திகதிகள் தாமாகவே நல்ல பலன்களைக்கொடுக்கும். ஆனால் புதிய முயற்சிகளில் ஈடுபட்டால் தோல்வியே மிஞ்சும். அதே போன்று 8, 17, 26 ஆகிய திகதிகளும் கூட்டு எண் 8 வரும் தினங்களும் துரதிருஷ்டமானவை. 7, 16, 25 ஆகிய திகதிகளும் துரதிருஷ்டமானவைதான்.




# பெண் என்ற தெய்வம்...

பெண் என்பவள் யார்? அவளது குணாதிசயங்கள் யாவை? அவளது எதிர்பார்ப்புக்கள் எவை? அவளிடமிருந்து என்ன எதிர்பார்க்கப்படுகிறது? – ஏன்? பெண் என்பவள் ஆணுக்கு ஒரு புதிராகவே எப்போதும் தெரிகிறாள். 'கடலின் ஆழத்தைவிட ஆழமானது பெண்ணின் மனம்' என்பார்கள். பூமியைப் போன்றவள் பெண்: பொறுமைக்காக மட்டுமல்ல பெண் மிகவும் இளகிய மனமுடையவள். அவளுக்கு வேண்டியதெல்லாம் அவள் வீடு, அவள் கணவன், அவள் குழந்தைகள். இதைச் 'சுயநலம்' என்று சொல்வது மிகவும் தவறான கருத்து. பெண் மட்டும் இப்படி சுயநலமாய் இல்லாவிட்டால், பொதுநலமான பல ஆண்களின் தாராள மனத்தினால் பல வீடுகள் நடுத்தெருவுக்கு வந்திருக்கும். தனக்கு மிஞ்சினால் தான் தானம். தனக்காகவும், தன் கணவனுக்காகவும எப்போதும் ஓயாமல் சிந்திப்பவள் பெண். ஒரு முட்டையில் கருவின் எதிர்காலத்துக்குத் தேவை யான அனைத்து ஊட்டப் பொருள்களும் சேமித்து வைக்கப்பட்டிருப்பதைப் போல, பெண் தனது குழந்தையின் எதிர்காலத்துக்காக அக்கறையோடு சேமித்து வைக்கிறாள். மழையைத் தராமல் வானம் வறண்ட பாலைவனத்தில் கூட எங்கோ ஒரு மூலையில் சோலை இருப்பதைப் போல, பெண் என்பவள் அன்பு என்ற நீரூற்றை உடைய பூமி. எல்லாவிதமான பயங்களும், சகலவிதமான குழப்பங்களும், சந்தேகங்களும் ஒருங்கே உருவெடுத்த ஒரு வடிவம் பெண். தனது திறமையைத் தானே உணராத அனுமாரைப் போல, அன்பு என்ற நீரூற்று தனக்குள்ளேயே இருந்தாலும், எப்போதும் அதை வெளியே எவரிடமாவது தேடி அலைபவள் பெண். இளம் வயதில் பெற்றோரிடம், பருவத்தில் காதலனிடம், திருமணத்துக்குப் பிறகு கணவனிடம், தாயான பிறகு குழந்தைகளிடம் என்று எப்போதும் யாரையாவது அண்டியே இருப்பவள் பெண். அவளால் தன் காலில் தானே




நிற்க முடியாது என்று பிறர் குறை கூறுவதுண்டு. ஆனால், இது குறையல்ல. இதுதான் நிறை. எனவே, அண்டி வாழ்வது பெண்ணுக்கு குறையல்ல நிறை. பெற்றோரைச் சார்ந்து வாழும் குழந்தை அவர்களை ஒன்றாகப் பிணைத்து வைக்கிறது. காதல் வெற்றி பெற்றால் அதற்குக் கார ணம் பெண்ணின் இந்த அண்டிவாழும் குணம் தான். கணவன் – மனைவி இணை பிரியாமல் இருப்பதற்குக் காரணமும் இந்தக் குணம்தான். சார்ந்து வாழ்தல், இயல்பானது.

# பெண்களின் உயர்வு

கடந்த காலங்களில் பெண்கள் அப்போது சுயமாக சிந்திக்கத் தெரியாமலும், கல்வி அறிவு இல்லாமலும், பயம் காரணம் ஆகவும் வீட்டுக்குள்ளேயே இருந்தார்கள் , ஆனால் இப்போது எல்லாமே மாற்றமடைந்து விட்டன. சுயமாக சிந்திக்கவும் ( சம்பாதிக்கவும் ) ஆரம்பித்து விட்டார்கள் , அவர்களுக்கு தன்னம்பிக்கை அதிகமாகிவிட்டது . இது ஒரு வகையான முன்னேற்றம் தான். ஆனால் சிலவேளை அது அதிகமாக தவறு செய்ய காரணமாக அமைந்து விடுகின்றது.

எமது கலாசாரம் என்னவோ, அதற்கமைய முடிந்த அளவு இருந்தால் பெண்களுக்கு பாதுகாப்பு என்பது கிடைக்கும் , பெண்களிடம் அறிவு , திறமை , சிந்திக்கும் ஆற்றல், கல்வியறிவு, இவை எல்லாம் வளர்ந்து வரும் வேளையில் கொஞ்சம் அடக்கம் , பணிவு , எளிமை , பெரியோர் சொல் கேட்டல் இவை எல்லாம் சேர்ந்து வளர்ந்தால் பெண்கள் மேன்மேலும் போற்றப்படுவார்கள் , குறைகள் களையப்பட்டால் பெண்களால் இன்னும் உயர்வான இடத்திற்குச் செல்ல முடியும்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தின் விளையாட்டு உத்தியோகத்தர்

**சுரேந்திரன் சதீஸ்கண்ணா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும், (சி18731) (12.3)
உத்தியோகத்தர்களும்,
ஊழியர் நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம் - ஊர்காவற்றுறை.

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

கடந்த 13.11.2014 வியாழக்கிழமை
சிவபதமடைந்த
எமது குடும்ப விளக்கு

**திருமதி இராஜகோபால் காந்திமதி**

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர் - யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்)



அவர்களின் சபிண்டீகரண நிகழ்வு
நாளை (13.12.2014) சனிக்கிழமை அன்னாரது
இல்லத்தில் நடைபெறும்.
அந்நிகழ்விலும் அவரின் ஆத்ம சாந்திப்
பிரார்த் தனையிலும் மதியபோசனத்திலும்
கலந்துகொள்ளுமாறு தங்களை
அன்புடன் அழைக்கின்றோம்.

கற்பகப் பிள்ளையார் கோயில் வீதி,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

குடும்பத்தினர்.

## 3 ஆம் ஆண்டு நினைவலையில்



அமரர்

**கணபதிப்பிள்ளை குகானந்தன்**

(தலைவர் - கிராம அபிவிருத்திச் சங்கம், செயலாளர் - கமக்கார அமைப்பு, உபதலைவர் - சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம், கிராமிய சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர்.)

மனிதனாக 30.05.1960

தெய்வமாக 16.12.2011

எம்மையெல்லாம் வாழவைத்த எங்கள் குடும்ப விளக்கே!
ஆசை அப்பாவே! அருமை மாமாவே! பாசமிகு தாத்தாவே!
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து
இன்றுடன் 1080 நாள்கள் ஆனாலும்
எம்மனதில் சில நிமிடங்கள் போல் இருக்கிறது.

வானிலிருந்து நீங்கள் கவலை கொள்ளவேண்டாம் உங்கள் உதிர உழைப்பால் நாம் உயர்ந்திருக்கின்றோம். ஊரெல்லாம் உம்மைத் தேடி ஒப்பாரி இடுகிறது. எல்லோர் மனதிலும் அன்று கேட்ட இடிச்செய்தி இன்றும் அசரீரிபோலக் கேட்கிறது. என்செய்வோம் உங்கள் ஆத்மசாந்தி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

**அன்பு மனைவி, பிள்ளைகள், மருமகன் முரளி.**
**மறவன்புலோ கிழக்கு, சாவகச்சேரி.**
(47347) (45.3)

# செய்திகள்

## கப்பல் தொழில் குறித்த கருத்தரங்கு ஞாயிறன்று

யாழ்ப்பாணம், டிசெ.12

வல்வை மாலுமிகள் நலன்புரி சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் விசேட கலந்துரையாடலும் வல்வை நவீன சந்தைக் கட்டடத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும். அவ்வேளை கப்பல் தொழில் மற்றும் நவீன மீன்பிடித் தொழில் குறித்து விசேட கருத்தரங்கும், தொழில்சார் வழிகாட்டுதல்களும் வளவாளர்களால் நடத்தப்படும். கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியைச் சேர்ந்த உதவி ஆணையாளர் கே.அனந்தகுமார், அபிவிருத்தி அதிகாரி ஏ.சூரியகுமார் ஆகியோர் வளவாளர்களாகப் பங்குபற்றுவர்.

அதேவேளை, கல்வித் தகைமை குறைவாக உள்ளவர்களுக்கான வழிகாட்டல் வகுப்புக்களை கப்டன் ஆர்.ராஜேந்திராவும், படகு கட்டுதல் கரையோர வளங்களின் முகாமைத்துவம், மீன் வளர்ப்பு என்பன குறித்த சான்றிதழ் பெறுவதற்கான விவரங்கள் குறித்த வழிகாட்டுதல்களை எஸ்.சரூபனும் நிகழ்த்துவர். (அ)

## வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு 4 ஆம் கட்ட நிவாரணம்

வலி.வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு, நான்காவது கட்ட நிவாரணம் கடந்த சனிக்கிழமை வழங்கப்பட்டுள்ளதாக, வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவர் அ.குணபாலசிங்கம் தெரிவித்தார். வலி.வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனின் அனுசரணையுடன், அகில இலங்கை இந்து மாமன்றமும், மனிதநேய அமைப்புக்களும் இணைந்து நிவாரணத்தை கட்டம் கட்டமாக வழங்கி வருகின்றன. இதுவரையில் மூன்று கட்டமாக 312 குடும்பங்களுக்கு நிவாரண உதவி வழங்கப்பட்டுள்ளது. தற்போது நான்காவது தடவையாக 10 நலன்புரி நிலையங்களிலுள்ள, விதவைகள், ஊனமுற்றோர், கணவரால் கைவிடப்பட்டோர், தாய் தந்தை இல்லாத பிள்ளைகள் ஆகியோரை உள்ளடக்கிய 118 குடும்பங்களுக்கு கடந்த சனிக்கிழமை நிவாரண உதவி வழங்கப்பட்டுள்ளது. (வ-5)

## கண்ணீர் அஞ்சலி

தேசிய சேமிப்பு வங்கி, கிளிநொச்சிக் கிளை முகாமையாளர்
இ.ஜோ.இன்பராஜ் அவர்களின் அன்பு மாமனார்

**செ.றொ.யேசுபாலன்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணியாளர்கள்,
தேசிய சேமிப்பு வங்கி - கிளிநொச்சி.
(51305) (12.3.6)

## விண்ணக வாழ்வின் 45 ஆம் நாள் நினைவஞ்சலி



**திருமதி றெஜிவதனி ஜெயசிங்கம்**

மண்ணில் 08.01.1964
விண்ணில் 29.10.2014

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"

எங்களது இதயத்தின் அலைகள் துன்பத்தால் அடிக்கிறது
கருவறையில் காத்த உம்மை, கல்லறையில் சேர்க்க நேர்கிறதே

நீர் எமக்காய் சிந்திய வியர்வையை மிஞ்ச கண்ணீர் தோற்றாது

தாயே நீ மறைந்து தெய்வமானாய்!
உன் இரத்த துளிகளின் வியர்வைகளில் பிறந்து வளர்ந்தோம்

இனி "அம்மா" என்றழைக்க யார் இருக்கா??
அழகான செல்வங்கள் இண்டும் அழுவதைப் பாராயோ...
அகத்தினில் உனைத்தேக்கி அம்மா - கண்ணீர் பொழிவதைப் பாராயோ.......

அணைந்து போகாதம்மா போகாது....
பூக்காதோ மீண்டும் உந்தன் வாழ்வு என்று புலம்பி நிற்கின்றோம்.

140, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

ஆன்ம இளைப்பாற்றியை நாடும்
குடும்பத்தினர்.

## வவுனியாவில் ஞாயிறன்று நூல், இறுவட்டு வெளியீடு

வவுனியா, டிசெ.12

வவுனியாத் தமிழ்ச் சங்கத்தின் அனுசரணையுடன் நோர்வே விஜேந்திரனின் 'பசுமை தேடும் பறவைகள்' கவிதை நூல் மற்றும் இறுவட்டுக்களின் வெளியீடு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா ஆதி விநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் மங்கல விளக்கேற்றல், தமிழ் வாழ்த்தைத் தொடர்ந்து, வவுனியாத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர், எஸ்.என்.ஜி. நாதன் வரவேற்புரையையும் ஒட்டுசுட்டான், செந்தணல் வெளியீட்டகத்தைச் சேர்ந்த வன்னியூர் செந்தூரன் வெளியீட்டுரையையும் நிகழ்த்துவர்.

நூல், இறுவட்டுகளின் முதல், சிறப்புப் பிரதிகள் வழங்கப்படுவதைத் தொடர்ந்து நயப்புரையை தமிழ்மணி க.க.அருந்தவராஜா (மேழிக்குமரன்) நிகழ்த்துவார். ஏற்புரையை அடுத்து நன்றியுரையை க.ஜனார்த்தனன் வழங்குவார். (ஓ)

## நாவலர் குரு பூசை தின நிகழ்வு

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை தின நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன ஆலய முன்றிலில் நடைபெறும். சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தப்பிள்ளை தலைமையில் நடைபெறும் குருபூசையில் நல்லைக் குருமகா சந்நிதானம் ஆசியுரையையும் சைவப் புலவர் செ. கந்தசத்தியதாசன் திருமுறை பாராயணத்தையும் சைவப் புலவர் க.நித்திய தசீதரன் சிறப்புரையையும் நிகழ்த்துவர்.

ஆறுமுகநாவலர் வினாடி வினாப் போட்டியும் பரிசளிப்பும் இடம்பெறும். (வ)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**புவனேஸ்வரி தெட்சணாமூர்த்தி**



பிறப்பு 13.12.1941 | இறப்பு 23.11.2013

திதி: சஷ்டி (12.12.2014)

என் உயிரின் பாதி உன்னுடன் உதிர்ந்ததம்மா
ஆண்டுகள் ஆயிரம் அகன்றாலும் ஆருயிர் அன்னையை...
நீர் தந்த அன்பின் நிழலில் வாழும் உன்...
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

55/5. விளையாட்டரங்கு வீதி. கல்வியங்காடு. — குடும்பத்தினர்



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **ஆறுமுகம் சிவஞானம் (கந்தசாமி)**



தோற்றம் 15.01.1945 | மறைவு 23.11.2013

ஆண்டொன்று மறைந்துவிட்டது அப்பா!
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
மறையுமா உங்கள் நினைவின் பாசம்
எங்களை நிர்க்கதியாய் அநாதையாய்ப் பரிதவிக்க
விட்டுவிட்டு எங்கு சென்றீர்கள்
காலங்கள் ஆயிரம் போனாலும்
மறக்கமுடியுமா உங்கள் நினைவுகளை
எங்கள் உயிர் உள்ளவரை உங்கள்
நினைவுகள் தொடரும்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

10, தபாற்கந்தோர் வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

(54869)



## 31ஆம் நாள் நினைவஞ்சலி

**செல்வன் இராஜலிங்கம் வருண்ராஜ் (வருண்)**

பிறப்பு 1989.11.14 | இறப்பு 2014.11.12



கோகிலத்தின் கண்ணனாக- எம்
குடும்பக் கோபுரத்தின் கலசமாக,
தாய்க்கோர் செல்வப்புதல்வனாக
தரணியிலே நீ இருந்தாயடா- வருண்
கூடிவாழ்ந்த உன் குடும்பத்தில் நீ ஓர்
குழந்தையாய் வரவேண்டுமென்று
கோடிமுறை வேண்டுகின்றோம்
- தெய்வங்களை
ஒடிவந்து எமது உள்ளம் குளிர்விப்பது
எப்போதடா?

நாரம்மல — பிரிவால் துயருறும் குடும்பத்தினர் (54873)(6.8)


செய்திகள்

# ஜனாதிபதியின் வருகைக்கு மாகாணக் கல்வியமைச்சின் 88 இலட்சம் ரூபா செலவு

## சபையில் கூறினார் குருகுலராஜா



யாழ்ப்பாணம், டிசெ. 12

ஜனாதிபதி கடந்த ஒக்ரோபர் மாதம் வடக்குக்குப் பயணம் மேற்கொண்டபோது, தேசிய பாடசாலைகளை அழகுபடுத்தும் வேலைகள் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளுக்காக வடக்கு மாகாண கல்வி அமைச்சு 88 லட்சம் ரூபா வழங்கியுள்ளது. மாகாண அரசு, தேசியப் பாடசாலைகளுக்கு நிதி வழங்க முடியுமா என்பது தொடர்பில் உடனடியாகப் பதில் வழங்க முடியாது. இது தொடர்பில் அடுத்த அமர்வில் தெரிவிப்பேன்.

இவ்வாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்தார்.

வடக்கு மாகாணசபையின் 20 ஆவது அமர்வின் தொடர்ச்சி அமர்வு நேற்று இடம்பெற்றது. இதன் போது ஆளுங்கட்சி உறுப்பினர் க.சர்வேஸ்வரன், வடக்கு மாகாண கல்வி அமைச்சரிடம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே கல்வி அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ யாழ்ப்பாணத்துக்கு பயணம் மேற்கொண்ட போது யாழ்.இந்துக் கல்லூரி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி ஆகியவற்றுக்குச் சென்றிருந்தார். ஜனாதிபதியின் வருகைக்காக, பாடசாலைகளை அழகுபடுத்தவும் அவர்களுக்கான வசதி ஏற்படுத்தவும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது. இது போன்றே வடக்கின் ஏனைய மாவட்டங்களுக்கும் ஜனாதிபதி பயணம் செய்த போது அங்கும் பாடசாலைகளுக்கும் சென்றிருந்தார். அவற்றுக்கும் வடக்கு மாகாண நிதி பயன்படுத்தப்பட்டதா? அது தொடர்பிலான விவரத்தைச் சமர்ப்பிக்குமாறு ஆளுங்கட்சி உறுப்பினர் சர்வேஸ்வரன் கேட்டார்.

அதற்குப் பதிலளித்த கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் உள்ளக வீதிப் புனரமைப்புக்கு 18 லட்சமும், யாழ்.இந்து மகளிர் கல்லூரி வகுப்பறைக் கட்டடம் அழகுபடுத்தல், உள்ளக வீதிக்கு 27 லட்சமும், வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு உள்ளக வீதி புனரமைப்பு, வகுப்பறைக் கட்டடம் அழகுபடுத்தலுக்கு 12 லட்சமும், நெல்லியடி மத்திய மகா வித்தியாலய உள்ளக வீதி அமைப்பு மற்றும் அழகுபடுத்தலுக்கு 9 லட்சமும், தியாகராசா மத்திய மகா வித்தியாலயம், நெடுந்தீவு மகா வித்தியாலயம் என்பவற்றுக்கு தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், கிளிநொச்சி இந்துக் கல்லூரிக்கு 10 லட்சமும், வடக்கச்சி மகா வித்தியாலயத்துக்கு 5 லட்சமுமாக 88 லட்சம் ரூபா வரை வடக்கு மாகாண கல்வி அமைச்சின் நிதியிலேயே செலவு செய்யப்பட்டது என்று பதில் வழங்கினார்.

இதன்போது உபகேள்வி எழுப்பிய ஆளுங்கட்சி உறுப்பினர் க.சர்வேஸ்வரன், அந்த நிதி கல்வி அமைச்சரின் அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டதா அல்லது பயன்படுத்திய நிதிக்குக் கல்வி அமைச்சரிடம் கையொப்பம் பெற்றப்பட்டதா எனவும், வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதி போதாது என்று கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் கல்வி அமைச்சர் உள்ளிட்ட ஏனைய அமைச்சர்கள் தெரிவித்திருந்த நிலையில் இதற்கு எவ்வாறு நிதி வழங்கப்பட்டது? மேலும் தேசிய பாடசாலைக்கு மாகாண கல்வி அமைச்சு எந்த அடிப்படையில் நிதியை வழங்கியது என்றும் கேட்டார். இதன்போது கல்வி அமைச்சர், அடுத்த அமர்வில் இதற்கான பதில் வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

(த-5)


## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் பதில்
விளையாட்டு உத்தியோகத்தராக
கடமையாற்றிய

**சு.சதீஸ்கண்ணா**

அவர்கள் 2014.12.10 இறைபதம் அடைந்தமையையிட்டு துயருற்று இருக்கும் அவரது குடும்பத்துக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்ப தோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம், பிரதேச செயலகம், காரைநகர் (54876)



## கண்ணீர் அஞ்சலி



ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில்
விளையாட்டு அதிகாரியாக கடமையாற்றிய

**சுரேந்திரன் சதீஸ்கண்ணா**

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு மிகுந்த துயர் அடைவதோடு. அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி,
யாழ். மாவட்ட விளையாட்டு இணைப்பாளர்,
யாழ். மாவட்ட விளையாட்டு பயிற்றுனர்கள், விளையாட்டு அதிகாரிகள்.


# மது போதையில் வாகனம் செலுத்திய சாரதிக்குச் சிறை

கொழும்பு, டிசெ.12

ஹற்றனில் இருந்து டயகம வரை மதுபோதையில் பஸ்ஸைச் செலுத்திய சாரதி ஒருவருக்கு மூன்று மாத சிறை தண்டனை வழங்கப்பட்டுள்ளது.


இதுதவிர அவருக்கு ஐயாயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த சிறை தண்டனையை ஹற்றன் நீதிவான் அமில ஆரியசேன வழங்கியுள்ளார். ஹற்றன் அரச போக்குவரத்து சாலைக்கு உட்பட்ட சாரதி ஒருவருக்கே இந்த தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

(ற)

# செய்திகள்

## விஞ்ஞான ஆராய்ச்சிக்கான ஜனாதிபதி விருது



யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட இரசாயனவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி குகமூர்த்தி வேலாயுதமூர்த்தி, 2010 ஆம் ஆண்டுக்கான விஞ்ஞான ஆராய்ச்சிக்கான ஜனாதிபதி விருதை (presidential award for scientific research 2010) பெற்றுள்ளார். அவர் இரசாயனவியலில் மேற்கொண்ட ஆராய்ச்சிகள், சர்வதேச ஆராய்ச்சி சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டமைக்காக இந்த விஞ்ஞான ஆராய்ச்சிக்கான ஜனாதிபதி விருது வழங்கப்பட்டது.

அவர் 2009 ஆம் ஆண்டுக்கான விருதையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ–4)

## இன்று இல்லை கலாசார விழா

யாழ்ப்பாணம், டிசெ.12

அனலைதீவு ஐயனார் ஆலய திருமண மண்டபத்தில் இன்று நடைபெறவிருந்த கலாசார விழா தவிர்க்கமுடியாத காரணத்தால் எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறும் என்று தீவக வடக்கு கலாசார பேரவை தெரிவித்துள்ளது. (வ–ரி)

## மரண அறிவித்தல்



### திருமதி றோஸ் அரியமலர் தனபாலசிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியை)

உசன், மிருசுவிலைப் பிறப்பிட மாகவும், வட்டுக்கோட்டை கல்லூரி வீதியை வதிவிடமாகவும் கனடாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி றோஸ் அரியமலர் தனபாலசிங்கம் 29.11.2014 சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற டேவிட் தனபாலசிங்கத்தின் அன்பு மனைவியும், செல்வராசா (உசன்), காலஞ்சென்றவர்களான லில்லி நேசமலர், கிருபைமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயந்தினி (ஓய்வுநிலை ஆசிரியை, யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக் கோட்டை), காலஞ்சென்ற அரியபாலன், டெனிஸ் (கனடா), ஜேம்ஸ் (கனடா), பெற்றி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், மித்திரரஞ்சன், கௌரி, டொட்டி, சுமதி ஆகியோரின் அன்பு மாமியும், அஞ்சனா, அஞ்சுதன், சூசன், றோஷன், றொஷானா, டில்ஷான், ஷமீனா, ஷானன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் உசன், மிருசுவிலில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (12.12.2014) வெள்ளிக்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் 2.00 மணிக்கு இரங்கல் ஆராதனை இடம்பெறும். பின்னர் வட்டுக்கோட்டைதென்னிந்தியத் திருச்சபை ஆலயத்தில் 13.12.2014 சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு இறுதி நல்லடக்க ஆராதனை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உசன்,
மிருசுவில்.

(54768)
(12.3)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### கந்தையா நடராசா

அச்சுவேலியைப் *பிறப்பிடமாகவும், உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நடராசா 10.12.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்கள்ான பொன்னையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், மல்லிகாதேவியின் அன்புக் கணவரும், விஜியேந்திரா (பிரான்ஸ்), ராஜேந்திரா (பிரான்ஸ்), பத்மேந்திரா, மதிவதனி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவதர்சினி (பிரான்ஸ்), ஜெயரஞ்சினி (பிரான்ஸ்), பாலச்சந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும், அக்ஷயன், ஆதர்ஷன், அஜித்ரா, ஆதிரா ஆகியோரின் பேரனும், அன்னலட்சுமி, விமலாம்பிகை, காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் சாரதா, கிருபாதரன், நிர்மலா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2014) வெள்ளிக்கிழமை பி.ப.3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் இருளன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

(54861)
(12.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட S.R.யேசுபாலன் 10.12.2014 புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

### செல்லத்துரை றொபெட் யேசுபாலன் (சமாதான நீதிவான்)

( இளைப்பாறிய கிராம உத்தியோகத்தர்)

| | |
|---|---|
| பெற்றோர்: | அமரர் (1950.09.26) சின்னத்தம்பி யேசுதாசன் செல்லத்துரை (ஏழாலை வடக்கு) |
| | அமரர் (2000.02.28) டொறத்தி இரசம்மா செல்லத்துரை (இருபாலை கிழக்கு) |
| மனைவியின் பெற்றோர்: | அமரர் (1982.03.27) துரையப்பா டேவிட் திசைநாயகம் (தம்பாலை அச்சுவேலி) |
| | அமரர் (1956.01.19) அற்புதமலர் திசைநாயகம் (உரும்பிராய்) |
| மனைவி: | கிறிஸ்ரினா அனந்தநிதி யேசுபாலன் |
| மகள்: | கிறிஸ்ரிலா தாமரி.ஜோ. இன்பராஜ் (ஆங்கில ஆசிரியர், மாணவி-ஆங்கில இலக்கியம் 4 ஆம் வருடம் யாழ்.பல்கலைக்கழகம்) |
| மருமகன்: | இராஜசவுந்தரம் ஜோ.இன்பராஜ் (முகாமையாளர்தே.சே.வங்கி-கிளிநொச்சி) |
| பேரப்பிள்ளைகள்: | ஜேன் ஜோதினி ஜோ.இன்பராஜ் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) |
| | ஜெனற் ஜோயலின் ஜோ. இன்பராஜ் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) |
| சகோதரர்கள்: | செ. டேவிட் தேவ அனுக்கிரக செல்வம் (இளைப்பாறிய பொறியியலாளர் கனிப்பொருள் கூட்டுத்தாபனம்) |
| | ஜொய்ஸ் றூபாவதி நேசராசா (கொழும்பு) |
| | செ.ஏனஸ்ட் தேவதயாநிதி (சிவில் பொறியியலாளர், ஓமான், நைஜீரியா பொட்ஸ்வானா, சிங்கப்பூர்) ஆஸ்திரேலியா |
| | செ.தேவகருணாநிதி (Lived 3 months only) |
| மைத்துனர்: | இரட்ணசாமி சொலமன் நேசராசா (இளைப்பாறிய முகாமையாளர் இலங்கை வங்கி) |
| மைத்துனிகள்: | றூபி நாளினி தேவ அனுக்கிரக செல்வம் (கொழும்பு), ரட்ணவதனி தேவதயாநிதி (ஆஸ்திரேலியா), றூபநிதி நைல்ஸ் (மட்டக்களப்பு), தயாநிதி மதனராஜ் (ஜேர்மனி), மாநிதி பங்கராஜ் இளைப்பாறிய ஆசிரியர் (ஆஸ்திரேலியா), கலாநிதி இராஜகுலேந்திரன் முன்னாள் ஆசிரியர் (ஆஸ்திரேலியா), அற்புதநிதி சோமநாதர் முன்னாள் ஆசிரியர் (ஆஸ்திரேலியா) |
| சகலன்கள்: | அமரர் ஜோர்ஜ் நைல்ஸ் (M.L.T) |
| | வண ஏ.சி.மதனராஜ் முன்னாள் தெ.இ.தி. ஊழியர் (ஜேர்மனி) |
| | சீ.ஜே. பங்கராஜ் இளைப்பாறிய ஆசிரியர் (ஆஸ்திரேலியா) |
| | வண.எம்.இராஜகுலேந்திரன் (முன்னாள் தெ.இ.தி. ஊழியர் ) (ஆஸ்திரேலியா), பாஸ்டர் எஸ்.கே.சோமநாதர் முன்னாள் சீயோன் தேவாலய ஊழியர் (ஆஸ்திரேலியா) |

| | | |
|---|---|---|
| பிறப்பு: | 08.08.1946 (கண்டி) | |
| திருமணம்: | 07.02.1979 | |
| கல்வி: | சைவப்பிரகாச வித்தியாசாலை தெல்லிப்பழை | 1951-1953 |
| | யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை | 1954-1955 |
| | மானிப்பாய் இந்துக்கல்லூரி, மானிப்பாய் | 1956-1961 |
| | யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை | 1962-1963 |
| தொழில்: | பொஸ்கொம் எஸ்டேட், பலாங்கொடை | 1964-1965 |
| | வை.எம்.சீ.ஏ. யாழ்ப்பாணம். | 1966-1967 |
| | EB Creasy & Co Ltd / Darley Butler & Co Ltd யாழ்.கிளை | 1968-1973 |
| | Autos Ltd யாழ்ப்பாணம் | 1974-1977 |
| | கமநல சேவைத் திணைக்களம் | 1978-1983 |
| | பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 1983-2001 |
| | Green Memorial Hospital மானிப்பாய் / Green Memorial Hospital மானிப்பாய் | 2002-2005 |
| | Mc. Leod Hospital இணுவில் | 2008- 2012 |
| சமயப்பணி: | தென் இந்திய திருச்சபை தெல்லிப்பழை | |
| | தென் இந்திய திருச்சபை யாழ். ஆதீனம் | |
| அலுவலகப்பணி: | உதவி அரசாங்க அதிபர் பணிமனை, தெல்லிப்பழை | |
| கல்விப்பணி: | பழைய மாணவர் சங்கம், அபிவிருத்தி சபை யூனியன் கல்லூரி தெல்லிப்பழை | |
| சமூக, விளையாட்டுப்பணி: | இனிய இதயங்கள் அமைப்பு, மானிப்பாய் | |
| | வை.எம்.சீ.ஏ உடுவில் | |
| | வைரமுத்து நடிகமணிசபா காங்கேசன்துறை | |
| | சுப்பர்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் தெல்லிப்பழை | |
| | உதயசூரியன் சனசமூக நிலையம் உடுவில் | |
| | உடுவில் மத்தி சனசமூக நிலையம் உடுவில் | |
| | உடுவில் மத்தி விளையாட்டுக் கழகம் | |
| | வலி வடக்கு ஓய்வூதியர் கூட்டுறவுச்சங்கம் | |
| | ஞானவைரவர் சனசமூக நிலையம், தெல்லிப்பழை | |
| அரசியல் பணி: | இலங்கைத் தமிழரசுக்கட்சி | |
| வசித்த இடங்கள்: | தெல்லிப்பழை, ஆனைக்கோட்டை, அச்சுவேலி, உடுவில், இணுவில், சுண்டுக்குழி | |

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (12.12.2014) வெள்ளிக்கிழமை 2.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக தெல்லிப்பழை கிறிஸ்தவ சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

29, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி. (54857) (45.4. 6.3)

தகவல்: குடும்பத்தினர்.

# செங்கோல் எறிந்தமைக்கு மன்னிப்புக் கோரமாட்டேன்

## சிவாஜிலிங்கம் விடாப்பிடி

யாழ்ப்பாணம், டிசெ. 12
செங்கோலைத் தூக்கி எறிந்தமை தொடர்பில் நான் மன்னிப்புக் கேட்கமாட்டேன். அத்துடன் அதனைத் திருத்தியதற்குரிய பணத்தையும் செலுத்தமாட்டேன். எனது உயிரே போனாலும் நான் மாறமாட்டேன்.

இவ்வாறுவடக்குமாகாணசபைஉறுப்பினர்எம்.கே.சிவாஜிலிங்கம் வடக்கு மாகாண சபையில் நேற்றுத் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் கடந்த அமர்வில் செங்கோல் தூக்கி வீசப்பட்டமை தொடர்பில், எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாவினால் கொண்டு வரப்பட்ட சிறப்புரிமை மீறல் மீதான விவாதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.




சபையில் செங்கோல் தூக்கி எறியப்பட்டமை சாதாரண எழுந்தமான விடயமாக இருக்க முடியாது. அது முன்னரே திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட ஒன்று. எனவே இதற்குத் தண்டனை வ்ழங்கப்பட வேண்டும். அதற்காக அந்த உறுப்பினரைச் சில காலம் சபை அமர்வுகளிலிருந்து இடைநிறுத்தி வைக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா கேட்டுக் கொண்டார்.

இதன்போது ஆளுங்கட்சி உறுப்பினர்கள் விந்தன் கனகரட்ணம், அன்ரனி ஜெகநாதன் ஆகியோர் குறித்த சம்பவம் பிரேரணை ஒத்திவைக்கப்பட்டமையின் விளைவாக ஏற்பட்டது என்றும், அதனால் அந்தச் சம்பவத்தை அப்படியே விடுமாறும் விவாத மாக்கவேண்டாம் என்றும் தெரிவித்தனர்.

ஆனால்ஆளுங்கட்சிஉறுப்பினர்எம்.கே.சயந்தன், தியாகத்தால் உருவான இந்த செங்கோலைத்தூக்கி எறிந்தமை தவறானது என்று தெரிவித்தார். நீண்ட விவாதம் நடைபெற்றது. இதனை உறுப்பினர் சிவாஜிலிங்கம் அமைதியாகப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார்.

இதன்போதுஅவைத்தலைவர்சி.வீ.கே.சிவஞானம், இந்தச் சம்பவம் தொடர்பில் கவலை தெரிவிக்குமாறும், செங்கோலைத்திருத்தியதற்குரிய கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபாவை வழங்குமாறும், அந்தப்பணத்தைவழங்காவிட்டால்தானே செலுத்துவதாகவும் தெரிவித்தார்.

இதனையடுத்து பதில் வழங்கிய சிவாஜிலிங்கம், செங்கோல் நாடாளுமன்றத்தில் எத்தனையோ தடவைகள் தூக்கிச் செல்லப்பட்டிருக்கின்றது. அத்துடன் அதனை மறித்துப் போராட்டம் செய்திருக்கின்றோம். இது தொடர்பில் நான் எத்தகைய தண்டனையையும் ஏற்கத் தயாராக இருக்கின்றேன். ஆனால் மன்னிப்புக் கோரமாட்டேன். அத்துடன் பணமும் செலுத்தமாட்டேன். மேலும் இந்தப் பிரேரணை எதிர்வரும் ஜனவரி மாதம் எடுக்கப்படுமா என்பதில் எனக்குச் சந்தேகம் இருக்கின்றது என்று குறிப்பிட்டார்.

இதன்போதுஉரையாற்றிய மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், எதிர்க்கட்சித் தலைவர் பிளவை ஏற்படுத்தப் பார்கின்றார் என்று குற்றம் சாட்டினார். இதன்போது குறுக்கீடு செய்த எதிர்க்கட்சித் தலைவர், நாங்கள் இதைச் செய்தால் நீங்கள் என்ன செய்வீர்கள் என்று கேட்டார். அதன்போது அதைப் பார்ப்போம் என்று கஜதீபன் பதிலளித்தார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் குறித்த பிரேரணை எடுக்கப்படும் என்று தெரிவித்த முதலமைச்சர், ஆளுங்கட்சிக்குள் எந்தப் பிரிவும் இல்லை–என்றார்.

இறுதியில் பதிலளித்த அவைத் தலைவர், இந்த விடயம் தொடர்பில் மக்கள் தீர்ப்பளிப்பார்கள் என்று தெரிவித்ததுடன், குறித்த பணத்தை தானே செலுத்துவதாகவும் தெரிவித்தார்.

(த–5)

# மரண அறிவித்தல்கள்



## திருமதி பார்வதி சின்னத்துரை

தேவரன், புலோலி தெற்கு புலோலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பார்வதி சின்னத்துரை 11.12.2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னார் - இலட்சுமிப் பிள்ளை தம்பதியினரின் மகளும்காலஞ்சென்ற பொன்னையா சின்னத்துரையின் அன்பு மனைவியும்,காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி சிவக்கொழுந்து, மற்றும் இராசம்மா, சரஸ்வதி, இராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் புவனேஸ்வரி, தெய்வேந்திரராசா (லண்டன்), குலேந்திரராஜா (யாழ். வைத்திய சாலை), ரகுராஜா, கருணைமாலா, புஸ்பமாலா (லண்டன்), காலஞ்சென்ற குமுதா ஆகியோரின் அன்புத்தாயும்யோகரஞ்சிதம் (லண்டன்), காலஞ் சென்ற கந்தசாமி மற்றும் சரோஜினி கிருஸ்ணவேல், ஜெயபாலன்(லண்டன்),சத்தியதேவிஆகியோரின் அன்பு மாமியும், செந்தூரன் (லண்டன்), சுதர்சன் (பிரான்ஸ்), உமா(பிரான்ஸ்), உமாரமணன் (இந்தியா), கஜதீபன்(லண்டன்), சுபாஸ்(லண்டன்), தாரணி(லண்டன்), கரன்(லண்டன்), அச்சுதன் (லண்டன்), செந்தூரன் (லண்டன்),நிலானி(லண்டன்), கோபிசாந் சோபிகா, றஞ்சித், ரஜீவன், சஞ்சேய், அபிராமி (லண்டன்), கோகுலன்(லண்டன்), நிறோஜன், சிந்துஜன், டக்சனா, கிதுசனா, விதுசன், லக்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ராகுல், சாருஜன், நிகாஷி, அபர்னா, காருண்யா, காவியன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2014) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரதுஇல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும். இந்தஅறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
பிள்ளைகள்.
(யாழ். வைத்தியசாலை)

புலோலி தெற்கு,
புலோலி. (54879)(6.8)

## கேதாரஈஸ்வரி சுப்பிரமணியம்



நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கேதாரஈஸ்வரி சுப்பிரமணியம் நேற்று (11.12.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராமு - அன்னம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன் னப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், வசந்தலலிதா, சுரேஸ், றோமலதா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயா ரும், சுந்தரலிங்கம் ஜெயந்தி, சிவநேசன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், விஜேயகாந், அஞ்சனா, றூபா ரமேஸ், நரேஸ், பிரதீசன், அனோயன், பானுயன், விஷ்ணுஜன், அஜீனா, லபிஷா, தனுஷா, திபிஷா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2014) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: குடும்பத்தினர்
நல்லூர் (54878) 021 790 2963

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மகாலட்சுமி சக்திவேல்

சங்கானை தொட்டிலடியைப் பிறப்பிடமாகவும் கரும்புல்லியான் இல. 238, பாண்டியன் குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகாலட்சுமி சக்திவேல் நேற்று 11.12.2014 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-சிதம்பரப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான முருகையா தங்கபிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும் முருகையா சக்திவேல் அவர்களின் அன்பு மனைவியும் நந்தகுமார், நிர்மலாதேவி, சத்தியேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கலாதேவி மற்றும் பத்மேஸ்வரன், வைரவநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் நாகராசா, கிருஸ்ணபிள்ளை, சரஸ்வதி, தில்லையம்பலம், காலஞ்சென்ற பூமாலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவஞானம், சிவயோகம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் விதுசனா, கோபி, அபி, குருசரன் சகானா, விதுர்க்ஷிகா, பவிதா, கிருஸியன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பாண்டியன்குளம் (நட்டாங்கண்டல்) இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல: 238,கரும்புல்லியான்,
பாண்டியன் குளம்.

தகவல்
மகன் நந்தகுமார்.

## திருமதி சரஸ்வதிதேவி கெங்காதரன்



மூளாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி தேவி கெங்காதரன் 11.12. 2014 வியாழக்கிழமை பிற் பகல் ஒரு மணியளவில் இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் கெங்காதரனின் (ஓய்வு பெற்ற ஊழியர் சமநல சேவைத் திணைக்களம்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற வீரவாகு தாமோதரம்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர் களான துரைசிங்கம், தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், லதன் (பொது சுகாதாரப் பரிசோதகர் - மல்லாவி), அனிதா (ஆசிரியை - கிளி/ செல்லியா தீவு அ.த.க.பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுந்தராஜன், பூமணிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஆரணி (ஆசிரியை - ஏஞ் சல் சர்வதேச பாடசாலை - மானிப்பாய்), வாகீசன் (எழுதுவினைஞர் - அச்சுவேலி பலநோக்கு கூ.சங்கம்) ஆகியோரின் பாசமிகு மாமி யாரும், செல்வராசா, மகாலட்சுமி (ஆசிரியை - யா/ மல்லாகம் மகா வித்தியாலயம்), காலஞ்சென்ற செந்தில்நாதன், மங்கயற்கரசி, சிவனேசன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2014) மு.ப 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பித்தனை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்

இராமதோட்டம், மூளாய் கிழக்கு, சுழிபுரம் (54995)
தகவல்: து. கெங்காதரன்
கணவர்

செய்திகள்

# கைதான தமிழக மீனவரை உடனடியாகவே விடுவித்த இலங்கைக் கடற்படையினர்

## அப்படி எதுவுமே நடக்கவில்லை என்கின்றனர் இலங்கைத் தரப்பினர்



இராமநாதபுரம், டிசெ.12

இலங்கைக் கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன் பிடித்தமைக்காக இலங்கைக் கடற்படையினர் எம்மைக் கைது செய்து விசாரணைகளின் பின்னர் விடுவித்துள்ளதாகக் கரை திரும்பியுள்ள இராமநாதபுரம் மாவட்ட மீனவர்கள் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் நேற்று முறைப்பாடு செய்துள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம், மண்டபம் மற்றும் புதுக்கோட்டை மாவட் டம் ஜெகதாபட்டினம்பகுதியில் இருந்து நேற்று முன்தினம் ஆயிரத்துக் கும் மேற்பட்ட விசைப் படகுகளில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர் கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர்.

நேற்று அதிகாலை கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருக்கும்போது 5 ரோந்துக் கப்பல்களில் வந்த இலங்கைக் கடற்படையினர் 6 விசைப் படகுகளுடன் 27 மீனவர்களையும் கைது செய்து 'காரைநகர் கடற்படை முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

பக்க 1 விரிவு

எனினும்சிறிதுநேர விசாரணைகளின் பின்னர் அவர்களை விடுவிப்புச் செய்ததால் சேதமடைந்த படகுகளுடன் உயிர் தப்பிக் கரை திரும்பியுள்ளனர். படகுகளை ரோந்துப் படகுகளால் முட்டி மோதியதில் அவை சேதடைந்துள்ளன. இதனால் படகுகளுக்கு பல இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என இந்திய மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

மீனவர்கள் கைது தொடர்பில் இலங்கைக் கடற்படையினரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, இந்தியப் படகுகளையும், மீனவர்களையும் நேற்றைய தினம் தாம் கைது செய்யவும் இல்லை. விடுவிப்புச் செய்யவும் இல்லை எனத் தெரிவித்தனர். (த-14)



# 500 பேருக்கு வீட்டு மானிய உதவி

காத்தான்குடி, டிசெ, 12

'செழிப்பான இல்லம் 'என்னும் தொனிப்பொருளில் காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் திவிநெகும உதவிபெறும் குடும்பங்கள் 500 பேருக்கு வீட்டு மானிய உதவி வழங்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் நடைபெற்றது.

வாழ்வின் எழுச்சி திணைக்கத்தின் காத்தான்குடி பிரதேச பொறுப்பாளர் ஏ.எம்.சுல்மி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலை வரும்,பொருளாதார அபி விருத்தி பிரதியமைச்சருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் 500 பேருக்கு வீட்டு மானிய உத வித் தொகையான 2ஆயிரத்து 500 ரூபாவை வழங்கினார். (த-10)

# உழுந்து பயிரிடுவதால் அதிகளவான இலாபம்

## வவுனியா விவசாய பணிப்பாளர் தெரிவிப்பு

வவுனியா, டிசெ'12

உழுந்துப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதன் மூலம் அதிக இலாபம் கிடைப்பதனால் விவசாயிகள் அதில் ஈடுபடுமாறு வவுனியா மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் திருமதி அ.சகிலா பானு கோரியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

கடந்த காலங்களில் நெற் பயிர்ச் செய்கையால் வவுனியா மாவட்டத்தில் பல விவசாயிகள் பாதிக்கப்பட்டு முதலிட்ட பணத்தைக் கூட மீளப்பெற முடியாமல் பெரும் நட்டத்தை எதிர்கொண்டனர்.

நெல் பயிரிட்டுத் தொடர்ச்சியாக நட்டத்தைச் சுமக்காமல் வவுனியா மாவட்டத்தில் அருகி வரும் உப பயிர்ச் செய்கையான உழுந்தைப் பயிடுவதே நல்லது.

அதிக விளச்சலைத் தரக்கூடிய அனுராத என்ற வகை உழுந்தைப் பயிரிடுவதன் மூலம் உழுந்து பயிரொன்றுக்கு 50 முதல் 70 காய்களை அறுவடை செய்யலாம் 65 முதல் 70 நாள்களுக்குள் அறுவடை செய்யலாம்.

உழுந்துப்பயிர்ச்செய்கை தொடர்பாக மேலதிக தகவல் களை அலுவலக நேரத்தில் வவுனியா மாவட்ட விவசாய திணைக்களத்தில் பெற்றுக்கொள்ள முடியும் – என்றார். (த-402)

# சலுகை அடிப்படையில் ஓட்டோக்கள்



யாழ்ப்பாணம், டிசெ, 12

முற்போக்கு தமிழ்த் தேசியக் கட்சியினால் சலுகை அடிப்படையில் ஓட்டோக்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு நேற்று வியாழக்கிழமை கட்சி அலுவலகத்தில் செயலாளர் நாயகம் எஸ்.விஜயகாந்த் தலைமையில் நடைபெற்றது.

இங்கு உரையாற்றிய விஜயகாந், வறிய குடும்பங்களின் வாழ்வாதார நிலைமையைக் கருத்தில் கொண்டு முற்போக்குத் தமிழ்த் தேசியக் கட்சியினால் ஓட்டோக்கள் சலுகை அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

ரி.வி.எஸ் நிறுவனம், கொமர்சியல் கிரடிட், ஹற்றன் நஷனல் காப்புறுதி நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் இந்தச் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்தச் செயற்திட்டத்தின் முதற்கட்டமாக 20 பேருக்கு இந்த வாகனங்கள் வழங்கப்படுகின்றன – என்றார். (த-10)

# இலங்கை மீனவர்கள் 12 பேரும் மறியலில்

எல்லை தாண்டி மீன்பிடித்த இலங்கை மீனவர்கள் 12 பேருக்கு இராமநாதபுரம் நீதிமன்றத்தால் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை மீண்டும் விளக்க மறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த 12 மீனவர்கள் இரண்டு படகில் மீன்பிடிக்கச் சென் றிருந்தனர்.

கடந்த செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி கன்னியாகுமாரி அருகே இந்தியக் கடல் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருக்கும் போது ரோந்துப் பணியில் ஈடுபட்டுகொண்டிருந்த இந்தியக் கடலோரக் காவல்படையினர் இரண்டு படகுடன் 12 மீனவர்களைச் சிறைப் பிடித்தனர்.

தூத்துக்குடி கொண்டு செல்லப்பட்டு இந்திய எல்லையில் மீன் பிடித்தாக தருவைக்குளம் பொலிசார் வழக்கு பதிவு செய்து இராமநாதபுரம் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தினர். (த-14)

# கழிவுகளைக் கொட்டும் இடம் சீரமைக்கப்பட்டது

## இதனையடுத்து நகரில் கழிவகற்றல் துரிதம்

யாழ்ப்பாணம், டிசெ.12

கல்லுண்டாய் வெளியில் கழிவுப் பொருள்கள் கொட்டப்படும் இடம் கனரக வாகனம் மூலம் சீர் செய்யப்பட்டு அவை நிறைவு பெற்றதை அடுத்து யாழ். மாநகரப் பகுதியில் தேங்கிய கழிவுப் பொருள்களை அகற்றும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

பிரதேசத்தில் கடந்த சில நாள்களாக கழிவுப் பொருள் கள் அகற்றப்படாமையால் அவை அதிகளவில் தேங்கின.

இதனால் சுகாதாரச் சீர்கேடு அதிகரித்துக் காணப்பட்டது.

தற்போது கழிவுப் பொருள்களை உடனடியாக அகற்றும் பணிகளில் மாநகராட்சி மன்றக் கழிவகற்றும் பிரிவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கென நேற்று 12 உழவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு கழிவுகள் உடனுக்குடன் அகற்றபட்டன.

மாநகரப் பகுதியில் தேங்கியுள்ள கழிவுகள் இன்னும் ஒரு சில நாள்களில் முற்றுமுழுதாக அகற்றி முடிக்கப்படும் என்றும் சுகாதாரப் பகுதி அதிகாரி ஒருவர் கூறினார்.

மாநகரப் பகுதியில் அனேகமாக மக்கள் தமது வீட்டுச் சுற்றாடல் கழிவுப் பொருள்களை வீதியோரம் கொட்டி விட்டுச் செல்கின்றனர். சிலர் தமது வீட்டுப் பூங்கன்றுகள் மற்றும் பயன்தரு மரங்கள் போன்றவற்றை வெட்டி அகற்றி வீதியோரங்களில்போடுகின்றனர். இதனாலேயே கழிவுகள் அதிகளவில் தேங்குகின்றன.

தொடர்ச்சியான மழை மற்றும் கல்லுண்டாயில் கழிவுகளைக் கொட்டுவதற்கு சீரான வசதியை ஏற்படுத்துதல் ஆகியவற்றால் இந்தக் கழிவுகள் அகற்றும் பணியில் சற்று தாமதம் ஏற்பட்டது–என்றார் அந்த அதிகாரி. (த-17)

# கட்டுத்துவக்கு வெடித்ததில் இளைஞர் படுகாயம்

யாழ்ப்பாணம், டிசெ. 12

வயலில் வைக்கப்பட்ட கட்டுத்துவக்கு வெடித்ததில் இளைஞர் ஒருவர் இரண்டு கால்களிலும் படுகாயமடைந்து மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி அக்கராயனில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த எம்.சாந்தரூபன் (வயது – 20) என்பவரே படுகாயமடைந்தார். அங்கு கட்டுத்துவக்கு வைத்தது யார் என்பது தெரியவரவில்லை.

அது தொடர்பில் விசாரணை முன்னெடுப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். (த-4-101)

# மாணவரின் சுயசிந்தனைக்கு உதவ வேண்டும் பரீட்சைகள்

## கிளிநொச்சி காவேரி கலாமன்ற இயக்குநர் கருத்து

கிளிநொச்சி, டிசெ.12

மாணவர்களின் சுயசிந்தனை வெளிப்பாட்டுக்கு பரீட்சைகள் உதவவேண்டும் என்று கிளிநொச்சி காவேரி கலாமன்ற இயக்குநர் அருட்தந்தை ரி.எஸ். யோசுவா அடிகளார் தெரிவித்தார்.

அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: "புலமைப் பரிசில்பரீட்சையில் வெற்றி ஈட்டிய மாணவர்களுக்கான ஓவியப்போட்டி ஒன்றை யாழ்ப்பாணத்தில் நடத்தினோம். பரீட்சை எழுதிய பின்னர் மாணவர்களின் மன நிலை எவ்வாறு உள்ளது என்பதை அறிவதற்காகவே இந்தப் போட்டி நடத்தப்பட்டது. இதன்போது மாணவி ஒருவர் புதிதாக வெட்டப்பட்ட கிணறு ஒன்றை வரைந்திருந்தார்.

அந்த மாணவியிடம் "ஏன் கிணற்றுப் படத்தை வரைந்தீர்" என்று கேட்டபோது "அண்மையில்தான் கிணறு ஒன்று வீட்டில் வெட்டப்பட்டதாகவும்வீட்டில்எல்லோரும் சேர்ந்து அதற்காக உழைத்திருந்தார்கள். அவர்களுடையஉழைப்பு போன்று தான் பரீட்சைக்காக நாங்களும் கடுமையாக வீட்டிலே உழைக்க வேண்டி இருந்தது. ஒருகிணறு வெட்ட எல்லோரும் சேர்ந்துஉழைப்பதுபோன்று தான் புலமைப் பரிசில் பரீட்சையிலும் எல்லோரும் சேர்ந்து உழைக்க வேண்டியிருந்தது" என்று தெரிவித்திருந்தார். அந்த ஓவியத் தைத்தான் நாம் தெரிவு செய்திருந்தோம். பரீட்சையில் வெற்றியீட்டுகின்ற மாணவர்களுக்கு எந்தவிதமான மன நிலைவளர்ந் திருக்கின்றது. ஒரு பிள்ளை வெற்றியீட்டுகின்ற போது எவ்விதமான இணைந்த செயற்பாடு முக்கியத்துவப்படுத்தப்படுகின்றது. பிள்ளை எவ்வாறு உள்வாங்கியிருக்கின்றது என்பதை முதன்மைப்படுத்தித்தான் அந்த ஓவியத்தை பரிசிலுக்குரியதாகத் தெரிவு செய்தோம்.

அதிபருடையதும், ஆசிரியருடையதும் பெற்றோருடையதும் சமூகத்தினுடையதும் ஒட்டுமொத்த பங்களிப்பின் விளைவுதான் மாணவர்களின் வெற்றியாகும். புலமைப்பரிசில் என்று சொல்லப்படுகின்ற பரீட்சை எவ்வளவு தூரம் சமூகத்துக்கு ஊக்கத்தையும் ஆக்கத்தையும் ஏற்படுத்துகின்றது என்று பல்வேறு விமர்சனங்கள் உள்ள போதிலும் சாதகமான மனப்பான்மை இதனுடாக வளர்ந்து வருவதைப் பார்க்கின்றோம்.

புலமைப்பரிசில் பரீட்சை என்பது சுயமாகச் சிந்திக்கத் தூண்டுகின்றது என்பது பற்றித்தான் தற்போது விவாதங்கள் நடைபெறுகின்றன. ஆசிரியர்கள் கற்பித்துக் கொடுக்கின்ற விடயத்தை பிள்ளை உள்வாங்கி பரீட்சை எழுதுகின்றதா? இந்தப் பரீட்சை பிள்ளையை சுயமாகச் சிந்திக்க வைத்து சுயசிந்தனையாளராக வளர்ச்சியடைய வைக்கின்றதா? என்பதேமுக்கியமானதாகும். இவ்வாறானவிழாக்கள் இத்துடன் முடிந்துவிடக் கூடாது. அணிவிக்கின்ற மாலைகள் கொடுக்கின்ற உற்சாகங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும்–"என்றார். (வ–18)



## முதல்வர் வழங்கினார் வாழ்வாதார உதவி

யாழ்ப்பாணம், டிசெ.12

2014 ஆம் ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து வருமானம்குறைந்த குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

வடமாகாண முதலமைச்சரால் வழங்கப்பட்ட இந்த வாழ்வாதார உதவிகள் யாழ்.மாவட்டத்தில் 12 குடும்பங்களுக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 7 குடும்பங்களுக்கும், வவுனியா மாவட்டத்தில் ஒரு குடும்பத்துக்கும் என 20 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணத்திலுள்ள கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையில் வைத்து பயனாளிகளுக்கானஉதவிகள்வடமாகாண முதலமைச்சரால்திங்கட்கிழமை வழங்கப்பட்டன. (வ–14)

## எமக்குள்ள ஆளுகை மூலம் மற்றவருக்கு உதவ வேண்டும்

### யாழ். ஆயரின் செயலாளர் கருத்து

குருநகர், டிசெ.12

எமக்குள்ள ஆளுகையை வைத்து மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்று தெரிவித்தார் யாழ். ஆயரின் செயலாளர் வண.பிதா ஆர்.ஜி. விஜின்ரஸ்.

யாழ். சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற ஒளிவிழா 2014 நிகழ்வில் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

யாழ். சென்ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தின் ஒளிவிழா 2014 நிகழ்வுகள் கடந்த 4 ஆம் திகதி வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் அதிபர் அ.மி.கி. மகேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஆசியுரையை நிகழ்த்திய வண.பிதா. ஆர்.ஜி. விஜின்ரஸ்அடிகளார்தமதுஉரையில் மேலும் தெரிவித்ததாவது:–

பதவி அதிகாரம் கிடைக்கும் போது எம்மில் பலர் பணிந்து வருவதில்லை. அவர்கள் அதிகார மிடுக்குடன் செயற்படுவதால் மற்றவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். மக்களுக்கு சிறந்த சேவையை வழங்க முடியாத நிலை உருவாகிறது. நாங்கள் எமது அதிகார மிடுக்கிலிருந்து இறங்கி வந்து மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும். எமது தகுதிக்கும் இயல்புக்கும் ஏற்ற அளவு மற்றவர்களிடம் அன்பு செலுத்துவதுடன் அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யவும் வேண்டும்.

நாம் மற்றவர்களிடத்தில் அக்கறையாக உதவும் மனப்பான்மையுடன் வாழ்ந்தால் அவர்கள் மிகுந்த சந்தோஷமடைவார்கள்"– என்றார். (வ–51)



## காப்பற்ற கால்வாயால் பயணிப்போர் ஆபத்தில்

யாழ்ப்பாணம், டிசெ.12

யாழ்.நகரில் வின்சர் தியேட்டர் சந்தியில் மாக்பெட் எரிபொருள் விற்பனை நிலையத்துக்கு முன்பாகவுள்ள வடிகால்வாயின் மேல் தள பாதுகாப்பு மூடி ஒன்று உடைந்து சேதப்பட்டதால் வீதியால் பயணிக்கும் மக்கள் ஆபத்தை எதிர்நோக்கி வருகின்றனர். குறித்த வடிகால்வாயின் மூடி சேதப்பட்டு கடந்த இரு வாரங்களுக்கு மேலாகப் புனரமைப்பு எதுவும் இன்றி உள்ளது. எனவே நகரில் மக்கள் போக்குவரத்து நெரிசல் கூடிய கஸ்தூரியார் வீதியில் உள்ள இந்த வடிகால்வாயின் பாதுகாப்பு மூடியை உடன் சீர்செய்யுமாறு சம்பந்தப்பட்டோரை மக்கள் கோருகின்றனர். (வ–17)

## கட்டாக்காலிகளால் வீதி விபத்துக்கள்

மூதூர், டிசெ.12

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கிளிவெட்டி குமாரபுரம் பிரதான வீதியில் கட்டாக்காலிகளாக திரியும் கால்நடைகளால் வீதி விபத்துக்கள் ஏற்படுவதுடன் வீதிகளும் அசுத்தம் அடைவதாக அந்தப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் கிளிவெட்டி, மட்டு நகர் வீதியில் சிமெந்து ஏற்றி வந்த கனரக வாகனம் வீதியில் திரிந்த கால்நடைகளால் வீதி விபத்துக்குள்ளாகியது. இது போன்ற பல விபத்துக்கள் கிளிவெட்டி பிரதான வீதியில் அடிக்கடி இடம் பெற்று வருகின்றன.

கிளிவெட்டிப் பாலத்தில் வீதி விளக்குகள் அமைக்கப்படாததாலும் கிளிவெட்டி, குமாரபுரம் பிரதான வீதியில் வீதி மின்விளக்குகள் இல்லாமையாலும் கிளிவெட்டி நலன்புரி முகாமிலுள்ள சம்பூர் மக்கள் இரவு நேரங்களில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். (வ–40)

## யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் நாவலர் விழா நாளை

யாழ்ப்பாணத்தமிழ்ச்சங்கம்முன்னெடுக்கும்நாவலர்விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கரிகணன் நிறுவனத்தின் ஆதரவுடன் தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பிதலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கரிகணன் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் சி.ராஜ்குமார் தம்பதியர் மங்கல விளக்கேற்றுவர். தமிழ்ச்சங்கப் பொருளாளர் ச.லலீசன் வரவேற்புரையை ஆற்றுவார். 'நாவலரின் பன்முக ஆளுமை' என்ற பொருளில் உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆசிரியர் தி.செல்வமனோகரன் சிறப்புரை ஆற்றுவார். 'நாவலர் ஆற்றிய பணிகளுள் காலத்தால் விஞ்சி நிற்கும் பணி எது?' என்ற கருப்பொருளில் பட்டிமன்றம் இடம்பெறும்.

பட்டிமன்ற நிகழ்வில் 'சமயப் பணிகளே' என்ற தலைப்பில் ஆசிரியர்களான கு.பாலசண்முகன், அ.வாசுதேவா ஆகியோரும் 'தமிழ்ப்பணிகளே' என்ற தலைப்பில் மருத்துவபீடப்பதிவாளர் இ.சர்வேஸ்வரா, முகாமைத்துவ உதவியாளர் ந.ஐங்கரன் ஆகியோரும் வாதிகளாகவும் பிரதிவாதிகளாகவும் கலந்துகொள்வர். நிறைவு நிகழ்வாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நடனத்துறையினரின் தயாரிப்பில் உருவான ஆறுமுகநாவலர் என்ற பொருளில் அமைந்த நாட்டிய நாடகம் இடம்பெறும்.

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் நிறைவுரையாற்றுவார். (வ)

உதயன்

# செய்திகள்

## வடக்கில் பெருமளவில் முதியோரை கௌரவித்தது நட்புறவுக் கழகமே

### வட மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் புகழாரம்

கைதடி, டிச.12
வட மாகாணத்தில் இவ்வளவு தொகை முதியோர்களை இந்த நட்புறவுக் கழகமே கௌரவித்துள்ளமை பெரும் அதிசயமாகவுள்ளது. அவர்களது செயற்பாடு கைதடியில் மட்டுமல்லாது ஏனைய இடங்களுக்கும் வியாபித்து செயற்பட இனிமேல் அக்கறை கொள்ள வேண்டும். இதற்கான எந்த உதவியையும் சமூக சேவைத் திணைக்களம் ஊடாகவோ அன்றேல் தனிப்பட்ட ரீதியாகவோ வழங்க நான் தயார்.
இவ்வாறு தெரிவித்தார் வட மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ்.
கனடா வாழ் கைதடி உறவுகளின் நிதியுதவியுடன் கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகம் கைதடி, நாவற்குழி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த முதியோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:
இந்த மக்கள் நலன் பேணும் நட்புறவுக்கழகத்தினர் சீரற்ற கால நிலைக்கு மத்தியிலும் முந்நூறுக்கும் மேற்பட்ட முதியோர்களை அன்போடு வரவேற்று உபசரணை செய்து அன்பளிப்பாக நிதியையும் வழங்கியுள்ளார்கள். இந்தச் செயற்பாட்டுக்கு கழக உறுப்பினர்களுடன் இளைஞர்களும் இணைந்து செயற்படுவது பெருமையாக இருக்கின்றது.
கிராமத்தின் மூத்த பொக்கிசங்களான முதியோர்களை, எங்கள் பெரியோர்களைக் கௌரவிப்பது கைதடி மண்ணுக்கு பெருமளவு பெருமை சேர்க்கின்றது.
நான் இன்று இங்கு விசாரித்தவரை இந்த நட்புறவுக் கழகம், முன்பள்ளி மாணர்வர்களின் கல்விக்கு உதவுதல், முன்பள்ளி ஆசிரியர்களின் கொடுப்பனவை வழங்குதல், புற்றுநோயாளருக்கு உதவுதல், வறிய மாணவர்களின் கல்வி விருத்திக்கு உதவுதல் எனப் பல வகைகளில் சேவை புரிந்து வருவதை அறிய முடிகின்றது.
எந்த நிறுவனமும் செய்ய முன்வராததை இவர்கள் செய்வது பெருமைக்குரிய ஒன்றாகும்- என்றார். இந்த நிகழ்வில் முதியோர் கௌரவிக்கப்பட்டதுடன் கைதடியைச் சேர்ந்த சன சமூக நிலையங்களின் உறுப்பினர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (வ-288)

## முல்லைத்தீவு கல்வி வலயத்தின் மாற்றுவலுவுடையோர் நிகழ்வு




புதுக்குடியிருப்பு, டிசெ.12
முல்லைத்தீவு கல்வி வலயத்தின் விசேட கல்விப் பிரிவால் மாற்று வலுவுள்ளோர் தினமும் கண்காட்சியும் சிறப்பான முறையில் நடத்தப்பட்டுள்ளன.
உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில், விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி ம.தேவநேசன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாற்றுவலுவுள்ள மாணவர்களால் உருவாக்கப்பட்ட பொருள்களின் கண்காட்சி மற்றும் மாணவர்கள் கௌரவிப்பு, கலை நிகழ்வுகள் என்பன நடத்தப்பட்டன.
இந்த நிகழ்வில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 118 புள்ளிகள் பெற்ற மாணவி நா.வான்மதி மற்றும் அனைத்துத்துறைகள் சார்ந்து வெற்றியீட்டிய விசேட கல்வி மாணவி இ.விநோதினி ஆகியோருக்கும் மாணவிகளுடன் மாகாண மட்ட மாற்று வலுவுள்ளோருக்கான விளையாட்டுப் போட்டியில் சாதனை படைத்த மாணவர்களுக்கும் பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.
சேப்வ் த சில்றன் நிறுவனத்தால் வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் கல்வி பயிலும் விசேட தேவையுள்ள மாணவர்களுக்கான பல லட்சம் ரூபா பெறுமதியுடைய 6 தட்டச்சுப் பொறிகள் வழங்கப்பட்டன.
இனிய வாழ்வு இல்ல விசேட தேவைகளுடைய மாணவர்கள் மற்றும் உடையார்கட்டு மகா வித்தியாலயம், வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலய ஆசிரியர்கள் இணைந்து வழங்கிய வில்லுப்பாட்டு நிகழ்வும் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் புதுக்குடியிருப்புக் கோட்டக் கல்வி அதிகாரி க.சேய்சோதிகாந்தன், இனிய வாழ்வு இல்லப் பணிப்பாளர் ச.திருச்செல்வம், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், விசேட கல்வி ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (வ-555)

## தெல்லிப்பழை மூத்த பிரசைகள் குழுவுக்கு ஓட்டோ கையளிப்பு



வலி வடக்கு, டிசெ .12
வலி.வடக்கு தெல்லிப்பழை மூத்த பிரஜைகள் குழுவின் போக்குவரத்து நன்மை கருதி வடமாகாண ஆளுநரால் ஓட்டோ கையளிக்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை பிற்பகல் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.
வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி ஓட்டோவை வலி.வடக்கு பிரதேச செயலாளர் எஸ்.ஸ்ரீமோகனன் மற்றும் மூத்த பிரசைகளிடம் கையளிக்கின்றார்.(வ-86)

## கட்டாக்காலி நாய்களுக்கு கருத்தடை

யாழ்ப்பாணம், டிசெ.12
சுன்னாகம் பிரதேசசபைப் பகுதியில் கட்டாக்காலி நாய்களுக்கு கருத்தடை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
சுன்னாகம் பொதுச்சந்தையில் சமீபகாலமாக கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துக் கொண்டிருந்த நிலையில் சுமார் எழுபது நாய்களுக்குக் கடந்த புதன்கிழமை கருத்தடை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கட்டாக்காலி நாய்கள் மீது மக்கள் கொண்டிருந்த அச்சம் காரணமாக சிலர் மரக்கறிகளைக் கொள்வனவு செய்ய பொதுச்சந்தையைத் தவிர்ப்பதாகவும் இனிவரும் காலங்களில் அந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் என்பதால் தமது வியாபாரம் உயர்வடையும் என்று வியாபாரிகள் சிலர் தெரிவித்தனர்.

## பஸ் நிலையத்தை பேணுவதில் சிந்திப்பார்களா பயணிகள்?

தென்மராட்சி, டிசெ. 12
சாவகச்சேரி பஸ் நிலைய கட்டடத்தின் வெளிப்புறங்கள் பொதுமக்கள் பயன்படுத்த முடியாத அளவுக்கு சீர்கேடான நிலையில் காணப்படுகின்றன.
குறித்த பஸ் நிலையத்துக்குள் பஸ்ஸுக்காக காத்திருப்போர் வாகனம் வந்தால் கட்டடத்தைச் சுற்றி வந்து வாகனங்களில் ஏற வேண்டியுள்ளது.
பஸ் நிலையத்தில் நீண்ட நேரமாகத் தங்கியிருப்பவர்களின் வெற்றிலைப் பாவனை சில இடங்களை கால் வைக்க முடியாத அளவுக்கு செந்நிறமாகியிருக்கிறது. பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், முதியோர்கள் என ஆயிரக்கணக்கான பொதுமக்கள் தங்கிச் செல்லும் பஸ் நிலையக் கட்டட சுகாதாரச் சீர்கேட்டை நகரசபை சுகாதாரப் பகுதியினரோ சுற்றாடல் பாதுகாப்பு பொலிஸாரோ கவனிக்காமல் இருப்பது குறித்து பயணிகள் கவலை தெரிவித்துள்ளனர். (வ-9)



குருநகர் ஐந்துமாடி குடியிருப்பின் பின்புறமாக குடியிருப்பு மக்களால் கொட்டப்படும் கழிவுகள் பல தினங்களாக அங்கிருந்து அகற்றப்படாமல் உள்ளன. பெய்துவரும் மழையால் குருநகர் நிலப்பகுதி கடலோடு கலக்கும் நிலை காணப்படுகிறது. இந்தநிலையில் குறித்த கழிவுகளில் மாமிசக்கழிவுகள் இருப்பதால் துர்நாற்றம் வீசுவதாகவும் உடனடியாக இந்தக் கழிவுகளை அங்கிருந்து அகற்றும் படியும் ஐந்துமாடி குடியிருப்பு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அத்துடன் இதுபோன்று பல இடங்களில் தற்போது கழிவுகள் நிரம்பி வழிகின்றன. (வ-21)

## போதைப் பாவனை குறித்து மன்னாரில் விழிப்புணர்வு

மன்னார், டிசெ.12
'போதைப்பொருள் பாவனை மற்றும் சிகரெட் பாவனையை இல்லாதொழித்து ஆரோக்கியமாக வாழ்வோம்' என்ற தொனிப் பொருளிலான விழிப்புணர்வுக் கருத்தரங்கு மன்னார் பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது.
மன்னார் மாவட்ட மது வரித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கருத்தரங்கில் போதைப் பொருள் பாவனையின் தாக்கம், மதுப்பாவனையால் குடும்பத்தில் ஏற்படும் சச்சரவுகள், சிகரெட் பாவனையால் உண்டாகும் நோய்கள் மற்றும் பொருளாதார ரீதியான தாக்கங்கள் தொடர்பாக படக்காட்சிகளும் விளக்க வுரைகளும் வழங்கப்பட்டன. (வ-14)



## 2010ஆம் ஆண்டு தேர்தலில் முறைகேடு நடைபெறவில்லை

கொழும்பு, டிசெ.11

2010ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது கணினி முறைக்கேடுகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை என்று பொது வேட்பாளர் மைத்திரிபால சிறி சேன தெரிவித்துள்ளார். ஊடக பிரதானிகள் மத்தியில் நேற்று உரையாற்றிய அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அதேபோல எதிர்வரும் தேர்தலிலும் இவ்வாறான முறைக்கேடுகள் ஏற்படாது என்று மைத்திரிபால தெரிவித்தார்,

கடந்த ஜனாதிபதி தேர்தலில் பசில் ராஜபக்ஷ தலைமையில் தனியான பிரிவு செயற்பட்டதாகக்கூறப்படுவதில் எவ்வித உண்மையுமில்லை என்றும் மைத்திரி குறிப்பிட்டார்.

(ற)

# பொது எதிரணியின் தேர்தல் அறிக்கையில் தமிழருக்கான தீர்வு இல்லை

## ஆனாலும் வட பகுதிக்கு பரப்புரைக்கு வருவாராம் மைத்திரி

யாழ்ப்பாணம், டிசெ. 12

ப 1 விரிவு

தமிழ்மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் எதுவும் குறிப்பிடப்படமாட்டாது என்று கூறியுள்ளார் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரி பால சிறிசேன.

"தமிழர் தீர்வுத் திட்டம் தொடர்பில் விஞ்ஞாபனத்தில் எதுவும் குறிப்பிடப்பட மாட்டாது. ஆனாலும் வடக்கில் சென்று பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபடுவேன்"– என்று அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் ஊடகப் பிரதானிகளை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடிய போதே பொதுவேட்பாளர் மைத்திரிபால இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"தேர்தல் விஞ்ஞாபனம் இன்னும் சிலதினங்களில் வெளியாகும். அதில் எமது நூறு நாள் வேலைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஜனாதிபதிமுறைமையை இல்லாதொழிப்பதே பிரதானமாகக் கொள்ளப்படும். தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் தொடர்பில் எதுவும் இதில் உள்ளடக்கப்படமாட்டாது. பொது எதிரணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசி வருகின்றது. இன்னமும் எந்தவொரு ஒப்பந்தமும் அவர்களுடன் மேற்கொள்ளவில்லை. தேர்தல் காலத்தில் சகல கட்சிகளுடனும் பேச வேண்டும் என்பதன் அடிப்படையில் பேச்சு இடம்பெற்று வருகின்றது" என்று மைத்திரி குறிப்பிட்டார்.

(ற–5)



பொது எதிரணி ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்து நல்லாட்சிக்கான தேசிய முன்னணி பல இடங்களில் மக்கள் சந்திப்புகளை நடத்தி வருகின்றது. கடந்த திங்கட்கிழமை கொழும்பு, கொம்பனித் தெருவிலும், அங்குலாணயிலும் மக்கள் சந்திப்புகள் அந்த முன்னணியால் நடத்தப்பட்டன. அதன்போது நிறைவேற்று அதிகாரம் மற்றும் 18 ஆவது அரசமைப்புத் திருத்தம் என்பவற்றின் அபாயங்கள் குறித்து மக்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. ஆட்சி மாற்றத்தின் அவசியம் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது என்று அந்த முன்னணி தெரிவித்தது. (ற–10)

# போராடுவதைத் தவிர வேறு வழி இல்லை

## வினோ நோகராதலிங்கம் எம்.பி.எடுத்துரைப்பு

வவுனியா, டிசெ.12

பிரிட்டிஷ் அரசிடம் இருந்து நாடு சுதந்திரமடைந்தது முதல் நாட்டின் ஒரு பகுதியினரே அந்தச் சுதந்திரத்தை அனுபவிக்கின்றனர். அன்று தமிழ் மக்களுக்கும் சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தால் நமது தலைவர்கள் இன்று வரை போராட வேண்டி ஏற்பட்டிருக்காது. உரிமையோடு உயிர் வாழ்வதற்கு நாம் தொடர்ந்தும் போராடுவதைத்தவிர வேறு வழி நமக்கு இல்லை – இவ்வாறு தெரிவித்தார் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வினோ நோகராதலிங்கம்.

வவுனியா விளக்கு வைத்த குளம், மகிழங்குளம் ஆகிய கிராமங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புலம்பெயர்ந்து ஜேர்மனியில் வசிக்கும் தமிழீழ விடுதலை இயக்க உறுப்பினர் தேவராஜா ரகு மற்றும் வவுனியா வர்த்தகச் சங்கம், கூட்டமைப்பின் ஆதரவாளர்களின் நிதி உதவியில் பெற்றுக்கொள்ளப்பட்ட அத்தியாவசிய பொருள்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"எதிர்வரும் தேர்தல்களும், எமது வாக்குகளும் கூட எமது போராட்டத்தின் ஓர் அங்கமும், அதன் வடிவமும் தான். தமிழ் மக்களின் சிந்தனையுடன் செயற்படும் ஒரு நோக்கத்துக்கானதாக அமைய வேண்டும். கொஞ்சம் நிலை மாறினாலும் மீண்டெழுவது கடினமாகிவிடும். ஒற்றுமையே தமிழர்களின் அரசியல் பலம் என்பதனை கடந்த காலங்களிலும் நாம் நிரூபித்துக் காட்டியிருக்கின்றோம்.

இறைவனும், இயற்கையும் எம்மை மாறி மாறி சோதித்துக் கொண்டிருந்தாலும் மனம் தளராமல் எமது சுதந்திரத்தை நோக்கிய கடினமான பாதையின் பயணத்தை நாம் தொடர்ந்தாக வேண்டும். எதிர்வரும் தேர்தலில் வட, கிழக்கு தமிழ் மக்களின் நிலைப்பாட்டை தெரிந்து கொள்ள தென்னிலங்கை கட்சிகளும், சிங்கள மக்களும் அவசரப் பட்டுக்கொண்டிருக்கின்றனர்"– என்று அவர் அங்கு குறிப்பிட்டார்.

"உடல் ரீதியாக அவர்கள் தந்த வலிகள் போதாதென்று மன ரீதியாகவும், வலிகள் தரக் காத்திருக்கின்றார்கள். எல்லா வலிகளையும் தாங்கும் வல்லமை எமக்குண்டு என்பதையும் நாம் அவர்களுக்கு புரிய வைக்க வேண்டும். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குப்பலம் வெற்றி தோல்வியை தீர்மானிக்கவில்லை. ஆனால் தமிழ் மக்களும், தமிழ் தேசியக் கூட்டமைப்பும் எடுத்த முடிவுகள் வெற்றி தோல்வியைத் தீர்மானித்தன. தமிழ் மக்களும், தமிழ் தேசியக்கூட்டமைப்பும் வெவ்வேறான முடிவுகளையோ, நிலைப்பாடுகளையோ கொண்டிருக்க முடியாது."– என்றும் அவர் தெரிவித்தார்.

"ஒவ்வொரு நகர்வுகளையும் நாம் நிதானத்துடனும், அவதானமாகவும் கையாள வேண்டியுள்ளது. தமிழ் மக்களின் கருத்துக்களை உள்வாங்கி அதன் பிரதிபலிப்புக்களை ஒரு மையத்துக்குள் கொண்டு வந்து சேர்ப்பதன் மூலம் தான் எம்மால் வெற்றி கொள்ள முடியும். இதற்கு ஒற்றுமை அவசியம். கடந்த கால ஆயுதம், அரசியல் போராட்டங்களில் எமது தலைமைகள் வேறு வேறு சந்தர்ப்பங்களில் எடுத்த சில முடிவுகள் விமர்சனங்களுக்குள்ளாகிவந்தமையை நாம் அனுபவங்களாக கொள்ள வேண்டும். தமிழ் மக்களின் கருத்துக்களுக்கும், உணர்வுகளுக்கும் பாதகமில்லாமல் அவற்றை உள்வாங்கி சரியான நேரத்தில் சரியான முடிவுகளை தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தலைமை எடுக்கும் வரை எமது மக்கள் பொறுமையுடன் காத்திருக்க வேண்டும்."– என்று தெரிவித்தார். (ற–56)

# நாட்டை முன்னேற்றவே அரசு கடன்கள் பெற்றது

## முன்பள்ளி ஆசிரியர்களுடான சந்திப்பில் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 12

இந்த நாட்டைப் பெறுமதி மிக்கதொன்றாக ஆக்கும் நோக்கிலேயே அரசு வெளிநாடுகளிடம் கடன்களைப் பெற்றுக்கொண்டதாக ஜனாதிபதி மஹிந்த தெரிவித்துள்ளார்.

அண்மையில் அலரிமாளிகையில் இடம்பெற்ற முன்பள்ளி ஆசிரியர்களுடனான சந்திப்பொன்றின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது;

நீங்கள் அனைவரும் இந்த நாட்டின் எதிர்கால நலன்களுக்காக உங்களை அர்ப்பணித்துள்ளீர்கள். இந்த உலகத்தில் பெறுமதி கூடிய சொத்து எதுவெனப் பெற்றோர்களைக் கேட்டால் அது எமது பிள்ளைகளே எனப்பதில் கிட்டும்.

ஒரு கட்டடத்தின் அத்திபாரம் சரியாக அமையாவிட்டால் அந்தக் கட்டடம் சிறப்பாக உருவாக மாட்டாது. அதேபோன்று இந்த நாட்டின் குழந்தைகளது எதிர்காலமும் முன்பள்ளிகள் என்ற அத்திபாரத்தின் மீது கவனமாகக் கட்டியெழுப்பப்பட வேண்டும். அத்தகைய அத்திபாரத்தை இடுவது நீங்களே.

எமது அரசு இதனைத் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளது. அதனாலேயே முன்பள்ளிக் கல்விக்கு எமது அரசு முன்னுரிமை வழங்கிச் செயற்படுகிறது.

போர் இடம்பெற்ற கால கட்டத்தில் உங்கள் மத்தியில் நிலவிய அச்சம், சந்தேகம் யாவுமே இன்று மாற்றமுற்றுள்ளன. இந்த நிலையில் எமது எதிர்காலச் சந் ததியினரின் வாழ்க்கை மேம்பாட் டுக்காக நீங்கள் உழைக்கவேண்டும். எமது அரசு அதற்கான உதவிகள் அனைத்தையும் செய்துதரும்.

எமக்கு 50 மில்லியன் டொலரைக் கடனாக வழங்க வெளிநாடுகள் முன்வராத யுகமொன்று இருந்தது. தற்போது அரசால் பெருமளவு நிதி உதவிகளைப் பெற்று நாட்டின் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க முடிந்துள்ளது.

நாம் பாதைகளை அபிவிருத்தி செய்தபோதும், விமான நிலையம், துறைமுகம் என்பவற்றை நிர்மாணித்தபோதும் அவற்றால் பயனேதுமில்லை என விமர்ச்சித்தார்கள். ஆனால் அவற்றின் பெறுமதி, அவற்றால் கிட்டும் வசதிகள் உங்களுக்கு இப்போது புரிகிறது. அது மட்டுமன்றி நாட்டில் பெரும்பாலான இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களையும் உருவாக்கிக் கொடுக்க முடிந்துள்ளது. அந்த வகையில் எதிர்காலத்தில் நாம் முன்னெடுக்கவுள்ள அபிவிருத்தித் திட்டங்களுக்கு தேவையான திறன் மிக்க சேவையாளர்களை உருவாக்க வேண்டிய பொறுப்பு உங்கள் மீதே பாரப்படுத்தப் பட்டுள்ளது. அத்தகையதொரு அணியினரை உருவாக்குவதற்கான அத்திபாரத்தை நீங்களே இடுகிறீர்கள்.

இந்த நாட்டின் எதிர்காலச் சந்ததியினர் சகல துறைக் கல்வியைக் கற்கவும், பல மொழிகளைக் கற்கவும் தக்க திறனைப் பெறவேண்டும்.

இதனாலேயே அரசு முன்பள்ளிக் கல்விக்கு முன்னுரிமை வழங்கிச் செயற்பாடுகிறது. இலங்கையின் கல்வித்துறை வரலாற்றில் முதன் முதலாக சிறுவர் கல்வி மற்றும் ஆரம்பக் கல்வி வளர்ச்சிக்காக ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கவென ஆலோசகரொருவரை நிமித்திருப்பது எமது அரசேயாகும். இன்று சிறுவர் கல்வி வளர்ச்சிக்கு உதவ ஏராளமான மத்திய நிலையங்களை உருவாக்கியுள்ளோம். அதே போன்று முன்பள்ளிகளுக்கான பாடசாலை உபகரணங்கள் தேவையான வளங்களைப் பெற்றுத்தர நாம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். இவற்றையெல்லாம் நாம் செய்வது நீங்கள் எமது எதிர்காலச் சந்ததியினரான சிறுவர்களுக்கு முன்பள்ளிக் கல்வியை வழங்கி அவர்களது கல்வி வளர்ச்சிக்கு அடித்தளமிடும் உங்களது சேவைக்கு மதிப்பளிப்பதற்கேயாகும். – என ஜனாதிபதி தெரிவித்திருந்தார். பிரதிக்கல்வி அமைச்சர் இந்திக்க பண்டாரநாயக்கவும் இந்த நிகழ் வில் கலந்து கொண்டிருந்தார்.

# செய்திகள்

## தேர்தலை இலக்கு வைத்து போலி இணையங்கள்

கொழும்பு, டிசெ.12

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து போலி இணையத்தளங்களும் சமூக வலைத்தள கணக்குகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் தொடர்பாடல் பிரிவு பணிப்பாளர் அதுல புஸ்பகுமார தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலி இணையத்தளங்கள் மற்றும் சமூக வலைத்தள கணக்குகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த அனைத்து இணையத்தளங்களும், சமூக வலைத்தள கணக்குகளும் கடந்த 3 வார காலப்பகுதிக்குள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஜனாதிபதித் தேர்தல் பரப்புரையை அடிப்படையாகக்கொண்ட போலி இணையத்தளங்களைப் போன்றே, பேஸ்புக் மற்றும் டுவிட்டர் ஆகிய சமூக வலைத்தள கணக்குகளும் ஆயிரக்கணக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. செய்திமூலகங்களைக்குறிப்பிடாத செய்திகள், அவதூறு ஏற்படுத்தும் தகவல்கள் அடங்கிய செய்திகள் இந்தப் புதிய இணையத்தளங்களில் பரவலாக வெளியாகி வருகின்றன."– என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## முதல்வர் வசமிருந்த அமைச்சுகள் மாற்றம்

### ஏனைய மூன்று அமைச்சர்களும் அவற்றைப் பகிர்ந்து ஏற்றனர்

யாழ்ப்பாணம், டிசெ. 12

வடக்கு முதலமைச்சரின் கட்டுப்பாட்டிலிருந்த முக்கிய அமைச்சுப் பொறுப்புக்கள், ஏனைய மூன்று அமைச்சர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் புதிய அமைச்சுப் பொறுப்புக்களை மூன்று அமைச்சர்களும்,வடக்குமாகாணஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி முன்பாக நேற்றுமுன்தினம் ஏற்றுக் கொண்டனர்.

வடக்கு மாகாணசபைத் தேர்தலில் வெற்றி பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்திருந்தது. இதனடிப்படையில் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 9 ஆம் திகதி வடக்கு மாகாண அமைச்சரவை பதவியேற்றிருந்தது. வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனின் கீழ், 15 அமைச்சுக்கள் திணைக்களங்கள் ஒதுக்கப்பட்டிருந்தது.

கடந்த ஒரு வருடமாக, வடக்கு மாகாணசபை நிர்வாகம் இயங்கியிருந்த நிலையில் தற்போது அமைச்சுப் பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு அமைச்சரவைப் பொறுப்புக்களில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் முதலமைச்சரின் அமைச்சுக்கு கீழ் இருந்த, நீர் வழங்கல், உணவு வழங்கலும் விநியோகமும், கூட்டுறவு அபிவிருத்தி என்பன வடக்கு மாகாண விவசாயம், கமநல சேவைகள், கால்நடை, நீர்பாசனம், சுற்றுச் சூழல் அமைச்சர், பொ.ஐங்கரநேசனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி, மோட்டார் திணைக்களம் என்பன வடக்கு மாகாண மீன்பிடி, போக்கு வரத்து, கிராமிய அபிவிருத்தி, வர்த்தக வாணிப அமைச்சர் பா.டெனீஸ்வரனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சமூக சேவைகள் மற்றும் புனர்வாழ்வு,பெண்கள் விவகாரம்என்பன வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

புதிய அமைச்சுப் பொறுப்புக்களை மூன்று அமைச்சர்களும், வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி முன்பாக நேற்றுஏற்றுக்கொண்டனர்.(ற–5)



ஐக்கியதேசியக்கட்சியிலிருந்து வெளியேறி ஆளும்கட்சியில் இணைந்து கொண்ட திஸ்ஸ அத்தநாயக்க, சுகாதார அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார். நேற்று முற்பகல் திஸ்ஸ அத்தநாயக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் முன்னிலையில் சுகாதார அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். (ற)

## திருப்பதியில் மஹிந்தவுக்கு ஆசீர்வாதம் கிடைக்கவில்லை

### ஹரீன் பெர்னாண்டோ தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.12

இந்தியாவின் திருப்பதி ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொண்ட மஹிந்த ராஜபக்ஷவுக்கு, அங்கு ஆசீர்வாதம் கிடைக்கவில்லை. அங்கு சென்று வழிபட்டுத் திரும்பிய அவர், 2 இந்து மதத்தைச் சேர்ந்த பிரதி அமைச்சர் களை இழந்துள்ளார் என்றுகூறியுள்ளார்ஊவாமாகாண சபையின்எதிர்க்கட்சித்தலைவர் ஹரீன் பெர்னாண்டோ.

"நான்கு மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் 34 பிரதேச சபை உறுப்பினர்களையும் ஜனாதிபதி இழந்துள்ளார். கடந்த மூன்று வாரங்களில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, நுவரெலியாமாவட்டத்தின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை இழந்துள்ளது."– என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

"ஆளும் கட்சியிலிருந்து இதுவரையில் 13 நாடாளுமன்ற உறுப்பினர்கள் விலகிச் சென்று எதிர்க்கட்சியில் இணைந்து கொண்டுள்ளனர். ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இதுவரையில் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களே இணைந்து கொண்டுள்ளனர்."– என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, தாம் நேற்றுமுன்தினம் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசியதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை என்றும் அவர் தெரிவித்தார். கட்சியை விட்டு ஒரு போதும் விலகப்போவதில்லை என்று தெரிவித்த அவர் விரைவில் ஊவா மாகாணசபையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்றும் கூறினார். (ற)

## தேர்தலுக்காக கைபேசிகள்: பவ்ரல் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.12

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து, ஓய்வு பெற்றபணியாளர்களுக்குதொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டுவருகின்றன என்று பவ்ரல் அமைப்பு கூறியுள்ளது.

இது வாக்காளர்களுக்கு வழங்கப்படுகின்ற கையூட்டல் என்று அந்த அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர்ரோஹனஹெட்டியாராச்சி குற்றஞ்சுமத்தியுள்ளார். இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவித்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். (ற)

## பதவியேற்பு நிகழ்வில் ஊடகங்களுக்குத் தடை

வலி வடக்கு டிசெ. 12

வடக்கு முதலமைச்சரின் வசம் இருந்தமுக்கியஅமைச்சுப்பொறுப்புகள், ஏனைய மூன்று மாகாண அமைச்சர்களுக்கு பகிர்ந்து வழங்கப்பட்ட நிகழ்வுக்கு ஊடகவியலாளர்கள் செல்வது தடை செய்யப்பட்ட சம்பவம் பலத்த கேள்விகளுக்கு உள்ளாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை வட மாகாண ஆளுநரின் முன்னிலையில் வட மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் வட மாகாண முதலமைச்சரும் கலந்து கொண்டார்.

வழமையாக வட மாகாண ஆளுநரின் அலுவலகத்தில் இடம் பெறும் நிகழ்வுகளில் ஊடகவியலாளர்கள் அழைக்கப்படுவது வழமையாகும். ஆனால் அன்று வழமைக்கு மாறாக வடமாகாண ஆளுநரின் அலுவலகத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை அமைச்சர்கள் சென்ற தமது பதவிப் பிரமாணத்தை மேற்கொண்டனர். அந்த நிகழ்வுக்கு ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்படாததுடன் ஆளுநரின் புகைப்படப் பிடிப்பாளர்களும்கூட புகைப்படம் பிடிக்க அனுமதிக்கப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது.

வட மாகாண ஆளுநரின் அலுவலகத்துக்கு மக்களது தேவைக்காகச் செல்ல மறுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமைச்சர்கள் ஊடகவியலாளர்களைக் கூட அனுமதிக்காது தமது பதவிகளை இரகசியமாக பொறுப்பேற்றுள்ளனர் என்று பல தரப்புகளிடம் இருந்தும் விமர்சனங்கள் வெளிவந்துள்ளன. (ற–86)

## எதிரணி அலுவலகத்துக்கு தவறுதலாகச் சென்ற மல்சா

கொழும்பு, டிசெ.12



அமைச்சர் ஜீவன் குமாரதுங்காவின் மகளும், மேல்மாகாண சபை உறுப்பினருமான மல்சா குமாரதுங்க தவறுதலாக எதிர்க்கட்சி அலுவலகத்துக்குள் நுழைந்துவிட்டார். நேற்றுமுன்தினம் காலை கொழும்பில் உள்ள முதலமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றுக்குச் சென்றபோதே, அவர் அருகில் இருந்த எதிர்க்கட்சி அலுவலகத்துக்குள் தவறுதலாக நுழைந்துவிட்டார். இந்தச் சம்பவம் காலை 6.30 மணியளவில் நடந்துள்ளது. எதிர்க்கட்சி அலுவலகத்துக்குள் சென்ற மல்சா, பின்னர் சுதாகரித்துக்குக் கொண்டு கூட்டம் நடைபெறவிருந்த இடத்துக்குச் சென்றுள்ளார். அங்கு தான் தவறுதலாக எதிர்க்கட்சி அலுவலகத்துக்குள் நுழைந்தமை குறித்து ஜனாதிபதியிடமும் அவர் கூறியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## வன்முறைகளைத் தடுக்க தவறினால் பொலிஸ் மா அதிபருக்கு எதிராக வழக்கு

### எச்சரிக்கின்றது சட்டத்தரணிகள் சங்கம்

கொழும்பு, டிசெ.12

தேர்தல் வன்முறைகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் பொலிஸ் மா அதிபருக்கு எதிராக வழக்குத் தொடர நேரிடும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளது சட்டத்தரணிகள் சங்கம்.

ஆளும் கட்சி அரசியல்வாதிகள் உட்பட அனைத்துத்தரப்பினரும் தேர்தல் விதி மீறல்களில் ஈடுபடுவதைத் தடுக்க பொலிஸ் மா அதிபர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று அந்தச் சங்கத்தின் தலைவர் உபுல் ஜயசூரிய வலியுறுத்தியுள்ளார்.

"வருடமொன்றுக்கு 150 முதல் 200 வரையிலான அடிப்படை உரிமை மீறல் மனுக்களே தாக்கல் செய்யப்படுகின்றன. பொலிஸாருக்கு எதிராக மிகவும் சொற்ப அளவிலான அடிப்படை உரிமை மீறல் மனுக்களே தாக்கல் செய்யப்படுகின்றன"– என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"நீதிமன்றச் சேவையின் உயர் அதிகாரிகள் பதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக நிறைவேற்று அதிகாரத்தின் கால்களை முத்தமிட்டு வருகின்றனர். சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் செயலாளர் மஹிந்த பாலசூரிய, பொலிஸ் மா அதிபரின் விவகாரங்களில் தலையீடு செய்து வருகின்றார். தற்போது நாட்டில் அதிக அளவில் ஊழல் மோசடிகள் இடம்பெற்று வருகின்றன"– என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற)

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## 2015ஆம் ஆண்டுக்கான ஆதனவரி அறிவித்தல்

**நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 255 ஆம் அத்தியாயத்தின் கீழ் உரிமையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் சார்பில் பின்வருமாறு முடிவு செய்திருப்பதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.**

01. கட்டளைச் சட்டத்தின் 160(3) ஆம் பிரிவின் நியதிப்படி சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் பரிபாலன எல்லைக்குட்பட்டு அமைந்திருக்கும் நெற்காணிகள் தவிர்ந்த சகல அசையாச் சொத்துக்களிலிருந்தும் வருடாந்தப்பெறுமதியின் 10%மான வரியொன்றினை 2015 ஆம் ஆண்டு முறையே மார்ச்31, யூன்30, செப்ரெம்பர்30, டிசம்பர்31 ஆகிய திகதிகளிலோ அல்லது அதற்கு முன்போ நான்கு கந்தாய தவணைகள் மூலம் செலுத்தப்படவேண்டும்.

02. 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் நாளில் அல்லது அதற்கு முன்னர் வருடாந்த விகிதங்கள் முழுமையாகச் செலுத்தப்பட்டால் 10% கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன் விகித வருமதியாகவுள்ள அக்கந்தாயத்திற்குரிய முதல் மாதத்திற்குள்ளாக கந்தாய விகிதம் செலுத்தப்பட்டால் 5% கழிவும் அனுமதிக்கப்படும்.

03. மேற்சொல்லப்பட்ட பந்தி1இன் பிரகாரம் சொல்லப்பட்ட காலங்களில் விகிதங்கள் செலுத்தப்படாதவிடத்து வெற்றுக்காணிகள், வதிவிடங்கள் மீது 15%மும் மற்றும் ஏனைய இடங்கள் மீது 20%மும் விறாந்துக்கட்டணம் அறவிடப்படும்.

04. ஆதனவரி சார்பாக சகல ஆட்சேபனைகளும் ஒவ்வொரு ஆதனத்திற்கும் தனித்தனியாக 31.01.2015 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கும்படி அன்புடன் வேண்டப்படுகின்றீர்கள்.

நகராட்சி மன்றம்
சாவகச்சேரி.
11.12.2014

(சி17990)(12.3.6)

இ.தேவசகாயம்பிள்ளை.
தவிசாளர்,
நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.



## நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம்

பெறுகைகளுக்கானஅழைப்பு

சான்று பெற்ற பாடசாலையும் தடுப்பு இல்லமும் அச்சுவேலி, மற்றும் அரச சிறுவர் பொறுப்பேற்கும் இல்லம் கைதடிக்கான புதிய உலர் உணவுப் பொருட்கள் விநியோகமும் தொற்றுநீக்கிப் பொருட்கள் விநியோகம் - 2015/2016

1. வடமாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான, தகைமைவாய்ந்த புதிய உலர் உணவுப் பொருட்கள், சமைத்த உணவு மற்றும் தொற்றுநீக்கிப் பொருட்கள் விநியோகத்தர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை பின்வரும் நிறுவனங்களுக்குக் கோருகின்றார்.

| தொடர் இல | பெறுகை இல. | நிறுவனங்கள் | உத்தரவாத வைப்புப் பணம்ரூபா. |
|---|---|---|---|
| 01. | NP/30/02/02/Food/01 | சான்று பெற்ற பாடசாலையும் தடுப்பு இல்லமும் அச்சுவேலி | 50,000 |
| 02. | NP/30/02/02/Food/02 | அரச சிறுவர் பொறுப்பேற்கும் இல்லம், கைதடி | 50,000 |

2. விலைக் கேள்விதாரர் உலர் உணவு விநியோகத்திற்கான வியாபார பதிவுடைய ஒரு நபராக அல்லது தனிப்பட்ட நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

3. விண்ணப்பிப்பவருக்கு ஆகக்குறைந்தது ஒருவருடம் அரசாங்க நிறுவனத்திற்கு இடையீடின்றி உலர் உணவு வழங்கிய பூரண அனுபவமிருத்தல் வேண்டும்.

4. பொருத்தமான உத்தரவாதமுறி ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தனித்தனியாக பெறப்பட்டு பெறுகைகளுடனும் வெவ்வேறாக இணைக்கப்படல் வேண்டும். தனித்தனியாக உத்தரவாதமுறி சமர்ப்பிக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

5. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர் இத்திணைக்களத்தில் கிடைக்கும் **"Application for Bid Documents"** என்ற படிவத்தினை ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தனித்தனியாக பூர்த்தி செய்து பெறுகைக்கு மீளளிக்கப்படாத வைப்பாக ஒவ்வொன்றுக்கும் ரூபா.500/= னை காசாக செலுத்தி தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாட்களில் 15.12.2014 தொடக்கம் 02.01.2015 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். மேலும் 24.12.2014 காலை 10.00 மணிக்கு திணைக்களத்தில் இடம்பெறும் விலைக் கேள்விகள் தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டத்திலும் கலந்து கொள்ளலாம்.

6. விலைக் கேள்விகள் 05.01.2015 ஆம் திகதி 14.00 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ இத் திணைக்களத்தில் ஆணையாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக் கேள்விகள் கேள்வி நேரமுடிவில் விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில் அல்லது எழுத்து மூலம் உறுதியளிக்கப்பட்ட விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.

7. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக் கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ் காட்டப்பட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். (**தொ.பே.இல.** 021 222 8321)

8. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகள் நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**தி.விஸ்வரூபன்**
தலைவர், திணைக்களபெறுகைகள் குழு,
நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் வ.மா,
மீனாட்சி அம்மன் வீதி,
பண்ணை,
யாழ்ப்பாணம்.
**தொலைபேசி** :- 021-205-7102 **தொலைநகல்** 021-205-7103 (சி/17993)


# தொடர்ச்சி

## தூக்கு

வடக்கு மாகாணசபை உறுப்பினர் இ.ஆனோல்டால் சபைக்கு முன்வைக்கப்பட்டிருந்த பிரேரணை, அவர் நேற்றைய அமர்வுக்கு வருகை தராத காரணத்தால் அ.பரஞ்சோதியால் சபையில் பிரேரிக்கப்பட்டது. அந்தப் பிரேரணையிலேயே மீனவர்களின் விடுதலை வலியுறுத்தப்பட்டது.
இந்தப் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றிய வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், மேற்படி மூன்று மீனவர்களது குடும்பங்களும் என்னை வந்து சந்தித்தனர். அவர்களிடம் இதற்கு இரு வழிகள் இருக்கின்றன் என்பதை தெரியப்படுத்தினேன். மேன்முறையீடு செய்வது அல்லது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் பொது மன்னிப்புக் கோரலாம் என்றும் தெரிவித்தேன்.
இதன் பின்னர் இந்திய மீனவர்கள் பொது மன்னிப்பில் விடுவிக்கப்பட்டனர். எனவே எங்களது மீனவர்களும் விடுவிக்கப்பட வேண்டும். இந்த வழக்கில் தற்போது ஜி.பி.எஸ். தொழில் நுட்பத்தின் பிரகாரம் கணித்து, படகுகள் நின்றிருந்த திசையைக் கண்டறிந்துள்ளனர். அது வெவ்வேறு திசையில் இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இத்னை மேன்முறையீட்டிலும் குறிப்பிட்டுள்ளனர். எனவே வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பில் தவறிருக்கலாம் – என்றார்.
இதன் போது கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இதில் அரசியல் பேசாமல் மீனவர்களின் விடுதலை தொடர்பில் மாத்திரம் பேசப்பட வேண்டும். அத்துடன் இவ்வாறான நடவடிக்கை, போதைப் பொருள் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் அமைந்துவிடக் கூடாது என்றும் குறிப்பிட்டார். இந்தப் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (ற–5)

## கையில்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது தேர்தல் பரப்புரைக் கூட்டம் அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
"ஜனாதிபதித் தேர்தலின் பின்னர், தற்போதுள்ள அரசமைப்பில் மாற்றம் ஏற்படுத்த வேண்டுமா, இல்லையா? என்பது தொடர்பில் பொதுமக்களின் கருத்து அறிய பொது வாக்கெடுப்பு நடத்தப்படும். அதன்படி நான் செயற்படுவேன். போர் முடிவுக்கு வந்து விட்டது. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளின் வலையமைப்பு இன்னமும் இருந்து கொண்டிருக்கின்றது. அது செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.
துரோகிகளுக்கு எப்போதும் நாட்டு மக்கள் எதிர்ப்பையே தெரிவிப்பார்கள். பொது எதிரணியினருக்கு நாட்டில் போர் முடிவுக்குக் கொண்டு வரப்படவில்லை என்று கூற முடியுமா? நாட்டில் வீதிகள் அபிவிருத்திகள் செய்யப்படவில்லை என்று கூற முடியுமா? அல்லது நாடு அபிவிருத்திப் பாதையில் செல்லவில்லை என்றாவது கூற முடியுமா? முடியாது."– என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார்.
"ஐக்கிய நாடுகள் சபை போருக்குக் கட்டளையிட்ட தளபதி யார்? என்று விசாரணை செய்ய ஆரம்பித்து விட்டது. முப்படைகளின் தளபதி என்ற வகையில் என்னைக் கவிழ்க்க வேண்டும் என்று சர்வதேசத்தினர் மேற்கொள்ளும் சதியே இது. நாம் இந்த வரவு – செலவுத் திட்டத்தை குளிரூட்டப்பட்ட அறையில் இருந்து தயார் செய்யவில்லை. மாறாக மக்களிடம் வந்து, அவர்களின் பிரச்சினைகளை உணர்ந்தே இதனை தயாரித்தோம். 2005 ஆம் ஆண்டு நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட போது போரை முடிவுக்குக் கொண்டு வருமாறு மக்கள் எனக்கு ஆணையிட்டனர். அதன்படி, ஆட்சிக்கு வந்து 4 வருடங்களுக்கும் குறைவான காலத்தில் 30 வருடகாலமாக நாட்டை அழித்த போரை முடித்தேன்."– என்றும் அவர் அங்கு கூறினார்.
"2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட போது நாட்டை அபிவிருத்திப் பாதையை நோக்காகக் கொண்டு செல்வதாக உறுதியளித்தேன். தற்போது அதுவும் நடந்து கொண்டிருக்கிறது. எமக்கு நாட்டினதும், நாட்டு மக்களதும் எதிர்க் காலமே மிக முக்கியம். அதற்காக எதை வேண்டுமானாலும் செய்யத் தயாராகவே இருக்கிறோம்.
ஆனால், தற்போது ஒரு சில சர்வதேச சக்திகள் இலங்கையை சிரியா, ஈராக், எகிப்து போன்ற நாடுகளைப் போல மாற்ற முயன்று வருகின்றன. இதற்கு அரசாகிய நாம் மட்டுமல்ல, மக்கள் கூட அனுமதியளிக்கப் போவதில்லை என்பதை நான் இங்கு கூறிக் கொள்ள விரும்புகிறேன்" – என்றும் அவர் அங்கு தெரிவித்தார். (ற–5)

## சுன்னாகத்தில்

இந்த நிலையிலேயே மேற்குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.
உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பல பகுதிகளிலும், கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பொக்கணைப் பகுதியை அண்மித்த ஜே/196, ஜே/197, ஜே/267 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் காணப்படும் கிணறுகளின் நீரில் கடந்த இரு ஆண்டுகளாக கழிவு ஒயில் கலந்திருப்பது அறியப்பட்டது.
அந்தப் பகுதிகளில் உள்ள 150 கிணறுகளிலும் பல தடவைகள் மாதிரிகள் எடுக்கப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன்படி 143 கிணறுகளில் கழிவு ஒயில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவற்றில் 109 கிணறுகளில் உள்ள நீரில் மிக உச்ச அளவில் – மனிதபாவனைக்குப் பயன்படுத்த முடியாத அளவு கழிவு ஒயில் கலந்திருப்பதும் அறியப்பட்டது. 7கிணறுகளில் சாதாரண அளவில் கழிவுஒயில் கலந்துள்ளது என்றும் – எனினும் அதுவும் மனித பாவனைக்கு உகந்ததாக இல்லை. 34 கிணறுகளில் கழிவுஒயில் தொற்றியிருக்கவில்லை என்று அந்தப் பரிசோதகைளின் முடிவுகள் கூறின.
சாதாரணமாக தண்ணீரில் 0.2 மில்லிகிராம் எண்ணெய்த்தன்மை காணப்படுகிறது. அது வழமையானதொன்றே. அதனைவிட அதிகரித்தால் அது உடல் நலத்துக்குக் கேடு விளைவிக்கும். சுன்னாகம் பகுதியில் உள்ள குறித்த கிணறுகளில் 0.33 மில்லிக் கிராமிலிருந்து 19.40 மில்லிக்கிராம் வரை கழிவுஒயில் கலந்துள்ளது. இது சாதாரண தண்ணீரில் உள்ளதை விடவும் 97 மடங்கு அதிகமாகும்.
இது தொடர்பில் 'நொதேர்ன் பவர்' நிறுவன நிர்வாக இயக்குநருக்கு 2012 ஆம் ஆண்டு நவம்பர் 7 ஆம் திகதி இலங்கை மின்சார சபை அறிவித்தும் உள்ளது.
அதேவேளை, இந்த விவகாரம் தொடர்பாக நடைபெற்று வரும் வழக்கின் கடந்த தவணையில், கிணறுகளில் ஒயில் கலப்பது தெடர்பில் கடந்த வருடம் ஆய்வு செய்த அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ்.பிராந்திய முகாமையாளருக்கு நீதிமன்று அறிவுறுத்தியிருந்தது. (ற–4)

## இடர் நிவாரண

வடக்கு அரசு பொறுப்பேற்ற பின்னர் இரண்டு இடர்கள் நடைபெற்றிருக்கின்றன. கடந்த வருடம் பயஸ் புயலினால் கடற்கரையோர மக்கள் பாதிக்கப்பட்டார்கள். இவர்களுக்கான உதவிகள்கூட இன்னமும் வழங்கப்படவில்லை. எனவே அடுத்த வரவு – செலவுத் திட்டத்திலாவது இடருக்கு உதவிகள் வழங்கக் கூடிய வகையில் நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று குறிப்பிட்டனர்.
பொது எதிரணி வேட்பாளராகப் போட்டியிடும் மைத்திரிபால சிறிசேன, சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்கும் பொருட்டுத் தனிப்பட்ட வங்கிக் கணக்கை ஆரம்பித்துள்ளார். இதே போன்றே வடக்கு மாகாண முதலமைச்சரும் தனிப்பட்ட வங்கிக் கணக்கை ஆரம்பித்து இடர் நிவாரணத்தை மேற்கொள்ள முடியும் என்று தெரிவித்தனர். (த–5)


## வேலையாள் தேவை

**மானிப்பாயில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள ஸ்தாபனம் ஒன்றுக்கு கணக்குப்பதிவாளர் (கணினி). மேற்பார்வையாளர், விற்பனையாளர், உதவியாளர் தேவை (இருபாலாரும்)**

**தொடர்பு : 076 676 2243**

## கார் விற்பனைக்கு

**Maruthi Suzuki 800cc
4 Gear Manual, Year 2003,
One Owner**

**தொடர்பு : 077 927 7805**

## கோஹ்லியை தாக்கிய பவுன்சர்



ஆஸ்திரேலியா, இந்தியா அணிகளுக்கிடையில் ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் டெஸ்ட் போட்டியில் இந்திய அணித் தலைவர் விராத் கோஹ்லி, தான் எதிர்கொண்ட முதற் பந்துவீச்சில் பவுன்சர் பந்துவீச்சு தாக்குதலுக்கு இலக்கானார். இதனால் ஆஸ்திரேலிய வீரர்கள் பதறியடித்து ஓடி வந்தனர்.

இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையே அடிலெய்டில் நடைபெற்று வரும் முதல் டெஸ்ட்டின் மூன்றாம் நாள் ஆட்டமான நேற்று விராட் கோஹ்லி சந்தித்த முதல் பந்தை மிட்செல் ஜோன்சன் பவுன்சராக வீச, அதை தவிர்க்க முயன்றும் முடியாமல் ஹெல்மெட்டில் அடி வாங்கி அதிர்ச்சி அடைந்தார் விராட் கோஹ்லி.

ஆனால் அடுத்த நொடியே சுற்றியிருந்த ஆஸ்திரேலிய வீரர்கள் அனைவரும் விராட் கோஹ்லி அருகே பதறியடித்து வந்து அவர் நலமாக உள்ளாரா என்று கேட்டறிந்து சென்றனர். பந்து வீசிய ஜோன்சனும் பதற்றமடைந்து கோஹ்லியருகே ஓடி வந்தார். மிட்செல் ஜோன்சனை அணித்தலைவர் மைக்கல் கிளார்க் தட்டிக்கொடுத்து பதற்றமடைய வேண்டாம் என ஆறுதல் தெரிவித்தார்.

சில வாரங்களுக்கு முன் ஆஸ்திரேலிய வீரர் பிலிப் ஹியூக்ஸ், பவுன்சர் பந்து தாக்கியதால் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். அவரது மறைவு ஆஸ்திரேலிய வீரர்கள் அனைவரையுமே உலுக்கியது. இதனால் முதல் டெஸ்ட் போட்டி தள்ளிவைக்கப்பட்டது. இந்த நிலையில் போட்டியின் முதல் பந்தே பவுன்சராக வீசப்பட வேண்டும் என்று பலர் கருத்துத் தெரிவித்தனர். இந்நிலையில் விராட் கோலி சந்தித்த முதல் பந்து பவுன்சர்பந்தாக மாறி ஆஸ்திரேலிய வீரர்களை பதற வைத்துள்ளது.

களத்தில், எதிரணி வீரர்களை எப்படியேனும் தூண்டிவிட்டு, அவர்களை மோசமாக ஆடவைக்கும் முயற்சிக்கு பெயர் போன ஆஸ்திரேலிய அணியின் மனப்பான்மையை, பிலிப் ஹியூக்ஸின் மறைவு கொஞ்சம் கலங்கடிக்க வைத்துள்ளது என்பது நேற்றைய சம்பவத்தில் தெரிந்தது. இடுப்பளவு உயரத்தில் வந்த பந்தை பவுன்சர் என நினைத்து தவறாகக் கணித்தமையே கோஹ்லிக்கு ஹெல்மெட்டில் அடிபடக் காரணமானது. (த–ரி)

# கோஹ்லி சதம் இந்தியா பதிலடி



ஜாம்பவான்களின் தொடர் என்று வர்ணிக்கப்படும் இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் இன்னிங்ஸ் ஆட்டம் தற்போது அடிலெய்ட்டில் நடைபெற்று வருகின்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி ஆஸ்திரேலியாவின் நம்பிக்கை நட்சத்திரங்களான சிமித் (162), வோர்ணர் (145), கிளாக் (128) என சதமடித்து அசத்த ஆஸ்திரேலியா அணி தனது முதல் இன்னிங்ஸில் 7 இலக்குகள் இழப்புக்கு 517 ஓட்டங்களைப் பெற்றிருந்த பொழுது ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக சமி, ஆரோன் மற்றும் கரன் சர்மா ஆகியோர் தலா 2 இலக்குகளையும் இசாந் சர்மா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இந்தியஅணியின் ஆரம்ப வீரரான டவான் (25) ஓட்டங்களுடன் வெளியேறி ஏமாற்றம் கொடுத்தார். இருப்பினும் தொடர்ந்து வந்த புஜாரா விஜயுடன் இணைந்து சிறப்பாக செயற்பட இந்திய அணி படிப்படியாக வலுவான இலக்கை நோக்கி நடைபோட ஆரம்பித்தது. அணியின் ஓட்டம் 111 ஆக இருந்த வேளையில் விஜய் (53) ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்துவந்தகோஹ்லிக்குபக்கபலமாய் நின்று ஓட்டங்கள் குவித்த புஜாரா (73) ஓட்டங்களுடனும் ரஹானே (62) ஓட்டங்களையும் பெற்று வெளியேற ஒரு கட்டத்தில் இந்திய அணி 4 இலக்குகள் இழப்புக்கு 293 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலைக்குச் சென்றது.

தொடர்ந்து நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திய கோஹ்லி சதம் அடித்து (115) ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க நேற்றைய ஆட்ட நேர நிறைவில் இந்திய அணி 5 இலக்குகளை இழந்து 369 ஓட்டங்களைக் குவித்தது. தவானைத் தவிர மற்றைய அனைவரும் சிறப்பாகச் செயற்பட்டு குறைந்த பட்சம் அரைச் சதத்தைப் பதிவு செய்தமை குறிப்பிடத்தக்கது.

பந்து வீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக ஜோன்சன் மற்றும் லியோன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் ஹரீஸ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ஆட்டத்தின் நான்காம் நாள் இன்றாகும். ஆட்டம் இலங்கை நேரப்படி அதிகாலை 5 மணிக்கு ஆரம்பமாகும். (த–ரி)

## தொடர்ச்சிகள்

### கொல்லப்பட்ட

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள் கொழும்பில் இருந்து 'டிரான்போர்ட்' நிறுவனம் ஒன்றின் ஊடாக லொறியில் சீனி மூட்டைகள் உட்பட பல பொருள்களை யாழ்ப் பாணத்துக்கு அனுப்பியிருந்தனர். அந்த லொறியின் சாரதி மற்றும் நடத்துநருடன், பொருள்களுக்குப் பாதுகாப்பாக குறித்த டிரான்ஸ் போர்ட் நிறுவனத்தில் பணியாற்றிய மல்லாவியைச் சேர்ந்த 19 வயதான துஷாந்தனும் வந்திருந்தார். இந்த நிலையில் லொறியுடன் பொருள்களைக் கடத்திய லொறியின் சாரதி, நடத்துநர், குறித்த இளைஞனை வெட்டிக் கொலை செய்து புதைத்தனர் என்று கூறப்படுகின்றது.

சாரதி வழங்கிய தகவல்களின் அடிப்படையில், நேற்று முன்தினம் நொச்சியாகம காட்டுப் பகுதியில் புதைக்கப்பட்டிருந்த உடல் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட உடலில் தலை காணப்படவில்லை. சம்பவ இடத்துக்குச் சென்ற துஷாந்தனின் தாய் உடலை தனது மகனுடையதுதான் என்று அடையாளம் காட்டினார். எனினும் தாயின் இரத்த மாதிரியுடன் ஒப்பிட்டு, டி.என்.ஏ. பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக மீட்கப்பட்ட உடல் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சடலம் மீட்கப்படும்போது உடல் சேதமடைந்திருந்தது. கை மற்றும் கால் தனித்தனியாகக் காணப்பட்டுள்ளன. அதனால் அவர் வெட்டிக் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. காட்டு மிருகங்கள் உடலைச் சேதப்படுத்தியிருக்கக் கூடும் என்றும் கூறப்பட்டது.

டி.என்.ஏ. பரிசோதனைகளின் பின்னர் உடல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று பொலிஸார் கூறியுள்ளனர்.

குறித்த லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில், நடத்துநர் தலைமறைவாகியுள்ளார். அவர் விரைவில் கைது செய்யப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.(ற–4,101)

### ஒரு

அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"நான் எதிரணியில் உள்ளவர்களை அரசின் பக்கம் சேர்க்க பணம் கொடுப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால், பணத்தை வீணாக்க நான் ஒருபோதும் விரும்பியதில்லை. ஐக்கியத் தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரான திஸ்ஸ அத்தநாயக்க, என்னுடன் இணைந்து ஒரு கோப்பைத் தேநீர் மாத்திரமே உட்கொண்டார். அதே போல், தேவையேற்படின் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைக் கூட அரசின் பக்கம் சேர்த்துக்கொள்ள முடியும். அதற்கு எனக்கு தேநீர் ஒரு கோப்பையே போதுமானதாகும்" – என்று அவர் அங்கு கூறியுள்ளார்.(ற–5)

### நெல்சிப்

இயந்திரமாகத் திருத்தியமைப்பதற்கும், இந்த ஊழல் தொடர்பான உண்மைகளை வெளிக் கொண்டுவர வேண்டியது வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சரின் பொறுப்பு.

நெல்சிப் திட்டத்தில் இடம்பெற்ற மோசடி தொடர்பில் உண்மைகளையும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும், வெளிக் கொணரும் வகையில் பொருத்தமான விசாரணைக் குழுவை அமைத்து அதன் அறிக்கையை மாகாண சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்ற பிரேரணை முன் மொழியப்பட்டது.

இதற்குப் பதிலளித்த முதலமைச்சர், குறித்த திட்டம் உள்ளூராட்சி ஊழியர்களினால் மேலதிமாகச் செய்யப்பட்ட ஒன்று. இதற்குரிய கொடுப்பனவுகள் கொழும்பு அரசினாலேயே வழங்கப்பட்டன. அதனடிப்படையில் கொழும்பு அரச அதிகாரிகள் இந்த விசாரணையை ஆரம்பித்துள்ளனர் என்று குறிப்பிட்டார்.

இதன்போது சபையில் வாக்குவாதம் எழுந்தது. மாகாணத்துக்கு உரிய உரித்தை கொழும்பு அரசுக்குவிட்டுக்கொடுக்கத்தேவையில்லை என்று தெரிவிக்கப்பட்டது. மாகாண சபையும் இது தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. இதன்போது அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், மாகாண பொதுக் கணக்குகள் மற்றும் நிதிக் குழு இது தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு மூன்று பேர் கொண்ட குழுவை நியமித்துள்ளதாகக் குறிப்பிட்டார். (த–5)

### ஹெல

ஆளும் கட் சிக்குத் தாவியுள்ளார். அவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காக பாடுபடப் போவதாகவும் அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் தாம் முன்வைத்த கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளபடவில்லை என்று தெரிவித்து ஹெல உறுமய, ஆளும் கட்சியிலிருந்து விலகியது. அதனைத் தொடர்ந்து பொது எதிரணியுடன் உடன்படிக்கையைச் செய்து கொண்டது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பதாகவும் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் நேற்று, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில், ஹெல உறுமயவின் மேல் மாகாண சபை உறுப்பினர் உதய கம்மன்பில கலந்து கொண்டார். ஆளும் கட்சிக்கே தனது ஆதரவை வழங்கப் போவதாகவும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காக பாடுபடப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த திஸ்ஸ அத்தநாயக்கவை, ஆளும் கட்சியில் இணைப்பதில் முக்கிய பங்காற்றிய, நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ், உதய கம்மன்பிலவை அரசுத்தரப்புக்கு கொண்டு செல்வதில் முக்கிய பங்காற்றியுள்ளார் என்று கூறப்படுகிறது.

இதேவேளை–, உதய கம்மன்பில அரசுடன் இணைந்தமை கட்சிக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது என்று, ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.(ற–5)

### கண்காட்சி


பலரினதும் கோரிக்கைக்கு இணங்க நாளை சனிக்கிழமைவரை நீடிக்கப்பட்டுள்ளது என்று அதன் ஒருங்கிணைப்பாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான எஸ்.ரவீந்திரன் தெரிவித்தார்.

குறித்த கண்காட்சி நேற்று ஆரம்பமாகி இன்று வெள்ளிக் கிழமையுடன் நிறைவடையும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (ற–4)

## மும்பாய் இந்தியன்ஸில் பொண்டிங் புதிய அவதாரம்

ஆஸ்திரேலிய முன்னாள் அணித் தலைவர் பொண்டிங், அடுத்த ஆண்டு நடக்கவுள்ள ஐ.பி.எல். தொடரில், மும்பாய் அணியின் தலைமைப் பயிற்சியாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
சில தினங்களுக்கு முன்பு மும்பை அணியின் பயிற்சியாளராக உள்ள ஜோன் ரைட்க்கு பதிலாக பொண்டிங் தலைமைப் பயிற்சியாளராக தெரிவு செய்யப்பட்டலாம் என்று தகவல் வெளியானது.
இந்நிலையில் இதற்கான அதிகாரபூர்வமான அறிவிப்பை மும்பை இந்தியன்ஸ் நேற்று அறிவித்துள்ளது.
2013 ஆம் ஆண்டு ஐ.பி.எல். தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணியில் விளையாடிய பொண்டிங், மும்பாய் கிண்ணம் வெல்லவும் உதவினார். இந்த ஆண்டு போட்டிகளுக்கு துடுப்பாட்ட ஆலோசகராகப் பணியாற்றினார்.
இதைத் தொடர்ந்து தற்போது மும்பாய் அணியின் தலைமைப் பயிற்சியாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (த)





## டில்லியில் ஆடியது சிறப்பான தருணம்

இந்தியன் பிரிமியர் ரென்னிஸ் லீக் போட்டியில் டில்லியில் விளையாடிய அனுபவம் குறித்து சுவிட்ஸர்லாந்து ஜாம்பவான் ரோஜர் பெடரர் தனது டுவிட்டர் பக்கத்தில்:
டில்லியில் விளையாடியது சிறப்பான தருணம். இதை வாழ்வில் ஒருபோதும் மறக்க மாட்டேன். ஆதரவளித்த ரசிகர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி. இந்தியாவில் மகிழ்ச்சியாக பொழுதைக் கழித்தேன்.
துரதிர்ஷ்டவசமாக இந்தியாவில் அதிகமான இடங்களுக்கு செல்ல முடியவில்லை. இந்த அழகான தேசத்துக்கு எனது குடும்பத்தினருடன் மீண்டும் வர விரும்புகிறேன் என்று கூறியுள்ளார். (த)

# சுவிட்ஸர்லாந்து ரென்னிஸ் அணி வரலாற்றுச் சாதனை



டேவிஸ் கிண்ண ரென்னிஸ் அரங்கின் இறுதிப் போட்டியில் சுவிட்ஸர்லாந்து அணி பிரான்ஸ் அணியைத் தோற்கடித்து முதன் முறையாகச் சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.
பிரான்ஸில் உள்ள லில்லி நகரில், ஆண்களுக்கான டேவிஸ் கிண்ண ரென்னிஸ் இறுதிப்போட்டி நடந்தது. இதில் சுவிட்ஸர்லாந்து, பிரான்ஸ் அணிகள் மோதின. ஒற்றையர், இரட்டையர் பிரிவு போட்டிகளின் முடிவில் சுவிட்ஸர்லாந்து அணி இரண்டிலும் 2:1 என முன்னிலை வகித்தது. நேற்று மாற்று ஒற்றையர் பிரிவு போட்டிகள் நடந்தன.
இதன் முதல் போட்டியில் சுவிட்ஸர்லாந்தின் ரோஜர் பெடரர், பிரான்ஸின் ரிச்சர்ட் காஸ்குயட் மோதினர். அபாரமாக ஆடிய பெடரர், ஒரு மணி நேரம், 52 நிமிடங்கள் வரை நீடித்த போட்டியின் முடிவில் 6:4, 6:2, 6:2 என்ற புள்ளியின் அடிப்படையில் வெற்றி பெற்றார். பெடரர் வெற்றி பெற்றதால், பிரான்ஸின் மோன்பில்ஸ், சுவிட்ஸர்லாந்தின் வாவ்ரின்கா மோத இருந்த இரண்டாவது மாற்று ஒற்றையர் போட்டியை நடத்த வேண்டிய அவசியம் இல்லாமற் போனது.
இதன் மூலம் சுவிட்ஸர்லாந்து அணி 3:1 என்ற கணக்கில் வெற்றி பெற்று, டேவிஸ் கிண்ண வரலாற்றில் முதன்முறையாகச் சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது.
முன்னதாக கடந்த 1992 இல் இறுதிவரை முன்னேறிய சுவிட்ஸர்லாந்து அணி, அமெரிக்காவிடம் தோல்வி அடைந்தது. இந்த வருடம் கிண்ணத்தைக் கைப்பற்றியதால் டேவிஸ் கிண்ணத்தை வென்ற 14ஆவது அணி என்ற பெருமை பெற்றது. அதிக முறை டேவிஸ் கிண்ணத்தை வென்ற அணிகள் வரிசையில் அமெரிக்கா (32 முறை), ஆஸ்திரேலியா (28), பிரிட்டன் (9) அணிகள் முதல் மூன்று இடங்களில் உள்ளன. (த–ரி)

## பொண்டிங்குக்கு சவாலாக கிளார்க்

அபாரமாக ஆடிய ஆஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க், டெஸ்ட் அரங்கில் இந்தியாவுக்கு எதிராக 2000 ஓட்டங்களைக் கடந்த 5ஆவது வீரர் என்ற பெருமை பெற்றார்.
இவர், இந்தியாவுக்கு எதிராக 22 டெஸ்டில் 2042 ரன்கள் (7 சதம், 6 அரைச்சதம்) எடுத்துள்ளார். முதல் நான்கு இடங்களில் ஆஸ்திரேலியாவின் பொண்டிங் (2555 ஓட்டங்கள்), மேற்கிந்தியத் தீவுகளின் லாய்டு (2344 ஓட்டங்கள்), பாகிஸ்தானின் மியான்தத் (2228ஓட்டங்கள்), மேற்கிந்தியத் தீவுகளின் சந்தர்போல் (2171 ஓட்டங்கள்) ஆகியோர் உள்ளனர்.
அடிலெய்ட் டெஸ்ட்டின் முதல் இன்னிங்ஸில் ஆஸ்திரேலியாவின் வோர்னர், ஸ்மித், கிளார்க் ஆகியோர் சதம் அடித்தனர். இதன்மூலம் டெஸ்ட் அரங்கில் இந்தியாவுக்கு எதிராக ஒரே இன்னிங்ஸில் மூன்று ஆஸ்திரேலிய வீரர்கள் சதம் அடித்தது 6 ஆவது முறையாகப் பதிவு செய்யப்பட்டது. இதில் அடி லெய்டில் மட்டும் மூன்று முறை இந்தச் சாதனை படைக்கப்பட்டது.(த–ரி)

## கரண் சர்மா உற்சாகம்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்டில் சுழற்பந்து வீச்சாளர் கரண் சர்மா அறிமுக வீரராக களமிறங்கினார். இதை இந்திய அணி முன்னாள் தலைவர் கவாஸ்கர், ஆஸ்திரேலிய அணி முன்னாள் சுழல் வீரர் ஸ்டீவர்ட் மெக்கில் உள்ளிட்டோர் வரவேற்று உள்ளனர்.
இது குறித்து கரண் சர்மா கூறுகையில், ஆஸ்திரேலிய தொடரில் ஏதாவது ஒரு போட்டியில் களம் இறங்குவேன் என தெரியும். நேற்றைய போட்டியிலேயே அறிமுகம் ஆனது மகிழ்ச்சி. கப்டன் விராட் கோஹ்லி, இயக்குநர் ரவி சாஸ்திரி ஆதரவு தந்தனர். இது எனது நம்பிக்கையை அதிகரித்தது–என்றார்.
சுமார் 24 ஆண்டுகளுக்குப் பின், இந்திய துணைக் கண்டம் அல்லாமல் அன்னிய மண்ணில் அறிமுகமாகும் முதல் இந்திய சுழற்பந்து வீச்சாளர் என்ற பெருமை பெற்றார் கரண் சர்மா. முன்னதாக 1990 இல் மன்செஸ்டரில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்டில் கும்ளே அறிமுகமானார். (த)

# பாகிஸ்தான் பந்து வீச்சாளர்கள் பரிசோதனைக்காக சென்னைக்கு



சர்வதேச கிரிக்கெட் சபையால் தடை விதிக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர்கள் சயீத் அஜ்மல், முகமது ஹபீஸ் ஆகியோரைச் சென்னைக்கு அனுப்ப பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது.
அவர்களது பந்து வீச்சு முறையை பயோமெக்கானிக் முறையில் பரிசோதனை நடத்துவதற்காகச் சென்னைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர். அந்த இருவருக்கும் விதிக்கப்பட்ட தடையை அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டிக்கு முன்பு நீக்கவேண்டும் என்ற நோக்கில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை செயற்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக அவர்கள் சென்னை வருகின்றனர். ஐ.சி.சியால் அங்கீகாரம் பெற்ற பயோமெக்கானிக் பரிசோதனைக் கூடம் சென்னையில் உள்ளதால் அவர்கள் அங்கு அனுப்பிவைக்கப்படுகிறார்கள்.
இந்திய நுழைவு விசைவு கிடைத்தவுடன் அவர்கள் புறப்படுவார்கள் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் சகாரியார் கான் கூறியுள்ளார். சர்ச்சையில் சிக்கிய இலங்கைப் பந்துவீச்சாளர் சச்சித்திர சேனநாயக்க, நியூஸிலாந்தின் வில்லியம்சன் ஆகியோர் மீண்டும் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் பந்து வீச ஐ.சி.சி. சமீபத்தில் அனுமதி வழங்கியது. இதையடுத்து தங்கள் நாட்டு வீரர்களுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கும் முயற்சியில் பாகிஸ்தான் இறங்கியுள்ளது. (த–ரி)

# பழிதீர்த்தது இங்கிலாந்து

இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 7 ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் ஐந்தாவது ஆட்டம் நேற்றுமுன்தினம் பல்லேகல மைதானத்தில் ஆரம்பித்து நேற்றையதினம் நிறைவுக்கு வந்தது.

முதல் நான்கு ஆட்டங்களும் நிறைவடைந்துள்ள நிலையில் இலங்கை அணி மூன்று ஆட்டங்களிலும் இங்கிலாந்து அணி ஒரு ஆட்டத்திலும் வெற்றி பெற்றுள்ளன.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் இலங்கையை துடுப்பெடுத்து ஆடுமாறு பணித்தது. இதன்படி அணியின் ஓட்டம் 3 ஆக இருந்த வேளையில் இலங்கையின் முதல் இலக்கு வீழ்த்தப்பட்டது. தொடர்ந்து வந்த சங்கா, டில்சானுடன் இணைந்து ஓட்டங்களைச் சேர்த்து இணைப்பாட்டமாக (51) ஓட்டங்கள் பெற்றிருந்த பொழுது டில்சான் (35) ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்து வந்த மஹேல (2) ஓட்டங்களுடன் வந்த வேகத்தில் வெளியேற 11 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் இலங்கையணி 3 இலக்குகளை இழந்து (59) ஓட்டங்களை மட்டுமே பெற்று தள்ளாடியது. சங்காவுடன் ஜோடி சேர்ந்த மத்தியூஸ் நிதானத்தை கையிலெடுத்து இணைப்பாட்டமாக (85) ஓட்டங்களைப் பகிர்ந்த வேளையில் மத்தியூஸ்(40) ஓட்டங்களுடன்வெளியேறினார். தொடர்ந்துவந்தஜீவன் மென்டிஸ் (12), ஓட்டங்களையும் பெற்றனர். 49 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 239 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதிகபட்சமாக சங்கக்கார 91 ஓட்டங்களையும் மத்தியூஸ் 40 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் இங்கிலாந்து சார்பாக வோக்ஸ் 6 இலக்குகளையும் யோர்டான் 2 இலக்குகளையும் பின் மற்றும் ரேட்வெல் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இங்கிலாந்தின் துடுப்பாட்டத்தில் மழை தொடர்ந்து குறுக்கிட்டதன் காரணத்தினால் ஆட்டம் நேற்றைய தினத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டது. இதன்படி 240 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனும் இலகுவான இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகள் இழப்புக்கு 35 ஓட்டங்களைப்பெற்றுஇருப்பினும்தொடர்ந்து வந்த ரூட் ரெய்லருடன் இணைந்து இணைப்பாட்டமாக 104 ஓட்டங்களைப் பகிர இங்கிலாந்து வலுவான நிலைக் குச் சென்றது. அணியின் ஓட்டம் 139 ஆக இருந்த வேளையில் ரெய்லர் 68 ஓட்டங்களுடன் வெளியேறினார். இருந்த போதிலும் தனித்து நின்று போராடிய றூட் சதமடித்து அசத்த இங்கிலாந்து அணி 49.1 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 240 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. அதிகபட்சமாக ரூட் இறுதிவரை ஆட்டமிழக்காது (104) ஓட்டங் களைப் பெற்றார்.

பந்து வீச்சில் இலங்கை சார்பாக சேனநாயக்கா 2 இலக்குகளையும் மென்டிஸ், பெரேரா, டில் சான் ஆகியோர் தலா ஓர் இலக்கினையும் கைப்பற்றினர்.

ஆட்ட நாயகனாக ரூட் தெரிவானார். 7 ஆட்டங்களைக் கொண்ட தொடரில் இலங்கையணி 3:2 என்ற அடிப்படையில் முன்னிலையில் உள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான ஆறாவது ஆட்டம் நாளை பல்லேகலயில் இடம்பெறுகின்றது. (த–ரி)






எம் பலம் நீங்களே

“இந்த மாநாட்டினை நடாத்துவது இலங்கையின் வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்வாகும். மேலும் ஆசியாவிற்கு வழங்கும் மரியாதையாகும். பொதுநலவாயம் இந்த பிராந்தியத்திற்கு 24 ஆண்டுகளுக்குப் பின்னர் திரும்பியுள்ளது. நவீன பொதுநலவாயத்தின் முக்கிய ஸ்தாபக அங்கத்துவ நாடுகளுள் ஒன்றான இலங்கை, இந்த நிகழ்வினை நடாத்துவதில் மிகவும் பெருமையடைகின்றது.”






கிராமசேவகர்களின் வினைத்திறன் காண் நடைப்பரீட்சைக்கான விசேடவகுப்புகள்

ஒவ்வொரு சனிக்கிழமையும் பி.ப 1.00 மணிக்கு
ஆரம்பம் : 13/12(சனி)

T.P : 0754164564

யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொமர்சல் வங்கியருகில்)



அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச்சங்கம் (வ/து)
வட்டுக்கோட்டை

தொடக்கம் 1957 பதிவு இல :S - 154

**விசேட அறிவித்தல்**

1. மேற்படி சங்கத்தின் அங்கத்தவர்கள் தமது அங்கத்துவத்தை உறுதிப்படுத்துவதற்குரிய வைப்புப்புத்தகம், தேசியஅடையாள அட்டை,பற்றுச்சீட்டுகள் போன்ற சான்றாதாரங்களுடன் அவரவர் பணங்களை நேரில்வந்து விசேட வட்டியுடன் மீளப்பெறலாம்.

முன்பே கட்டுப்பணங்களைப் பெற்றவர்களின் சான்றாதாரங்கள் எம்மிடம் கையளிக்கப்பட்டுள்ளன. அவர்களும் வட்டிப்பணத்தை மேலதிகமாகப் பெறலாம்.

அவ்வாறே இதுவரை பணம் பெறாத நிலையான வைப்பில், சேமிப்பில், மாதவட்டியில் பணம் வைப்பிலிட்ட அனைத்து அங்கத்தவர்களும் சித்தன்கேணியிலுள்ள வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு எதிர்ப்புறமுள்ள எமது தற்காலிக அலுவலகத்திற்கு நேரில்வந்து காலை 9.00மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

2. அடகு நகைகள் இன்று வரை மீளாதவர்களுக்கு ஐந்து வருடங்கள் கழிந்த நிலையிலும் வட்டிக்கழிவுடன் மீளளிக்கின்றோம்.

இந்த வாய்ப்பைத் தவறவிடாது 31.12.2014ஆம் திகதிக்குள் அனைத்து நகைகளையும் மீளப்பெறவும். தவறின்குறித்த நகைகள் விற்கப்படும்.

3. இதுவரை பெற்ற கடனை மீளளிக்காதவர்கள் எவ்விதமான மேலதிக நடவடிக்கைகளுக்கும் இடமளியாது கண்ணியமாக மீளளிக்கும்படியும், இதற்கான வட்டிகள் நீக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவிக்கின்றோம்.

இ. ஆனந்தராசா
நிர்வாக செயலாளர்.

தொடர்பு : 077 149 5631





இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.